
June 2023

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

14 YEARS ANNIVERSARY




VARSHA™
IDLI/DOSA BATTER
Let's eat the Best!
VARSHA
Ready to Cook
Idli / Dosa Wet Mix
CRISPY DOSA • SOFT & FLUFFY IDLI
1Kg
Traditional taste that Lingers

# தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு

**June 2023**

சுவடி — 13
ஓலை — 4


## வணக்கம் பல

**வா**ழ்க்கையில் பரபரப்பு இருக்கலாம்! ஆனால் வாழ்க்கையே பரபரப்பாகி விடக் கூடாது! அப்படியொரு காலகட்டத்தில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோமா எனும் எண்ணம் தற்போது பலருக்கும் அவ்வப்போது தலைகாட்டாமல் இருப்பதில்லை! வளர்ந்து வரும் வேகமான விஞ்ஞான வளர்ச்சியாலும், நவீன தொழில்நுட்ப வரவுகளாலும், உலகமே உள்ளங்கைக்குள் வந்து நிற்பதாலும், உலகின் போக்கு கடந்த தசாப்தங்களை விடவும் தற்போது வியக்கத்தக்க அளவில் இருந்து வருகிறது. இன்னும் இரண்டு தசாப்தங்களில் இதன் வேகம் எண்ணிப் பார்க்கவியலா அசுரப் பாய்ச்சலாகவும் இருக்கும்.


ஒருபுறம் உலகை அச்சுறுத்தும் புவிவெப்பமாதலும், இயற்கை அரண்கள் உடையும் அபாயமும் என்றால், மறுபுறம் விஞ்ஞானத்தின் அதிவேகப் பாய்ச்சல் உலகை மிரட்டி வருகிறது. மாற்றம் ஒன்றே மாறாதது என்று சொல்லியே பழக்கப்பட்டு விட்ட மனித குலம், இந்த மாற்றங்களுக்கும் தம்மைத் தயார்படுத்திக் கொள்ளும் என்றாலும், இச்சிக்கல்களுக்கு விடை காண முயல வேண்டும்! வாழ்க்கையை அதன் போக்கில் வாழ்வதென்று ஒரு சாராரும், வாழ்க்கையைத் தாம் விரும்பியவண்ணம் அமைக்க வேண்டும் என ஒரு சாராரும் நினைக்கலாம்! அதன்படியும் நடக்கலாம். ஆனால் அனைவருக்குமான சில பொது நியதிகளும் விதிகளும் உண்டு! அதன்வழி நடப்போமானால் வாழ்தலும், வாழ்தல் நிமித்தமும் ரசனைக்குரிய ஒன்றாக இல்லாவிடினும், வாழ்வை நொந்து கொள்ளக் கூடிய நிலை இல்லாமலாவது இருக்கும்.

கலையும், இலக்கியமும், விளையாட்டும் மனிதகுலம் தன்னைத் தானே புதிப்பித்துக் கொள்ள கண்டுபிடித்த அதிசயங்கள் என்று சொன்னால் மிகையல்ல, இந்நேரத்தில் இந்திய விளையாட்டுத் திருவிழாவாக பரிமளித்து வருகின்ற இந்தியத் துடுப்பாட்டத் தொடரின் கோப்பையை வென்ற தமிழ் நாட்டுக்கு அணிக்கு வாழ்த்துக்கள் கூறிக் கொள்வதில் தமிழர்கள் தனி ஆனந்தம் அடைகிறார்கள்! வாழ்வை எப்படி வசப்படுத்துவது என்றதொரு தேடல் நெடுங்காலமாகவே மனிதகுலம் ஆராய்ந்து வரும் தேடல்தான்! எனவே இவ்விதழில் அது குறித்த நல்ல பல ஆக்கங்களுடனும் கதை, கலை, கவிதை என கலந்து கட்டிய கதம்ப மலராக மலர்கின்ற இம்மாத 'அய் தமிழ்' இதழை வழமைபோல வரவேற்று வாசியுங்கள்... நேசியுங்கள்...

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு

## உள்ளே...




கடன்பட்டார் நெஞ்சம்
உலக மாநாடு
தமிழே தமிழே
விதைத்ததே விளையும்!
சேரமான் கனவு
தல வரலாறு
அறிவோம் தமிழர் பெருமை
சிவகாமியின் சபதம்
யோகா யோகம்!
மருத்துவ தமிழ்
தேவையற்ற ஆசைகள்



**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar

**Art Editor**
Sriram

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
*editor@ithamil.com*


*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது



# கடன்பட்டார்

**க**டனாளி அமெரிக்க அரசு: உருவாகியிருக்கிறது ஒரு நிதிசார் புயல்...

**இ**லங்கை மற்றும் பாகிஸ்தானில் வரலாறு காணாத பொருளாதார பிரச்சினை ஏற்பட்டிருப்பது நாம் அறிந்ததே. இப்போது உலகின் மிகப்பெரும் பொருளாதார நாடான, அமெரிக்காவில் ஏற்பட்டிருக்கும், 'மேலும் கடன் வாங்கமுடியா நெருக்கடி'தான் உலகின் பேசுபொருளாக உள்ளது. மட்டுமில்லாமல், அது நிதிசார் உலகில் பெரும் கலக்கத்தையும் உருவாக்கி இருக்கிறது. இதை 'அமெரிக்கன் டெட் சீலிங் கிரைசிஸ்' என்கிறார்கள்.

கரோனா ஊரடங்குகளால் ஏற்பட்ட பொருளாதார சுணக்கத்தை சரி செய்ய அமெரிக்க அரசு 900 பில்லியன் டாலர் செலவு செய்தது. இதனால் ஏற்பட்ட பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த பெடரல் ரிசர்வ் குறுகிய காலத்தில் மிக அதிக அளவில் வட்டியை உயர்த்தியது. இதனால் ஏற்பட்ட விளைவுகளில் ஒன்றான 'சில வங்கிகள் திவால்' என அமெரிக்கா சந்தித்துக்கொண்டிருக்கும் பொருளாதார சிக்கல்களின் வரிசையில் அடுத்ததாக வந்திருப்பதுதான் 'டெட் சீலிங் கிரைசிஸ்'.

அமெரிக்க கருவூலத்தின் செயலர், ஜேனட் எல். எல்லென். அவர்தான் அரசின் வரவு செலவுக்கான நிதியை நிர்வகிப்பவர். அவர் இந்த 'டெட் சீலிங் கிரைசிஸ்' சூழலை பேரழிவு என்கிறார். காரணம், இதனால் வரும் ஜூன் 1 முதல் அமெரிக்க அரசு அது செய்தாக வேண்டிய செலவுகளுக்குக் கூட நிதி இல்லாத நிலை உருவாகியிருக்கிறது என்கிறார்.




ஊதியம் கொடுக்க முடியாது: அப்படி ஒரு நிதி இல்லா நிலை வந்தால், அரசு ஊழியர்களுக்கு, ராணுவத்தினருக்கு ஊதியம், ஓய்வூதியம், கடன்களுக்கான வட்டி, மருத்துவம், நலத்திட்டங்கள் மற்றும் அரசின் பிற திட்டங்களுக்கான நிதி,




டேக்ஸ் ரீபண்ட் என பலவற்றையும் கொடுக்க முடியாமல் போகும்.

இது சாதாரண சிக்கல் இல்லை. மாபெரும் சிக்கல். கடன் பத்திர சந்தை, பங்குச்சந்தை, வங்கிகள் என பல்வேறு பொருளாதார சந்தைகளிலும் சூறாவளி வீசும். 2008—ம் ஆண்டு நடந்தது போல கூட ஆகலாம். அதனால்தான் அமெரிக்க கருவூலத்தின் செயலர் எல்லென் இதை நிதிசார்பேரழிவு என்று குறிப்பிட்டு அஞ்சுகிறார்.

31.5 டிரில்லியன் டாலர் கடன்: எவ்வளவு பெரிய பணக்காரராக இருந்தாலும் அவருக்கு என்ன கடன் இருக்கிறது என்று பார்க்க வேண்டுமல்லவா? அமெரிக்க அரசுக்கு இருக்கும் மொத்தக் கடன் பிப்ரவரி 2023 நிலவரப்படி, 31.5 டிரில்லியன் டாலர். நாட்டின் ஓராண்டு ஜிடிபியைக் காட்டிலும் 20 சதவீதத்துக்கும் அதிகம். அமெரிக்க அரசுக்கும் வருமானம் போதவில்லை.

செலவுக்கு பணம் வேண்டும். கடன் வாங்குவதுதான் வழி. அதை ஒவ்வொரு வருடமும் செய்துதான் மொத்தக் கடனளவு இவ்வளவு பெருகிவிட்டது. அதனால் என்ன! வழக்கம் போல் புதிய கடன்கள் வாங்கி விட்டுப் போகவேண்டியதுதானே என்று கேட்கலாம். அமெரிக்க அதிபர் ஜோ பைடனும், டிரஷரி செயலர் எலெனும் அதைத்தான் செய்ய நினைக்கிறார்கள். ஆனால், அது முடியாத நிலை




அமெரிக்கா உலகின் மிகப்பெரிய பொருளாதார நாடு. அதன் ஆண்டு உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) மதிப்பு 26.85 டிரில்லியன் டாலர். இந்தியாவின் ஜிடிபி 3.38 டிரில்லியன் டாலர். இப்படிப்பட்ட அமெரிக்காவுக்கு, அதன் ஊழியர்களுக்கு சம்பளம் கூட கொடுக்க முடியாத அளவு என்ன நிதிநெருக்கடி வரமுடியும் என்று ஆச்சரியப்படலாம்.

உருவாகிவிட்டது.

அந்த நிலை உருவாக காரணம், அரசு எவ்வளவு கடன் வாங்கலாம் என்று ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டிருந்த அளவான 31.38 டிரில்லியன்

வைத்துக்கொள்ள வேண்டும். அடுத்தடுத்த ஆண்டுகளில் 1 % மட்டுமே செலவுகளைக் கூட்டலாம். இதை குடியரசுக் கட்சியினர், ‘கடன் உச்சவரம்புச் சுருக்கம்’ என்கிறார்கள்.




டாலர்அளவை கடந்த 2023, ஜனவரி மாதம் 19—ம் தேதியே அமெரிக்கா நெருங்கியாயிற்று. அதன்பின் அரசு செய்ய திட்டமிட்டிருந்த சில முதலீடுகளைத் தள்ளிவைத்து நிலைமையை சமாளித்து வருவதாகக் கூறப்படுகிறது. இப்படிப்பட்ட சமாளிப்புகள் எல்லாம் மே மாதம் வரை சாத்தியம் என்றும் ஜூன் 1 முதல் கருவூலத்தில் சுத்தமாக பணம் இருக்காது என்றும், அதனால் கொடுக்க வேண்டிய எல்லாச் செலவுகளும் தடைப்படும் என்ற நிலை உருவாகியிருக்கிறது.

நாடாளுமன்ற ஒப்புதல்: நிலைமையை சமாளிக்க கடன்தான் வழி. அதற்கு அமெரிக்க நாடாளுமன்றத்தின் புதிய ஒப்புதல் வேண்டும். ஒப்புதல் பெற எதிர்க்கட்சியான குடியரசுக் கட்சி உறுப்பினர்களின் ஆதரவு வாக்கு வேண்டும். எதிர்க்கட்சியினர் அதிபர் ஜோ பைடனை எளிதாக இந்த சிக்கலில் இருந்து காப்பாற்றுவார்கள் என்று தோன்றவில்லை. 2024 மார்ச் மாதம் வரையிலான காலத்திற்கு மற்றுமொரு 1.5 டிரில்லியன் டாலர் கடன் வாங்க அனுமதி கேட்கிறார் பைடன்.

அதற்கு ஒப்புக்கொள்ள வேண்டுமென்றால், அடுத்த நிதி ஆண்டில் (2023 அக்டோபர் 1 முதல் 2024 செப்டம்பர் 30 வரை) அரசு அதன் செலவுகளை 2022—ம் ஆண்டு அளவிலேயே

இதற்கு பைடன் ஒப்புக்கொண்டால் அவரது அரசால் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கும் கல்விக்கடன் தள்ளுபடி மற்றும் மின்சார வாகனங்களுக்கான சலுகைகள் போன்ற பலவற்றை செய்ய இயலாது. பைடன் இந்த நிபந்தனைகளுக்கு இதுவரை ஒப்புக்கொள்ளவில்லை. விஷயம் இழுபறியில் இருக்கிறது. நாட்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன.

முதல்முறை அல்ல: இதுபோன்ற ‘கடன் வாங்கமுடியா நெருக்கடி’, ‘டெட் சீலிங் கிரைசிஸ்’ நிலை அமெரிக்காவில் வருவது இதுதான் முதல் முறையா என்றால், இல்லை. 1960—க்குப் பின் அடிக்கடி அதிலும் குறிப்பாக 1995, 2011 மற்றும் 2013 ஆண்டுகளில் வந்திருக்கிறது.

ஒவ்வொரு முறையும் அமெரிக்க நாடாளுமன்றத்தில் புதிய ஒப்புதல் பெற்று, வாங்கக்கூடிய கடன் அளவை உயர்த்திக்கொண்டே வந்திருக்கிறார்கள். பைடனுக்கு முன்பு, குடியரசுக் கட்சியின் டொனால்டு ட்ரம்ப் அதிபராக இருந்தபோதும் அப்போது இருந்த கடன் உச்சவரம்பை ஒன்றல்ல, மூன்று முறை உயர்த்தவேண்டிய நிலை வந்தது. காரணம், ட்ரம்ப் கொடுத்த வருமான வரிச் சலுகைகள்.

அப்போதைய எதிர்க்கட்சியான ஜனநாயகக்

கட்சியினர் காங்கிரஸில் அதற்கு வாக்களித்து உதவினார்கள். ஆனால், இப்போது அவர்களே எதிர்க்கட்சியினரானதும், வரம்பை உயர்த்த நிபந்தனைகளை விதிக்கிறார்கள். இழுபறி தொடர்ந்து, நிலை கைமீறிப் போவது இரண்டு கட்சிகளுக்குமே கெட்ட பெயரைத்தான் பெற்றுக்கொடுக்கும். அந்த பயம் இரண்டு கட்சியினரிடமும் இருக்கிறது. காரணம், அடுத்த ஆண்டு வரும் அதிபர் தேர்தல். ஒருவேளை, ஓய்வூதியம் ஆகியவற்றில் வேண்டுமானால் தாமதம் செய்ய வாய்ப்பிருக்கிறது; அரசு புதிதாக ஒரு டிரில்லியன் மதிப்பிலான நாணயத்தை அச்சடித்து நிலைமையை சமாளிக்கலாம்; ஐந்து குடியரசுக் கட்சி உறுப்பினர்கள் மாற்றி வாக்களித்தால் போதும், ஒப்புதல் சட்டம் நிறைவேறிவிடும் என்பது போன்ற ஊகங்களும் இருக்கின்றன.

எல்லாம் ஜூன் 1—க்குள் தெரிந்துவிடும்.




ஜூன் 1—க்குள் 'டெட் சீலிங் கிரைசிஸ்' சிக்கல் தீராவிட்டால் என்ன ஆகும் என்பதை பலரும் யூகிக்கிறார்கள்.

என்ன நடக்கும்.. கட்டிடத்தின் முக்கிய பகுதியில் பெரும் சத்தத்துடன் விரிசல் விழுந்தால், அங்கு இருப்பவர்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ள எப்படி, எங்கே ஓடுகிறோம் என்று தெரியாமல் நாலு பக்கமும் ஓடுவார்கள். இதுபோலத்தான், அது நிகழ்ந்தால், பலவற்றிலும் முதலீடு செய்திருக்கும் பெரு முதலாளிகள் அவர்கள் செல்வத்தைப் பாதுகாத்துக்கொள்ள, உடனடியாக விற்பார்கள், வாங்குவார்கள்.

அதனால், பங்குகள் மற்றும் கடன் பத்திரங்கள் விலை கடுமையாக சரியும், தங்கத்தின் விலை உயரலாம். வீடு, வாகன மற்றும் பிறகடன்களுக்கான வட்டி விகிதங்கள் அதிகரிக்கும். பொருளாதாரம் பாதிக்கப்படும், லட்சக்கணக்கானவர்களுக்கு வேலை போகும். இன்னும் பலவும் நடக்கும்.

கடனுக்கான வட்டியை கொடுத்துவிட்டு ஊதியம், எதிர்க்கட்சியினருடன் பேச்சுவார்த்தை நடத்தி கடன் வரம்பை உயர்த்த, ஜப்பானில் நடைபெறும் ஜி 7 மாநாடு முடிந்தவுடன் ஜோ பைடன் ஆஸ்திரேலியா மற்றும் பிறநாட்டுகளுக்கு செல்லவிருந்த பயணத்தை ரத்து செய்துவிட்டு அமெரிக்க திரும்புகிறார் எப்படியோ, கடைசி நேரத்தில் கடன் வரம்பு உயர்த்தப்பட்டு, நிலைமை சமாளிக்கப்பட்டாலும், இப்படி ஒரு நிலை வந்ததால் வேறு விளைவுகள் இல்லாமல் போகாது.

அமெரிக்க டிரஷரி பில் என்றால், பாதுகாப்பானது என்ற பெயர் கெட்டு, அதன் ரேட்டிங் குறையும். இதனால், அவர்கள் வாங்கும் கடனுக்கு கூடுதல் வட்டி கொடுக்கவேண்டி வரும். வருமானத்தைக் காட்டிலும் மிக அதிகமாக செலவழிக்கும் அரசு, கடனுக்கு மேல் கடன் வாங்கும் அரசு, அது எவ்வளவு பெரியவலுவான நாடாக இருந்தாலும் பிரச்சினைதான். சொல்லப்போனால் அமெரிக்க அரசின் பொருளாதார சிக்கல், உலக பொருளாதாரத்துக்கே தலைவலிதான்.

*கடன் உச்சவரம்பை உயர்த்தாவிட்டால் என்ன நடக்கும்?*

ஒரு வேளை அமெரிக்க அரசால் கடன் உச்சவரம்பை உயர்த்த முடியாமல் போய்விட்டால் என்ன நடக்கும் என்று உலகம் முழுவதும் நிதிச் சந்தையில் கலக்கம் நிலவுகிறது. அதுகுறித்த கேள்விக்குப் பதிலளித்த சோம. வள்ளியப்பன், “2011—ம் ஆண்டைப் போல குடியரசுக் கட்சியுடன் கடைசி நேரத்தில் உடன்பாட்டை எட்டப்படலாம் அல்லது மாற்று உபாயங்கள் கையாளப்படலாம்.



ஆனால், அமெரிக்க அரசு செலவினங்களுக்கு நிதி ஒதுக்க முடியாத நிலைக்கு தள்ளப்படுவதை தவிர்த்துவிடும்.

குடியரசுக் கட்சியுடன் உடன்பாடு எட்ட முடியாத நிலை ஏற்பட்டால், அமெரிக்க அரசு முன்னுரிமை அடிப்படையில் செலவுகளை செய்யலாம். அதன்படி, கடன் பத்திரங்களுக்கான வட்டி கண்டிப்பாக செலுத்தப்பட்டுவிடும். ஏனெனில், அது அமெரிக்க அரசின், அதன் நாணயமான டாலரின் நம்பகத்தன்மை தொடர்பானது. ஊழியர்களின் ஊதியங்கள் சற்று தள்ளிப் போகலாம். அத்தியாவசியம் அல்லாத செலவுகளாக கருதும் செலவுகளை அமெரிக்க அரசு ஆறப் போடலாம்.

எது நடந்தாலும் அது தற்காலிகமானதுதான். அமெரிக்கா விரைந்து மீண்டுவிடும். ஆனால் அதற்குள் பங்குச்சந்தைகள் வீழலாம். ஸ்டாண்டர்ட் அன்ட் புவர்ஸ் கடன் தர மதிப்பீட்டு நிறுவனம் அமெரிக்காவின் மதிப்பீட்டைக் குறைக்கலாம். டாலர் மதிப்பிலும் மாற்றம் வரலாம். அமெரிக்காவுக்கு நெருக்கடி வரும் போதெல்லாம் அமெரிக்க டாலரின் ரிசர்வ் கரன்சி அந்தஸ்துக்கு குந்தகம் நேருமோ என்ற விவாதம் எழுவது வாடிக்கையான ஒன்று. தற்போதைய நெருக்கடியால் உலகின் சேமிப்பு நாணயம் என்ற டாலரின் அந்தஸ்துக்கு எந்த பங்கமும் வராது. சர்வதேச நிதிச் சந்தையில் டாலரே தொடர்ந்து கோலோச்சும். கடந்த 15 ஆண்டுகளாகவே டாலருக்கு மாற்று குறித்து பல யோசனைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஆனால், எதுவுமே நடைமுறைக்கு வரவில்லை. அதனை அமெரிக்கா அனுமதிக்கவும் செய்யாது. ஐரோப்பிய நாடுகள் அமெரிக்காவின் பின்னே தான் அணிவகுக்கும்.

அமெரிக்கத் தடைகளைத் தாக்குப்பிடிப்பதுடன் யுக்ரேன் போரை ரஷ்யா தொடர்வதும், சீனாவின் வல்லரசுக் கனவும் சர்வதேச அரசியலில் மாற்றங்களை ஏற்படுத்தி இருக்கும் இந்த சூழலில் அமெரிக்காவுக்கு ஏற்பட்டுள்ள கடன் உச்சவரம்பு நெருக்கடி கவனிக்கத்தக்கது. ஆனாலும் கூட, டாலர் வீழ்ச்சியடைவதை சீனா உள்பட பெரும்பாலான நாடுகள் விரும்பாது. முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு நாடுகளின் எல்லை கடந்த முதலீடுகளும் பொருளாதார ஒத்துழைப்புமே அதற்குக் காரணம். அமெரிக்க கடன் பத்திரங்களில் அதிகம் முதலீடு செய்துள்ள நாடுகளில் முதலாவது இடத்தில் இருக்கும் சீனாவும், அமெரிக்க டாலர் மதிப்பிழப்பதை விரும்பாது. ஏனெனில், டாலரின் மதிப்பு குறைவது, அமெரிக்க அரசின் கடன் பத்திரங்களில் சீனா செய்துள்ள முதலீட்டின் மதிப்பையும் குறைத்துவிடும் அல்லவா!

தகுந்த மாற்று வராத வரையிலும் அமெரிக்க டாலரின் அந்தஸ்து குறையாது. தற்போதைய நிலை அப்படியே நீடித்தால், சர்வதேச நிதி, வர்த்தகச் சந்தையில் மேலும் சில நாணயங்கள் தலையெடுக்கலாமே தவிர டாலரை அவை பதிலீடு செய்ய முடியாது. ஆகவே, சர்வதேச நிதி, வர்த்தக சந்தையில் அமெரிக்க டாலருக்கு மாற்று என்பது தூரத்து கனவாகவே இருக்கும்.

*இந்தியாவுக்கு ஆபத்தா? ஆதாயமா?*


இதுபோன்ற கடன் உச்சவரம்பு நெருக்கடி


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ઢોસા નું ખીરું
इडली/ दोसा आटा




இதனால், 2008—ம் ஆண்டைப் போல் மீண்டும் ஒரு நெருக்கடி உலக அளவில் வரும் என்ற அச்சம் தேவையில்லை. இந்தியாவில் தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட எந்தவொரு துறைக்கும் நெருக்கடி வராது. நம் நாட்டில் யாருக்கும் பாதிப்பு இருக்காது.

அமெரிக்கா




காலப்போக்கில் அமெரிக்காவுக்கு பாதகமாக அமையலாம். கடனைத் திருப்பிச் செலுத்தும் அமெரிக்க அரசின் திறன் மீது சந்தேகம் எழும் பட்சத்தில், அமெரிக்கச் சந்தைகளில் இருந்து முதலீட்டாளர்கள் வெளியேறக் கூடும். அவ்வாறான பெருமுதலீட்டாளர்கள், ஒப்பீட்டளவில் பாதுகாப்பான சந்தைகளாக கருதப்படும் இந்தியா, சீனா போன்ற நாடுகளில் முதலீடு செய்யலாம். இந்தியாவை நோக்கி முதலீடுகள் வரும் பட்சத்தில் நீண்ட கால நோக்கில் அது நம் நாட்டிற்கு சாதகமாக அம்சம். அமெரிக்கா ஒரு பணக்கார நாடு. தற்போதைய நெருக்கடி அந்நாட்டு அரசுக்குத்தான் ஏற்பட்டுள்ளதே தவிர அந்நாட்டு நிறுவனங்களுக்கு அல்ல. அவை வழக்கம் போல் செயல்படுவதில் எந்த மாற்றமும் இருக்காது.

இன்று நெருக்கடியில் இருப்பதாக தோன்றினாலும், அதனுடன் வேறு எந்த நாட்டையும் ஒப்பிடவே முடியாது. ‘யானை படுத்தாலும் குதிரை மட்டம்‘ என்ற நிலைதான். அமெரிக்கா தனது 230 ஆண்டு கால வரலாற்றில், வாங்கிய கடனையோ, அதற்கான வட்டியையோ திருப்பிச் செலுத்த முடியாத நிலையை ஒருமுறை கூட சந்தித்ததே கிடையாது. அந்த பெருமையைத் தக்க வைக்கவும், தற்போதைய சிக்கலைத் தீர்க்கவும் கடன் உச்சவரம்பை உயர்த்த ஒத்துழைக்குமாறு அமெரிக்க அரசின் கருவூலச் செயலர் ஜேனட் எல்லன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# கருத்துப் ப(ா)டம்

நன்றி: தினமலர்



புதிய பாராளுமன்ற
திறப்பு விழாவுக்கு,
தி.மு.க., கூட்டணி
உள்ளே இருக்கிற
திருமா எதிர்ப்பாம்...
தி.மு.க., கூட்டணிக்கு
வெளியே இருக்கிற
அன்புமணி
வரவேற்பாம்...
பார்ப்போம் சார்...
லோக்சபா
தேர்தலுக்குள்ள
யார் உள்ளே,
யார் வெளியேன்னு...!

# சொல்றாங்க... சொல்றாங்க...



*“9 ஆண்டுகால ஆட்சியில் மக்களிடம் பாஜக கொள்ளை!”*

**கார்கே**

*(எவ்வளவோ தாங்கிட்டாங்க! இன்னும் ஒரு வருஷம் தாங்கிட்டங்கன்னா, கொள்ளை இனிமே இல்லை!)*



*“செங்கோல் குறித்து முதல்வர் ஸ்டாலின் பேசுவது சரியல்ல!”*

**தமிழிசை**

*(அவர் பேசுவது சரியில்லை! இவர் பேசுவது சரியில்லை! என்று சரியில்லாததையே சதாகாலமும் பேசுவோரின் பேச்சுக்கள்தான் சரியில்லை!)*




*“மழையால் அதிகம் பாதிக்கப்பட்டது ரசிகர்கள்தான்!”*

**தோனி**

*(மக்களைப் பற்றிக் கவலைப்படும் தலைவர்கள் இல்லாது போனாலும், ரசிகர்களைப் பற்றிக் கவலைப்படுபவரைப் பார்க்கும்போது ‘தல’ வணங்கத்தான் செய்கிறது!)*

*“தோனியிடம் தோற்றதில் கவலையில்லை!”*



**ஹர்திக் பாண்டியா**

*(ஒப்பற்ற வீரனிடம் தோற்றவனும் சிறந்த வீரனே!’ எனும் பழமொழியைப் புதுமொழியாக்கியவரைப் பாராட்டத்தான் வேண்டும்!)*




## ஜம்மு–காஷ்மீரில் ஜி20 நிகழ்ச்சி

*ஹிரோஷிமா....*

**19**45—ம் ஆண்டு ஆகஸ்ட் 6—ம் தேதி இரண்டாம் உலகப்போரின் இறுதியில் அமெரிக்காவால் அணுகுண்டு வீச்சுக்கு இலக்கான நகரம். அந்தப் போரில் எதிரிகளாக இருந்த அமெரிக்காவும் ஜப்பானும் தற்போது உலக அரங்கில் கூட்டாளிகளாக வலம் வருகின்றன. அவற்றுடன், இந்தியா, ஆஸ்திரேலியா ஆகியவை ஓரணியில் இணைந்த குவாட் அமைப்பின் மாநாட்டால் அதே ஹிரோஷிமா நகரில் மீண்டும் உற்று நோக்கப்படுகிறது. குவாட் கூட்டத்தின் முடிவில் வெளியிடப்பட்ட அறிக்கை, சீனா மீது பெயரை மட்டும் குறிப்பிடாமல் கிட்டத்தட்ட நேரடியாகவே குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளது.

குவாட் கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்பும், சீனாவின் ஆட்சேபனையை மீறி ஜம்மு காஷ்மீரில் ஜி20 மாநாட்டு நிகழ்ச்சிகள் நடப்பதும் ஒரே கால கட்டத்தில் நடந்தேறியிருப்பது சர்வதேச அரசியலில் உற்று நோக்கப்படுகிறது. இவற்றின் மூலம் சீனாவுக்கு இந்தியா உணர்த்த விரும்புவது என்ன? இருபதாம் நூற்றாண்டில் ஐரோப்பாவை மட்டுமே மையம் கொண்டிருந்த சர்வதேச அரசியல் இருபத்து ஒன்றாம் நூற்றாண்டில் வெகுவாக மாறிவிட்டிருக்கிறது. இந்த நூற்றாண்டில் அரசியல், பொருளாதார, ராணுவ ரீதியாக ஆசிய கண்டம் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளது. குறிப்பாக, சீனா, இந்தியா ஆகிய நாடுகளின் வளர்ச்சி சர்வதேச சமூகத்தால் உற்று நோக்கப்படுகிறது. மக்கள் தொகையில் முதலிரு இடங்களை வகிக்கும் இந்நாடுகளின் அரசியல், ராணுவ, பொருளாதார முக்கியத்துவமும் தொடர்ச்சியாக அதிகரித்து வருகிறது. ஆகவேதான், இரு நாடுகளும் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் உலக நாடுகள் உன்னிப்பாக கவனிக்கின்றன.

அந்த வகையில்தான், ஜம்மு காஷ்மீரில் ஜி20 மாநாட்டு நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதும், அதற்கு சீனாவின் எதிர்ப்பும் கவனிக்கப்படும் ஒன்றாக மாறியுள்ளது. ஜி20 மாநாடு இந்தியாவில் நடக்கும் என்ற அறிவிப்பு வெளியானது முதலே நாடு முழுவதும் அதுகுறித்த நிகழ்ச்சிகள் நடந்த வண்ணம் உள்ளன. அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களிலும் ஜி20 மாநாட்டு நிகழ்ச்சிகள் நடத்தப்படும் என்று பிரதமர் மோடி அறிவித்து, அதன்படி நிகழ்வுகளும் நடந்தேறி வருகின்றன. அந்த வரிசையில்தான் ஜம்மு காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில் இன்று முதல் 3 நாட்கள் ஜி20 நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

இதற்கான அறிவிப்பு வெளியானதுமே, “பிரச்னைக்குரிய பகுதியில் ஜி20 மாநாட்டை நடத்துவதா” என்று சீனா எதிர்ப்பு தெரிவித்துள்ளது. சீன வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் பேசுகையில், “எந்த விதமான சர்ச்சைக்குரிய பகுதியிலும் ஜி20 மாநாட்டை நடத்துவதை சீனா கடுமையாக எதிர்க்கிறது. இது போன்ற மாநடுகளில் சீனா பங்கேற்காது” என கூறினார்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில், “இதுபோன்ற கருத்துகளை இந்தியா தொடர்ந்து நிராகரித்து வருகிறது. அந்த பிரச்னையில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்பது சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தெளிவாகத் தெரியும். ஜம்மு காஷ்மீர், லடாக் ஆகிய இரு யூனியன் பிரதேசங்களும் இந்தியாவின்






சிவகுமார் இராஜகுலம்

ஒருங்கிணைந்த பகுதிகளாகும், அவை அப்படியே நீடிக்கும். எந்தவொரு நாட்டுக்கும் அதுகுறித்து கருத்து கூற உரிமை இல்லை” என்று இந்திய வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

மறுபுறம், ஜப்பான் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மோடி, ஹிரோஷிமா நகரில் நடைபெற்ற குவாட் கூட்டத்தில் பங்கேற்றார். அமெரிக்க அதிபர் ஜோ பைடன், ஜப்பான் பிரதமர் ஃபியூமியோ கிஷிடா, ஆஸ்திரேலிய பிரதமர் அந்தோனி அல்பேனிஸ் ஆகியோருடன் அவரும் ஆலோசனை நடத்தினார்.

பல்வேறு அரசியல், பொருளாதார, ராணுவ விவகாரங்கள் குறித்தும், குறிப்பாக இந்தோ — பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருவது குறித்தும் அந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

பின்னர், குவாட் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கை, சீனாவின் பெயரை மட்டும் குறிப்பிடாமல் அந்நாட்டின் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை அடுக்கியிருந்தது. பலவீனமான சிறிய நாடுகளை கடன் வலையில் வீழ்த்தும் சீனாவின் தந்திரத்தை மறைமுகமாக சாடும் வகையில், இந்தோ—பசிபிக் பிராந்தியத்தில் கடல்வழி உள்கட்டமைப்புகளை மேம்படுத்த சிறிய நாடுகளுக்கு உதவும் அதேநேரத்தில், அவற்றால் தாக்குப்பிடிக்க முடியாத கடன் சுமையை ஏற்ற மாட்டோம் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.




சுழற்சி அடிப்படையில் குவாட் கூட்டமைப்பின் அடுத்த மாநாட்டை இந்தியா நடத்தவுள்ளது. 2024—ம் ஆண்டு குவாட் மாநாட்டை நடத்துவதில் இந்தியா மகிழ்ச்சி கொள்கிறது என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். சீனா, ரஷ்யாவின் அண்மைக்கால நடவடிக்கைகளால் வேகமாக மாறி வரும் சர்வதேச அரசியல் சூழலில் இந்தியா கவனிக்கத்தக்க முக்கிய நாடுகளில் ஒன்றாகியுள்ளது. குவாட் மாநாட்டில் பிரதமர் பங்கேற்பும், ஜம்மு காஷ்மீரில் சீன

ஆட்சேபனையை புறந்தள்ளி ஜி20 மாநாட்டு நிகழ்ச்சிகளை நடத்துவதும் உற்று நோக்கப்படுகிறது. அதுகுறித்து இந்திய வெளியுறவுத்துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற மூத்த அதிகாரியிடம் பேசுகையில், "குவாட் கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்றதும், ஜம்மு—காஷ்மீரில் ஜி20 மாநாட்டு நிகழ்ச்சி நடத்தப்பட்டதும் ஒரே கால கட்டத்தில் நடந்ததாக தெரிந்தாலும் அது தற்செயலானதே. உலகமே முடங்கிக் கிடந்த போது கூட கால்வான் பள்ளத்தாக்கில் ஊடுருவி இந்திய ராணுவ வீரர்கள் 20 பேர் உயிரிழக்கக் காரணமானது சீனாதான். அதற்குப் பிறகே, எல்லைப் பிரச்னை, பொருளாதார ஒத்துழைப்பு ஆகிய இரண்டையும் தனித்தனியாக அணுக வேண்டும் என்ற நிலைப்பாட்டை இந்தியா தளர்த்திக் கொண்டது." என்றார்.



குவாட் கூட்டத்தை இந்தியாவில் நடத்த பிரதமர் மோடி அழைப்பு விடுத்ததும் கூட நடைமுறைக்கு மாறான ஒன்றல்ல. சுழற்சி அடிப்படையில் அடுத்தபடியாக குவாட் மாநாடு இந்தியாவில் நடக்க வேண்டியதுதான். அடுத்தபடியாக, ஜி20 மாநாட்டு நிகழ்ச்சிகள் நாடு முழுவதும் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் நடைபெறும் என்று பிரதமர் மோடி ஏற்கனவே அறிவித்திருந்தார்.

அதன் அடிப்படையிலேயே ஜம்மு காஷ்மீரில் நிகழ்ச்சிகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டன. இறையாண்மை மிக்க ஒரு நாட்டுக்கு தன்னுடைய எல்லைக்குள் எந்தவொரு நிகழ்ச்சிகளையும் நடத்தும் உரிமை உண்டு. அந்த அடிப்படையில், யாருடைய ஆட்சேபனையையும் பொருட்படுத்த வேண்டிய அவசியம் இந்தியாவுக்கு இல்லை. ஆகவே, எந்தவொரு நாட்டையும் குறிப்பாக, சீனாவை வெறுப்பூட்டும் நடவடிக்கையில் இந்தியா ஈடுபடுவதாக கருதுவதற்கு இடமே இல்லை." என்று கூறினார்.

மேலும் தொடர்ந்த அவர், " ஜம்மு காஷ்மீர் எல்லை வழியாக பாகிஸ்தானின் குவெட்டா நகருக்கு பொருளாதார வழித்தடத்தை சீனா அமைத்து வருகிறது. கொரோனா பேரிடரால்

"ஸ்ப்ரெட்லி தீவுகள் பிரச்னையில் பிலிப்பைன்சுக்கு சாதகமாக சர்வதேச தீர்ப்பாயம் அளித்த தீர்ப்பை நடைமுறைப்படுத்த சீனா மறுக்கிறது. இந்தியா — வங்கதேசம் இடையே இதேபோன்றதொரு வழக்கில் அந்த தீர்ப்பாயம் வழங்கிய தீர்ப்பை இந்தியா அப்படியே நடைமுறைப்படுத்தியது. சர்வதேச தீர்ப்பாயத்தின் தீர்ப்பை ஏற்க மறுப்பதுடன், அண்டை நாடுகளுடன் சர்ச்சைக்குரிய எல்லையில் பிற நாட்டுக் கப்பல்கள், படகுகளை சீனா வழிமறித்தும் வருகிறது." என்று அவர் கூறினார்.

## காஷ்மீரில் ஜி20 கூட்டம்: ஜனநாயகமும் துளிர்க்கட்டும்!

ஜி20 மாநாட்டின் ஒரு பகுதியாக, சுற்றுலா தொடர்பான மூன்றாவது பணிக்குழுக் கூட்டம் காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில் மே 22 தொடங்கி 24 வரை நடைபெற்றது. காஷ்மீருக்குச் சிறப்பு அந்தஸ்து வழங்கிய 370ஆவது சட்டக்கூறு நீக்கப்பட்டு, ஜம்மு—காஷ்மீர், லடாக் எனும் இரண்டு யூனியன் பிரதேசங்களாகக் காஷ்மீர் மாநிலம் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பிரிக்கப்பட்டது. இந்தப் பின்னணியில் பாகிஸ்தான், சீனாவின் எதிர்ப்பு காரணமாகவும், சில நாடுகள் பங்கேற்காததன் காரணமாகவும் ஸ்ரீநகர் ஜி20 கூட்டம் பேசுபொருளாகியிருக்கிறது.

ஜி20 அமைப்பு முன்னணி நாடுகளின் பொருளாதாரக் கூட்டமைப்பாகக் கருதப் படுகிறது. அனைத்து உறுப்பு நாடுகளும் இதன் தலைமைப் பொறுப்பை ஏற்கத் தகுதி கொண்டவை. அந்த வகையில், 2022 டிசம்பர் 1 முதல் இதன் தலைமைப் பொறுப்பை இந்தியா வகிக்கிறது. அதன் அடிப்படையில், ஜி20 மாநாட்டின் சில அமர்வுகள் காஷ்மீரில் நடத்தப்படும் எனக் கடந்த ஆண்டே செய்திகள் வெளியாகின.




ஜி20 அமைப்பில் இடம்பெறாத நிலையிலும், பாகிஸ்தான் இதற்குக் கண்டனம் தெரிவித்தது. இக்கூட்டம் நடந்தால் காஷ்மீர் விஷயத்தில் ஐநாவில் தீர்மானங்களைக் கொண்டுவருவதற்கான வாய்ப்புகளை இழக்க நேரிடும் என்பதுதான் பாகிஸ்தானின் அச்சத்துக்குக் காரணம். தனது தரப்புக்கு வலுசேர்க்கத் தனது நட்பு நாடான சீனாவிடமும், இந்தோனேசியா, சவுதி அரேபியா, துருக்கி போன்ற நாடுகளிடமும் பாகிஸ்தான் ஆதரவு கோரியது. இதன் பலனாக, 'ஜி20 மாநாட்டில் அரசியல் கலப்பு கூடாது' என ஆரம்பத்திலேயே சீனா ஆட்சேபம் தெரிவித்தது.

எதிர்பார்த்தது போலவே இதில் கலந்துகொள்ள சீனா மறுத்துவிட்டது. சர்ச்சைக்குரிய இடத்தில் நடக்கும் கூட்டங்களில் பங்கேற்பதில்லை என்றும் அந்நாடு விளக்கமளித்திருக்கிறது. இதையடுத்து, தனது சொந்த மண்ணில் எங்கு வேண்டுமானாலும் மாநாடு நடத்தத் தனக்குச் சுதந்திரம் இருப்பதாகவும், இதில் கலந்துகொள்ளாததால் சீனாவுக்குத்தான் நஷ்டம் என்றும் இந்தியா பதிலடி கொடுத்திருக்கிறது. அதேபோல், காஷ்மீர் குறித்துப் பேசும் உரிமை பாகிஸ்தானுக்கு இல்லை என்றும் உறுதியாகத் தெரிவித்திருக்கிறது.

காஷ்மீர் விவகாரத்தில் இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்ட துருக்கி, சவுதி அரேபியா ஆகிய நாடுகளும் இதில் பங்கேற்கவில்லை. சிறப்பு அழைப்பாளராக அழைக்கப்பட்டிருந்த, எகிப்தும் கலந்துகொள்ளவில்லை. இஸ்லாமியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இந்நாடுகள் இந்த முடிவை எடுத்த நிலையில், இதே அமைப்பின் உறுப்பு நாடுகளான இந்தோனேசியா, ஓமன் போன்றவை இக்கூட்டத்தில் பங்கேற்றன. 27 நாடுகளைச் சேர்ந்த 60க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இது சுற்றுலா தொடர்பான முந்தைய இரு கூட்டங்களை ஒப்பிட அதிகமான எண்ணிக்கை ஆகும்.

காஷ்மீரில் கடந்த சில பத்தாண்டுகளில் சர்வதேச அளவில் முக்கியத்துவம் கொண்ட மாநாடுகள் நடைபெற்றதில்லை எனும் சூழலில் இக்கூட்டம் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. எனினும், சிறப்பு அந்தஸ்து நீக்கப்பட்ட பின்னர், இதுவரை அங்கு தேர்தலும் நடத்தப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது. சர்வதேச அளவிலான மாநாட்டின் அமர்வைக் காஷ்மீரில் நடத்துவதன் மூலம், அங்கு அமைதியும் பாதுகாப்பும் நிலவுவதாக இந்தியா நிறுவியிருக்கிறது. இதே நம்பிக்கையுடன் அங்கு தேர்தலை நடத்தவும் அரசு முன்வர வேண்டும். அது காஷ்மீர் விஷயத்தில் இந்தியாவின் உறுதியான நிலைப்பாட்டை உலகுக்கு மேலும் தெளிவுபடுத்தும்!


CHAMPIONS
23


TVS


I DHONI


India
Cements
7


Cements
7
DHONI

# அரியணையில் அரிமா!













## இறையும் தமிழும் வேறு வேறல்ல!


‘என்னை நன்றாய் இறைவன் படைத்தனன் தன்னை நன்றாய்த் தமிழ்ச் செய்யுமாறே’ என்கிறார் திருமூலர். பண்டைத் தமிழகத்தில் இலக்கியங்கள் மதுரை மீனாட்சி அம்மன் கோயில் பொற்றாமரைக் குளத்தில் விடப்பட்டு, அந்த ஏட்டினை இறைவன் கரை சேர்த்தால் ஏற்றுக்கொண்டதாக செவிவழிச் செய்திகள் இருக்கின்றன.

தமிழகம் பல்லாயிரம் ஆலயங்களைக் கொண்ட ஆன்மிக பூமியாக சிறந்திருந்தது. இந்த ஆலயங்களின் இறைவன் தமிழால் பாடப்பெறும் பொழுது இன்னும் சிறப்பு அந்த இறைவனுக்கு ஏற்பட்டுவிடுகிறது. பாடல் பெற்ற தலங்கள் “திரு’ என்ற அடைமொழியோடு பெருமை பெறுகின்றன. உதாரணமாக, “திருவாலாங்காடு’, “திருமழிசை’, “திருவல்லம்‘ என்று நூற்றுக்கணக்கான ஊர்கள் இருக்கின்றன. சைவம், வைணவம் எனப் பாகுபாடு இல்லை. சைவத் திருக்கோயில்கள் பாடல்பெற்ற தலங்கள் என்று அழைக்கப்பட்டால், வைணவ ஆலயங்கள் மங்களாசாசனம் பெற்ற தலங்கள் என்று கொண்டாடப்படுகின்றன. வைணவ நூலான நாலாயிர திவ்யப் பிரபந்தம் “தமிழ் வேதம்‘ என்றே போற்றப்படுகிறது. வைணவக் கோயில்களில் தமிழே இறைவன் முன் உற்சவங்களில் வருகிறது.

சைவ சமயத்தைப் பார்த்தால் தேவாரம் பாடிய மூவருமே தமிழுக்குத் தந்துள்ள முக்கியத்துவத்தை மூவர் பாடிய தேவாரத் திருமுறைகள் உணர்த்துகின்றன. திருஞானசம்பந்தர் தன்னை, “தமிழ் விரகன்’, “அருந்தமிழ் ஞானசம்பந்தன்’, “முத்தமிழ் நான்மறை ஞானசம்பந்தன்’, “நல்ல செந்தமிழ் வல்லவன்’ என்றெல்லாம் தன்னுடைய பாடல்களில் பெருமிதத்தோடு அடையாளப்படுத்திக் கொள்கிறார். இவரைப் போல தமிழ் மொழியை அடைமொழியாகத் தனக்கு வைத்துக் கொண்டவர் வேறு எவரும் இலர்.

அதே போல், திருநாவுக்கரசு சுவாமிகளும் இறைவன் மீது தான் கொண்ட பக்தியை, தமிழ் மீது ஏற்றியே கூறுகிறார். “தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்’ என்று பாடி வைத்திருக்கிறார். சர்வ வல்லமை பொருந்திய மன்னரையும் எதிர்த்து நின்ற நாவுக்கரசருக்கு, தமிழ் இறைவனை அடைவதற்கான வழியாகத் தெரிந்திருக்கிறது.

சுந்தரரின் தமிழ் கேட்க இறைவன் அவருக்காகக் காதல் தூது போனதாகச் செய்தி இருக்கிறது. சேக்கிழார் தனது பெரியபுராணத்தில், இறைவன் சுந்தரரை ஆட்கொண்டு சிவநெறியைப் பரப்ப அவருக்கு ஆணையிட்டபோது, “மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக’ என்று ஆணையிட்டதாக சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகின்றார்.







## கோதை ஜோதிலட்சுமி

அருநெறியமறை வல்ல முனியகன்
பொய்கை அலர் மேய
பெருநெறிய பிரமாபுர மேவிய பெம்மான்
இவன் தன்னை
ஒருநெறிய மனம் வைத்து உணர் ஞானசம்
பந்தன் உரைசெய்த
திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை
தீர்தல் எளிதாமே

என்று திருஞான சம்பந்தர் தனது முதல் பதிகத்திலேயே தமிழைப் போற்றத் தொடங்குகிறார்.

அதனால்தான், “நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்’ என்று கொண்டாடப்படுகிறார். இந்தத் தமிழ் வளர்த்த திருமுறைகளை பேணிக் காப்பதிலும் அதன் வழியே தமிழை வளர்ப்பதிலும் ஆதீனங்கள் பெரும் பங்காற்றுகின்றன. தருமபுர ஆதீனத்தின் கொள்கை வாசகமே “சைவமும் தமிழும் தழைத்து இனிது ஓங்குக’ என்பதுதான். அதற்கேற்ப தெய்விகத் தமிழ் வளர்ப்பதில் ஆதீனம் பெரும் அக்கறை காட்டுகிறது.




தருமபுர ஆதீனத்தின் கீழ் இருக்கும் கோயில்களில் முக்கியமான கோயில் சீர்காழி சட்டைநாதசுவாமி கோயில். சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவராலும் பாடப்பட்ட திருத்தலம். இவ்வாறு மூவராலும் பாடப்பட்ட தலங்கள் மிகக்குறைவே. அதிலும் அற்புதம் நிகழ்ந்த திருத்தலம் சீர்காழி. திருஞானசம்பந்தர் “தோடுடைய செவியன்’ என்ற தனது முதல் பதிகத்தைப் பாடிய திருத்தலம்.

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான சட்டைநாத சுவாமி கோயிலில் 32 ஆண்டுகளுக்குப் பிறகு வரும் மே 24—ஆம் தேதி கும்பாபிஷேகம் நடத்துவதற்கான பணிகள் நடந்துவருகின்றன. யாகசாலை அமைக்க மண் எடுப்பதற்காக கோயிலுக்குள் பள்ளம் தோண்டியிருக்கிறார்கள். இரண்டடி ஆழத்தில் விநாயகர், முருகன், வள்ளி — தெய்வானை, சோமாஸ்கந்தர், சிவகாமி, திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் உள்ளிட்ட

# தமிழ் மொழியின் சிறப்பு

1 ஒன்று
3/4 - முக்கால்
1/2 - அரை கால்
1/4 - கால்
1/5 - நாலுமா
3/16 - மூன்று வீசம்
3/20 - மூன்றுமா
1/8 - அரைக்கால்
1/10 - இருமா
1/16 - மாகாணி(வீசம்)
1/20 - ஒருமா
3/64 - முக்கால்வீசம்
3/80 - முக்காணி
1/32 - அரைவீசம்
1/40 - அரைமா
1/64 - கால் வீசம்
1/80 - காணி
3/320 - அரைக்காணி முந்திரி
1/160 - அரைக்காணி
1/320 - முந்திரி
1/102400 - கீழ்முந்திரி
1/2150400 - இம்மி
1/23654400 - மும்மி
1/165580800 - அணு –> {6,0393476E-9 –> nano = 0.000000001}
1/1490227200 - குணம்
1/7451136000 - பந்தம்
1/44706816000 - பாகம்
1/312947712000 - விந்தம்
1/5320111104000 - நாகவிந்தம்
1/74481555456000 - சிந்தை
1/489631109120000 - கதிர்முனை
1/9585244364800000 - குரல்வளைப்படி
1/575114661888000000 - வெள்ளம்
1/57511466188800000000 - நுண்மணல்
1/2323824530227200000000 - தேர்த்துகள்

*23 செப்புச் சிலைகள் கிடைத்தன.*

*இந்தச் சிலைகள் அரையடி முதல் இரண்டு அடி வரை உயரம் கொண்டவையாக இருக்கின்றன. இதுதவிர 493 செப்பேடுகளும் 16 பூஜைப் பொருட்களும் 15 பீடங்களும் 50 வேறு சில உலோகப் பொருட்களும் கிடைத்துள்ளன. கிடைத்திருக்கும் செப்பேடுகளில் திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற சீர்காழி தேவாரப் பதிகம் இடம்பெற்றுள்ளது. செப்பேடுகளை முழுமையாக ஆய்வு செய்தால் இன்னும் தகவல்கள் கிடைக்கக்கூடும்.*

*தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் இதனைப் பொக்கிஷம் கிடைத்ததாகக் கருதுகிறார்கள். அவற்றைப் பராமரிக்கவும் பொதுமக்கள் தெரிந்து கொள்ளவும் இப்போதைக்கு இந்தப் பொருட்கள் கோயிலிலேயே பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. கோயிலிலேயே அருங்காட்சியம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக தருமையாதீன குருமகாசந்நிதானம் அறிவித்துள்ளார்கள்.*

*முதல் முறையாக தேவாரப் பாடல்கள் அடங்கிய செப்பேடுகள் கிடைத்துள்ளன. இதுவரை தமிழகத்தில் எங்கும் தேவாரப் பதிகங்கள் செப்பேட்டில் கிடைக்கவில்லை. என்றாலும் செப்பேட்டில் தேவாரங்களை எழுதிப் பாதுகாத்ததற்கும் அதனை இறைபணியாகக் கருதியதற்கும் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன.*


*"சிதம்பரம் கோயிலில் குலோத்துங்கச் சோழனிடமும் அவனது மகன் விக்கிரம சோழனிடமும் தளபதியாக இருந்த நரலோக வீரன், செப்பேடுகளில் தேவாரப் பாடல்களை எழுதியதாக சிதம்பரம் கோயிலில் கல்வெட்டுகள் இருக்கின்றன. ஆகவே தற்போது கிடைத்துள்ள செப்பேடுகள் அவனால் எழுதப்பட்டதாக இருக்கலாம்' என்கிறார் ஆய்வாளர் குடவாயில் பாலசுப்பிரமணியன்.*

*நரலோக வீரன் சிதம்பரம் கோயிலில் பல திருப்பணிகளைச் செய்திருக்கிறார். இந்தக் கோயிலில் இரண்டு பெரிய நுழைவாயில்களைக் கட்டவும் சந்நிதியை விரிவுபடுத்தவும் செய்திருக்கிறார். ஊர்வலப் பாதைகளில் விளக்குகள் எரிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார். நடராஜர், பிட்சாடனர் உலா செல்வதற்காக ரிஷப வாகனம் ஒன்றை செய்து கொடுத்திருக்கிறார்.*

*நூற்றுக்கால் மண்டபம் ஒன்றையும் கட்டியிருக்கிறார். திருஞானசம்பந்தர் தேவாரத்தை ஓதுவதற்கென்று மண்டபம் ஒன்றை அமைத்ததோடு, மூவர் தேவாரத்தை செப்பேடுகளில் எழுதவும் ஏற்பாடு செய்திருக்கிறார். இதனைத் தனது "பெரியபுராண ஆராய்ச்சி' எனும் நூலில் மா. இராசமாணிக்கனார் கூறியிருக்கிறார்.*

*நவலோக வீரன் போலவே தேவாரப் பதிகங்களை*

செப்பேட்டில் எழுதச் செய்வதை இறைபணி என்று இன்னும் பலரும் எண்ணியிருக்கக் கூடும். அன்றைய தமிழகத்தில் இறைபணி என்பதே தமிழ்ப் பணியோடு இணைந்தது என்ற சிந்தனை



## ஓரெழுத்து ஒருமொழி

ஆ - என்றால் பசுவாகும்!
ஈ - என்றால் பூச்சியினம்!
ஊ - என்றால் ஊன்ஆகும்!
ஏ - என்றால் அம்பாகும்!
ஐ - என்றால் தலைவனாம்!
ஓ - என்றால் உயர்வாகும்!
கா - என்றால் சோலை!
கூ - என்றால் நிலம்!
கை - என்றால் கை.யே!
கோ - என்றால் அரசன்!
சா - என்றால் சாதல்!
சீ - என்றால் திருமகள்!
சே - என்றால் சிவப்பு!
சோ- என்றால் சூழ்அரண்!
தா - என்றால் கொடு!
தீ - என்றால் நெருப்பு!
து - என்றால் அசைத்தல்!
தூ - என்றால் தூய்மை!
தே - என்றால் தெய்வம்!
தை - என்றால் திங்கள்!
நா - என்றால் நாக்கு!
நீ - என்றால் நீ.தான்!
நே - என்றால் அன்பு!
நை - என்றால் நைதல்!
நொ - என்றால் துன்பம்!
நோ - என்றால் துக்கம்!

இருந்துள்ளது என்பதை இந்தச் செப்பேடுகள் நிறுவுகின்றன. கிடைத்திருக்கும் பொக்கிஷங்களான சிலைகளும் செப்பேடுகளும் எப்படி மண்ணுக்குள் சென்றன? மண்ணுக்குள் மறைந்தனவா? மறைக்கப்பட்டனவா? இத்தனை சிலைகளும் செப்பேடுகளும் பூஜைக்கான பாத்திரங்களும் மண்ணுக்கடியில் புதைந்திருந்தாலும் இவற்றில் பாதிப்புகள் எதுவும் இல்லாமல் முழுமையான வடிவத்தில் கிடைத்திருக்கின்றன என்றால் இறை வடிவங்களைக் காக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மண்ணுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்றே தோன்றுகிறது.

குடவாயில் பாலசுப்ரமணியன், “தமிழ்நாட்டின் மீது பல முறை அந்நியர் படையெடுப்புகள் நிகழ்ந்திருக்கின்றன. மாலிக்காபூர் படையெடுப்பு, பிரெஞ்சு படையெடுப்பு, ஆங்கிலேயர் படையெடுப்பு என தொடர்ந்து சரித்திரத்தில் படையெடுப்புகளைப் பார்க்கிறோம். இப்போது கிடைத்திருப்பவை முதலாம் குலோத்துங்கச் சோழன் காலத்தைச் சேர்ந்தவை என்பதால் மாலிக்காபூர் படையெடுப்பிலிருந்து இந்தப் பொருட்களைக் காக்க புதைத்து வைக்கப் பட்டிருக்கலாம்‘ என்று கூறுகிறார்.

செப்பேடுகள் தமிழின் பெருமையைத் தாங்கி நிற்கின்றன. ஏற்கெனவே, சட்டைநாதர் ஆலயத்தில் நாற்பதுக்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் வரலாற்றுச் சான்றாக நிற்கின்றன. பல்லவர்கள் காலத்தில் கட்டப்பட்ட இந்தக் கோயில் சோழ மன்னர்களால் நிவந்தங்கள் தந்து காக்கப்பட்டிருக்கிறது. வீர ராஜேந்திரன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் ராஜராஜன், ராஜாதிராஜன் ஆகிய சோழ மன்னர்கள் இந்தக் கோயிலுக்கு நிவந்தங்கள் அளித்துள்ள செய்தியை அவை பேசுகின்றன.

ஆலயத் திருப்பணி செய்த மன்னர்கள், நிவந்தங்களும் கொடையும் அளித்து ஆலயங்களுக்குப் பங்களிப்புச் செய்த செல்வந்தர்கள் முதல் சாமானியர்கள் வரை அனைவரும் ஒரு காரணத்திற்காகவே செய்துள்ளனர். சமயம் பேணுவதும் இறைநம்பிக்கையை ஏத்திப் போற்றுவதும் முதன்மை நோக்கம். அதனைச் செய்வதற்கான சிறந்த வழி தமிழ் போற்றுதல். தமிழ், இறை இரண்டும் ஒன்றுக்கொன்று பிரிக்க முடியாதவை. ஆலயங்களும் இறைவனும் வணங்கப்படும் காலம் வரை திருப்பதிகங்களில் தமிழ் வாழும்; தமிழ் வாழும் வரை இறைக்கோட்பாடு நிலைத்திருக்கும்.

தமது வாழ்நாள் உழைப்பை, சேர்த்த செல்வதை இறை நம்பிக்கையைக் காக்க அவர்கள் தத்தம் செய்திருக்கிறார்கள். நம் முன்னோரின் இந்த நம்பிக்கையை நமது தனிப்பெரும் அடையாளத்தை இனிவரும் தலைமுறைக்குக் கடத்த வேண்டிய பொறுப்பு தமிழராகிய நம் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது.



நிகழ்வு

# விதைத்ததே

### கச்சத்தீவுக்கோர் தீர்வு காண்போம்

சில நாட்களுக்கு முன்னர் சென்னைக்கு வருகை தந்த நம் பாரத பிரதமரிடம் பல்வேறு கோரிக்கைகளுடன், தமிழக மீனவர் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காண கச்சத்தீவு மீதான இந்தியாவின் இறையாண்மையை மீட்க வேண்டும் என்ற கோரிக்கை மனுவை தமிழக முதல்வர் அளித்துள்ளார்.

தங்கள் வாழ்வாதாரத்திற்கு ராமநாதபுரம், தஞ் சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, நாகப்பட்டினம் மாவட்டங்களை சேர்ந்த மீனவர்கள் பாக் நீரினை, மன்னார் வளைகுடா, கச்சத்தீவு அருகே மீன் பிடித்து வருகின்றனர். இவர்கள் மீது இலங்கை கடற்படையினர், எல்லை தாண்டி தங்களின் கடற்பகுதியில் மீன் பிடிப்பதாக கூறி அவ்வப்போது தாக்குதல் நடத்துவது, வலைகளை அறுத்தெறிவது, மீன்களையும் படகுகளையும் பறிமுதல் செய்வதோடு மீனவர்களை கைது செய்து சிறையில் அடைப்பதும் வாடிக்கையாகி விட்டன. கடந்த நாற்பது ஆண்டுகளில் தமிழக மீனவர்கள் பலர் இலங்கை கடற்படையினரால் கொல்லப்பட்டுள்ளனர்.

1974 மற்றும் 1976 ஆண்டுகளில் கையொப்பமான இந்தியா— இலங்கை ஒப்பந்தங்களின் அடிப்படையில் இலங்கைக்கு தரப்பட்ட இருநூற்று என்பத்தைந்து ஏக்கர் பரப்பளவு கொண்ட கச்சத்தீவு இலங்கைக்கு தரப்பட்ட போது, தமிழகத்தில் கடும் எதிர்ப்பு எழுந்தது. அதனை சமாளிக்கவே தமிழக மீனவர்கள் கச்சத்தீவில் தங்கள் மீன்பிடி வலைகளை உலர்த்திக் கொள்ளவும், இத்தீவில் உள்ள புனித அந்தோணியார் கோயிலில் ஆண்டுக்கொரு முறை நடைபெறும் திருவிழாவில் பங்கேற்கவும் அனுமதிக்கப்படுவர் என இலங்கையும் இந்தியாவும் அறிவித்தன .

கச்சத்தீவு இலங்கைக்குக் கொடுக்கப்பட்ட விவகாரதில் நாடாளுமன்றத்தில் உரிய விவாதங்கள் நடத்தப்படவில்லை. மேலும், மாநில எல்லைகளை மறுசீரமைப்பு செய்வதற்காக அரசியல் சாசனம் வகுத்துள்ள விதிமுறைகள் பின்பற்றப்படவில்லை. எனவே கச்சத்தீவை இலங்கைக்கு கொடுத்தது சட்டப்படி செல்லாது என அறிவிக்கக் கோரி உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு 2011ஆம் ஆண்டு வழக்கு தொடுத்தது. எனினும் இவ்வழக்கின் முடிவு தமிழக அரசுக்கு சாதகமாக அமையவில்லை.

தமிழக முதல்வர்களாக இருந்த கருணாநிதி, ஜெயலலிதா ஆகியோர் இலங்கைக்கு தரப்பட்ட கச்சதீவைத் திரும்ப பெற இயலாத சூழ்நிலையில், அத்தீவினை நீண்ட கால குத்தகைக்கு இந்தியா, இலங்கை அரசிடம் இருந்து பெற வேண்டுமென மத்திய அரசை வலியுறுத்தினர். கச்சத்தீவினை நம்நாடு குத்தகைக்குப் பெற்றால் தமிழக மீனவர்கள் எல்லை தாண்டுவதாக கூறி





# விளையும்!

இரா. சாந்தகுமார்


இலங்கை கடற்படையினர் அத்துமீறுவது அறவே நடைபெறாது. எனினும் தமிழக முதல்வர்களின் இந்த ஆலோசனை மத்திய அரசால் தீவிரமாக பரிசீலனை செய்யப்பட்டு செயல் வடிவம் பெறவில்லை.

கச்சத்தீவில் இலங்கை கடற்படையினர் வழிபடுவதற்கென்ற காரணத்தை முன்வைத்து சமீபத்தில் புத்தர் சிலையுடன் விகார் ஒன்றை தற்காலிகமாக இலங்கை அரசு நிறுவியுள்ளது. இத்தீவில் காலங்காலமாக புனித அந்தோனியார் ஆலயம் ஒன்று மட்டுமே வழிபாட்டுதலம் என்று இருந்த நிலை மாறி தற்போது நிறுவப்பட்டுள்ள புத்த விகாரால் இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகளில் சிங்கள குடியேற்றம் அமைத்து சிங்களமயமாக்குதலை ஏற்படுத்தும் சிங்கள அரசு, தற்போது கச்சத்தீவையும் சிங்களமயமாக்கலின் ஒரு பகுதியாகவே புத்த விகாரை நிறுவியுள்ளதாகவே கருத வேண்டி உள்ளது.


ஏற்கெனவே இலங்கையில் உள்ள பெரிய துறைமுகமான கொழும்புக்கு அடுத்தபடியாக அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தை சீனாவிற்கு 99 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு விட்டுள்ளது இலங்கை அரசு. சரக்குகளைக் கையாள்வதற்காகவே இத்துறைமுகம் என்று கூறப்பட்டாலும், ஏற்கனவே அருணாசல பிரதேசம் உள்ளிட்ட இந்தியாவின் வடக்கு எல்லையில் தேவையற்ற சச்சரவுகளை உருவாக்கி வரும் சீன அரசு, வருங்காலத்தில் இலங்கையில் இருந்தபடி இத்துறைமுகத்தின் மூலம் தென்னிந்தியாவிற்கு ராணுவ ரீதியான அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்ற எச்சரிக்கையைப் புறந்தள்ள முடியாது.

மேலும் இலங்கையின் தென்முனையான தொன்ட்ரா விரிகுடா பகுதியில் அறிவியல் அகடமி விண்வெளி தகவல் ஆராய்ச்சி மையம் மூலம் ராடார் தளம் ஒன்றை நிறுவ சீனா முடிவு செய்திருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. இந்த ராடார் தளத்தின் மூலம் இந்திய கடற்படைக்கு சொந்தமான போர் கப்பல்கள், படகுகள் ஆகியவற்றின் நடமாட்டத்தை சீனா மிகத் துல்லியமாகக் கண்காணிக்க முடியும்.

இச்சூழலில் நம் நாட்டின் பாதுகாப்பை கருதி, இலங்கையில் ஆதிக்கம் செலுத்த முற்படும் சீனாவை பின்னுக்குத் தள்ளி இலங்கை அரசுடன் நெருக்கமாக உறவை மேற்கொள்ள வேண்டிய நிலை நம் நாட்டிற்கு ஏற்பட்டிருக்கிறது.




பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கைக்கு நம்நாடு மூன்றரை பில்லியன் டாலர் கடன் வழங்கியுள்ளதோடு அரிசி, பால்பவுடர், மருந்துகள்,



எரிபொருட்கள் போன்ற அத்தியாவசிய பொருட்களை கொடுத்து உதவியுள்ளது. சமீபத்தில் அங்கு சென்ற இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் அந்நாட்டின் வெளியுறவு துறை அமைச்சரை சந்தித்து இலங்கையின் பொருளாதார புனரமைப்பிற்கு நம் நாட்டின் ஆதரவினை அறிவித்துள்ளார்.

இலங்கைக்கு ஆதரவான முதல் நாடாக நம்நாடு சர்வதேச நிதி ஆணையத்திற்கு இலங்கையின் கடன் மறு சீரமைப்பு தொடர்பான சான்றிதழை அளித்துள்ளது. இதற்காக இலங்கை அரசும் நம் பிரதமருக்கு தனது நன்றியை தெரிவித்துள்ளது. ஆக இலங்கைக்கு நம் நாட்டிற்கும் இடையே தற்போது நிலவி வரும் நெருக்கமான நட்புறவைப் பயன்படுத்தி கச்சத்தீவை இலங்கையிடமிருந்து திரும்பப் பெற்று அத்தீவின் மீது நம்நாட்டின் இறையாண்மையை நிலை நிறுத்த மத்திய அரசு முன்வர வேண்டும்.

குறைந்த பட்சம் கச்சத்தீவை இலங்கையிடமிருந்து குத்தகை அடிப்படையிலேனும் நம்நாடு பெற வேண்டும். இத்தகைய முயற்சி வெற்றி பெறும் நிலையில், இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் தடுத்து நிறுத்தப்பட்டு நம் நாட்டின் மீதான சீனாவின் ராணுவ அச்சுறுதல் தவிர்க்கப்படுவதோடு தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் துன்புறுத்தப்படுவதற்கும் நிரந்தர தீர்வு ஏற்படும்.

இந்தியாவின் ராமேஸ்வரத்திற்கும் இலங்கையின் நெடுந்தீவிற்கும் இடையில் அமைந்துள்ள மிகச் சிறிய தீவான கச்சத் தீவை மீட்க வேண்டுமென அடிக்கடி குரல்கள் எழுகின்றன. அந்தத் தீவை இந்தியா தாரைவார்த்துக் கொடுத்ததாகவும் குற்றம்சாட்டப்படுகிறது. உண்மையில் இந்த விவகாரத்தில் நடந்தது என்ன?

இதில் பாக் நீரிணைப் பகுதி என்பது இலங்கையின் வடக்கு கடற்கரைக்கும் இந்தியாவின் தென்கிழக்குக் கடற்கரைக்கும் இடைப்பட்ட பகுதியே பாக் நீரிணை எனப்படுகிறது. 1755லிருந்து 1763வரை சென்னை மாகாணத்தின் ஆளுநராக இருந்த ராபர்ட் பாக்கின் பெயர்தான் இந்த நீரிணைக்குச் சூட்டப்பட்டிருக்கிறது. பாக் நீரிணைப் பகுதியை ஒரு கடல் என்றே சொல்ல முடியாது. பவளப் பாறைகள், மணல் திட்டுகள் அதிகம் இருப்பதால் இந்தப் பகுதியில் பெரிய கப்பல்கள் செல்ல முடியாது.

இந்தியாவின் ராமேஸ்வரத்திலிருந்து 12 மைல் தொலைவிலும் யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவிலிருந்து 10.5 மைல் தொலைவிலும் பாக் நீரிணைப் பகுதியில் அமைந்திருக்கும் ஒரு மிகச் சிறிய தீவுதான் கச்சத்தீவு. இதன் பரப்பு சுமார் 285 ஏக்கர். இதன் அதிகபட்ச அகலமே 300 மீட்டர்கள்தான். மனிதர்கள் யாரும் வசிக்காத இந்தத் தீவில் புனித அந்தோணியார் தேவாலயம் ஒன்றும் அமைந்திருக்கிறது. ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி — மார்ச் மாதங்களில் இந்தக் கோவிலில் இந்தக் கோவிலில் ஒரு வாரத்திற்கு வழிபாடு நடப்பது வழக்கம். 1983ல் இலங்கையில் இனப் பிரச்னை ஏற்பட்ட பிறகு இந்த வழிபாடு தொடர்ச்சியாக நடப்பது தடைபட்டது. 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் ராமநாதபுரத்தைச்



தீவும் ஒன்று. 1885ல் இதே மாதிரியான இன்னொரு குத்தகைப் பத்திரம் கையெழுத்தானது. 1913ல் ராமநாதபுரம் ராஜாவுக்கும் இந்தியவுக்கான வெளியுறவுத் துறை அமைச்சருக்கும் இடையில் ஒரு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்தக் குத்தகைப் பட்டியலிலும் கச்சத்தீவின் பெயர் இடம்பெற்றிருந்தது. அதாவது, இந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகளையும் ஆட்சி செய்த பிரிட்டிஷ் அரசு கச்சத்தீவை இந்தியாவின் ஒரு பகுதியாக அங்கீகரித்ததே தவிர, இலங்கையின் ஒரு பகுதியாகக் கருதவில்லை. 1948 செப்டம்பர் ஏழாம் தேதி மெட்ராஸ் எஸ்டேட் (அபாலிஷன் அண்ட் கன்வர்ஷன் இன்டு ரயத்வாரி) சட்டத்தின் கீழ் சென்னை மாகாணத்தில் ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட்டபோது கச்சத்தீவு சென்னை மாகாணத்தின் ஒரு பகுதியானது.

சேர்ந்த சீனிக்குப்பன் படையாச்சி என்பவர் இந்த ஆலயத்தைக் கட்டியதாகவும் தங்கச்சி மடத்தைச் சேர்ந்த பாதிரியார் ஒருவர் இந்தக் கோவிலில் பூசைவைப்பார் என்றும் கெஸட்டியர் சொல்கிறது. இரண்டாம் உலகப் போர் காலகட்டத்தில் பிரிட்டிஷார் இந்தத் தீவை, வெடிகுண்டுகளை வெடித்துப் பயிற்சி செய்யப் பயன்படுத்தினார்கள்.

கச்சத்தீவின் உரிமை யாருக்கு?

ராமநாதபுரம் ராஜாவின் ஜமீன்தாரி உரிமைகளை வைத்தே 1974வரை கச்சத்தீவு இந்தியாவின் ஒரு பகுதி என்ற வாதம் முன்வைக்கப்படுகிறது. ஆனால், இது தொடர்பான எல்லா ஆவணங்களும் புதுதில்லிக்கு எடுத்துச் செல்லப்பட்டுவிட்டன. அவை தற்போது ரகசிய ஆவணங்களாகப் பராமரிக்கப்படுகின்றன. 1902ல் இந்தத் தீவை அவருக்கு இந்திய அரசு வழங்கியது. அவருடைய ஜமீனுக்காக அவர் வழங்க வேண்டிய பெஷ்குஷ் (குத்தகைத் தொகை) இந்தத் தீவையும் உள்ளிட்டே கணக்கிடப்பட்டது. இந்தத் தீவைச் சுற்றி மீன் பிடிக்கும் உரிமை, தீவில் மேய்ச்சல் உரிமை, வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தப்படும் உரிமை ஆகியவற்றை ராமநாதபுரம் ராஜா குத்தகைக்கு விட்டிருந்தார்.

இதற்கு முன்பாகவே 1880 ஜூலையில் முகமது அப்துல்காதர் மரைக்காயர் என்பவரும் முத்துச்சாமிப் பிள்ளை என்பவரும் ராமநாதபுரம மாவட்ட துணை ஆட்சியர் எட்வர்ட் டர்னர் பெயரில் ஒரு குத்தகைப் பத்திரத்தைப் பதிவுசெய்தார். சாயம் தயாரிப்பதற்காக 70 கிராமங்களிலும் 11 தீவுகளிலும் வேர்களைச் சேகரிக்க இந்த குத்தகை உரிமை வழங்கியது. அந்த 11 தீவுகளில் கச்சத்

1972ல் தமிழ்நாடு அரசால் பதிப்பிக்கப்பட்ட ராமநாதபுரம் மாவட்ட கெஸட்டியர், கச்சத்தீவை ராமநாதபுரம் மாவட்டத்தின் ஒரு பகுதியாகக் காட்டுகிறது. கச்சத்தீவின் சர்வே எண் 1250. இருந்தபோதும், கச்சத்தீவு ஒரு சர்ச்சைக்குரிய பகுதி என்ற வகையிலேயே அந்த விவகாரத்தை அணுகியது இலங்கை அரசு.

பிரச்னை துவங்கியது எப்போது?

கச்சத்தீவு யாருக்குச் சொந்தம் என்ற பிரச்னை 1920களிலேயே துவங்கிவிட்டது. பாக் நீரிணை — மன்னார் வளைகுடா பகுதிகளில் எல்லையை வரையறுப்பதற்காக 1921 அக்டோபர் 24ம் தேதி கொழும்பு நகரில் சென்னை மாகாண அதிகாரிகளுக்கும் இலங்கை அதிகாரிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அந்தக் கட்டத்தில் இலங்கை சார்பாக கலந்துகொண்ட சுங்க வரிக்கான முதன்மை கலெக்டர் ஹார்ஸ்பர்க், கச்சத் தீவு இலங்கைக்கு வரும்படி எல்லையை வகுக்க வேண்டும். இல்லாவிட்டால் மாநாட்டை நிறுத்திவிடலாம் என்று சொன்னார். இதை ஏற்காத இந்தியக் குழு, வேண்டுமானால் அந்தப் பகுதியின் மீன்பிடி உரிமையை மட்டும் தருவதாகச் சொன்னது. ஒப்பந்தமும் கையெழுத்தானது. ஆனால், இந்த ஒப்பந்தத்தை காலனி அலுவலகம்

ஏற்கவில்லை. ஆகவே சட்டரீதியாக இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கே வரவில்லை.

இந்திய சுதந்திரத்திற்குப் பிறகும் இந்தப் பிரச்னை அவ்வப்போது எழுப்பப்பட்டது. இருந்தபோதும் இந்திய அரசு இந்த விவகாரத்தில் பெரிதாக ஆர்வம் காட்டவில்லை. 1967ல் தி.மு.க. பெரும் எண்ணிக்கையில் நாடாளுமன்ற உறுப்பினர்களை மக்களவைக்கு அனுப்பியது. இதற்குப் பிறகு பெரிய அளவில் இந்த விவகாரம் அவையில் எழுப்பப்பட்டது. அப்போதெல்லாம் பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சி, ஜனசங்கம் ஆகியவை தி.மு.கவுக்கு ஆதரவளித்தன. 1968 மார்ச்சில், ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் தமிழ்நாடு சட்டப்பேரவையில் பிரஜா சோஷலிஸ்ட் கட்சியால் கொண்டுவரப்பட்டது. ஆனால், இந்த காலகட்டத்தில், இந்த விவகாரத்தைக் கண்டுகொள்வதில்லை என்ற போக்கையே கடைபிடித்தது மத்திய அரசு.

1969ல் லண்டனில் காமன்வெல்த் மாநாடு நடந்தபோது, இலங்கைப் பிரதமர் டட்லி சேனநாயகவும் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியும் நிலைமை மோசமாகும் வகையில் எதையும் செய்வதில்லை என ஒப்புக்கொண்டனர். மேலும், புனித அந்தோணியார் திருவிழாவின்போது, சாதாரண உடையணிந்த காவலர்களே அங்கு நிறுத்தப்படுவார்கள் என்பதையும் இருதரப்பும் ஏற்றுக்கொண்டனர்.

ராமநாதபுரம் ஜமீனின் ஆவணங்களைக் காட்டி தி.மு.க. அரசு கச்சத்தீவு இந்தியாவுக்கே சொந்தம் என்று கூறினாலும் மத்திய அரசு அதனை ஏற்கவில்லை. ஒருகட்டத்தில், அந்தத் தீவின் மீதான வரலாற்று உரிமை இந்தியாவிடம் இருந்ததா என ஆராயும்படி இந்திரா காந்தி தெரிவித்தார். ஒவ்வொரு தரப்பும் ஒவ்வொரு கருத்தை முன்வைத்தனர். 1973வாக்கில் கச்சத்தீவு மீதான உரிமையை இந்தியா விட்டுவிட முடிவுசெய்ததுபோலத் தெரிந்தது.

இதையடுத்து, தனது சட்ட அமைச்சரான செ. மாதவனுடன் இந்திரா காந்தியைச் சந்தித்த முதலமைச்சர் மு. கருணாநிதி கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தார். இந்த விவகாரத்தில் தனது நிலைப்பாட்டை எழுத்து பூர்வமாகவும் பிரதமரிடம் அளித்தார் மு. கருணாநிதி. மாநில அரசு சேகரித்த ஆதாரங்களின்படி, "கச்சத்தீவின் மீது இலங்கை அரசானது ஒருபோதும் இறையாண்மை செலுத்தியதில்லை என்பதைச் சுட்டிக்காட்ட போதுமான ஆதாரங்கள் இருக்கின்றன. அநாதி காலம் தொட்டே தமிழ்நாடு கடற்கரையில் முத்து, சங்கு எடுக்கும் உரிமை ராமநாதபுரம் ராஜா உள்ளிட்ட தென்னிந்திய ஆட்சியாளர்களுக்கே உரியதாக இருக்கிறது என வரலாற்று ஆவணங்கள் சுட்டிக்காட்டுகின்றன. ராமநாதபுரம் ராஜா இலங்கை அரசுக்கு எந்தக் காலத்திலும் வாடகையோ, ராயல்டியோ செலுத்தியதில்லை" என முதலமைச்சர் மு. கருணாநிதி தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

1970களில் இந்தியப் பிரதமராக இருந்த இந்திரா காந்திக்கும் இலங்கையின் பிரதமரான சிறிமாவோ பண்டாரநாயகவுக்கும் நல்ல நட்புறவு இருந்தது. "கச்சத்தீவு தொடர்பான பேச்சு வார்த்தை ஒரு கட்டத்தில் முறிந்துபோனது. அந்தத் தீவின் மீது இந்தியாவுக்கு இருக்கும் உரிமையை விட்டுத்தர வேண்டாம் என்று இந்திய அதிகாரிகளின் குழு பிரதமர் இந்திரா காந்தியிடம் வலியுறுத்தியது. உடனே சிறிமாவோ இந்திரா காந்தியைத் தொடர்புகொண்டு, தனக்கு உதவும்படி கோரினார். இல்லாவிட்டால் தனக்கு அரசியல் எதிர்காலமே இல்லாமல் போய்விடும் என்று சொன்னார். சிறிமாவோவின் சிக்கலான சூழ்நிலையைப் புரிந்துகொண்டார் இந்திரா காந்தி. இந்திய அதிகாரிகள் ஏதும் சொல்வதற்கு முன்பாகவே ஒப்பந்தத்தை முடிவுசெய்யும் வகையில் அதில் தலையிட்டார்" என இந்த ஒப்பந்தத்தின் பின்னணி குறித்து Ethnicity Versus Nationalism: The Devolution Discourse in Sri Lanka நூலில் குறிப்பிடுகிறார் பார்த்தா கோஷ்.

இந்தப் பின்னணியில்தான், 1974 ஜூன் 28ஆம் தேதி இந்திய அரசும் இலங்கை அரசும் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. அதன்படி, இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லைக்கோடு வரையறுக்கப்பட்டது. கச்சத் தீவு இலங்கைக்குச் செல்லும்படி இந்தக் கோடு வரையறுத்தது. இருந்தபோதும், அங்கே மீன் பிடிக்கும் உரிமையும் யாத்ரீகர்கள் அந்தத் தீவுக்கு விசா இன்றி செல்லும் உரிமையும் பாதுகாக்கப்பட்டிருந்தன.

இந்திய மக்களவையில் இது தொடர்பாக விளக்கமளித்த அப்போதைய வெளியுறவுத் துறை அமைச்சர் ஸ்வரண் சிங், "இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டிருப்பதன் மூலம் கடந்த காலத்தில் இரு தரப்பினரும் அனுபவித்தது போலவே மீன் பிடிக்கும் உரிமை, கப்பல்களைச் செலுத்தும் உரிமை, யாத்திரை செல்லும் உரிமை ஆகியவை எதிர்காலத்திலும் தொடரும்" என்று குறிப்பிட்டார்.

இந்த ஒப்பந்தத்தின் ஐந்தாவது பிரிவு இதைப் பற்றி விளக்கமாகக் கூறுகிறது. "இதுவரை இருந்ததைப் போலவே இந்திய மீனவர்களும் யாத்ரீகர்களும் கச்சத்தீவுக்கு வந்துபோக முடியும். இதற்காகப் பயண ஆவணங்களையோ விசாவையோ இலங்கை கேட்காது" என்கிறது அந்தப் பிரிவு. இருந்தபோதும் அதில் மீன் பிடி உரிமைகள் குறித்து சொல்லப்படவில்லை. இது குறித்து



நாடாளுமன்றத்தில் கேள்வியெழுப்பப்பட்டபோது, அந்த பாரம்பரிய உரிமை மாறாது என்று பதிலளித்தார் ஸ்வரண் சிங்.

எங்கே உள்ளது கச்சத்தீவு?

இந்த ஒப்பந்தத்திற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தார் முதலமைச்சர் மு. கருணாநிதி. இந்த கடல்சார் ஒப்பந்தம் மாநில அரசின் உரிமைகளை கடுமையாக பாதித்தாலும் அந்த ஒப்பநத்தத்தின் ஷரத்துகளை மாநில அரசுடன் மத்திய அரசு விவாதிக்கக்கூட முன்வரவில்லை என்று குறிப்பிட்டார் மு. கருணாநிதி. பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருந்த காலத்திலும் பிரதமரையும் வெளியுறவுத் துறை அமைச்சக அதிகாரிகளையும் சந்தித்த அவர், கச்சத்தீவு இந்தியாவுக்கு சொந்தமானது அதனை இலங்கைக்குக் கொடுக்கக்கூடாது என்று வாதிட்டார். அதை மீறி ஒப்பந்தம் கையெழுத்தான நிலையில், 1974 ஜூன் 29ஆம் தேதி அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டப்பட்டது. அதன்படி ஆகஸ்ட் 21ஆம் தேதி தமிழ்நாடு சட்டமன்றத்தில் இந்த விவாகரம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஒப்பந்தத்தின் ஷரத்துகளை மறுபரிசீலனை செய்யும்படி மத்திய அரசிடம் கேட்டார் மு. கருணாநிதி. இந்த நிலையில், 1976ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் இரண்டாவது ஒப்பந்தம் இது தொடர்பாக கையெழுத்தானது. அதன்படி, “இந்திய மீனவர்களும் அவர்களது மீன் பிடிப் படகுகளும் இலங்கைக் கடல் பகுதியிலும் இலங்கையின் பிரத்யேக பொருளாதார மண்டலப் பகுதியிலும் இலங்கையின் அனுமதியில்லாமல் மீன்டிபிடிக்க மாட்டார்கள்” என்று கூறியது இந்த ஒப்பந்தத்தின் ஷரத்து. நெருக்கடி நிலை காலகட்டத்தில் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்ட நிலையில், இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

தீர்வு என்ன?

1974 மற்றும் 1976ஆம் ஆண்டு ஒப்பந்தங்களின்படி கச்சத்தீவு முழுமையாக இலங்கைக்கு அளிக்கப்பட்டுவிட்ட நிலையில், அந்தப் பகுதியில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்துவது, மீனவர்களைக் கைதுசெய்து, படகுகளைப் பறிமுதல் செய்வது ஆகியவை தமிழ்நாட்டில் கொந்தளிப்பை ஏற்படுத்தி வருகின்றன.

இந்த விவகாரத்திற்கு சில தீர்வுகள் முன்வைக்கப்படுகின்றன. 1. கச்சத் தீவையும் அதனைச் சுற்றியுள்ள கடற் பகுதிகளையும் இந்தியா இலங்கையிடமிருந்து நீண்ட கால குத்தகைக்கு எடுப்பது. இதற்கு உதாரணமாக தீன் பிகா விவகாரம் சுட்டிக்காட்டப்படுகிறது. தீன் பிகாவின் மீதான இறையாண்மை உரிமை இந்தியாவிடம் இருக்கிறது. ஆனால் நீண்ட காலக் குத்தகையின் கீழ் அந்தப் பகுதியை வங்க தேச மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள்.

இரண்டாவதாக, இந்திய மீனவர்களுக்கு உரிமம் அளித்து கச்சத்தீவு பகுதியில் மீன் பிடிக்க அனுமதிப்பது. 1974, 76ஆம் ஆண்டு ஒப்பந்தங்கள் கையெழுத்தான நிலையிலும்கூட, கச்சத் தீவு மற்றும் அதனை ஒட்டிய கடற்பரப்பில் தமிழக மீனவர்கள் மீன் பிடித்துவரும் நிலையில், இம்மாதிரி ஒரு உரிமத்தை வழங்குவது அந்தப் பகுதியில் மீன் பிடித்தல் தொடர்பாக எழுப்பப்படும் சிக்கல்களுக்கு ஒரு தீர்வாக அமையலாம்.

சரித்திரத் தொடர்



# சேரமான் கனவு

36

## 36. வஞ்சியை வளைத்த வஞ்சி !

கொற்றவன்

அந்திவானத்து பரிதியின் கதிர்களால் பொன்னை உருக்கி ஓடவிட்டாற்போல மின்னியபடி காட்சியளித்த தன்பொருநை நதியின் அலைகள் அன்று வழக்கத்தைவிடவும் அதிவேகத்தைக் காட்டுவதாகவே இருந்தது.

ஆற்றின் கரையோரம், ஒட்டிய பாதையில் நடந்த இருவர் பேசிக் கொண்டனர்.

“அடேயப்பா, இன்று அலைகளின் வேகத்தைக் கண்டால் காசிநகர் அழகியின் நாட்டியத்தைக் காணும் ஆவல் மிகுதியைக் காட்டுவதாக அல்லவா தெரிகிறது!”

“காசிநகர் காரிகையின் நாட்டியச் செய்தி முசிறித் துறைமுகம் வரையிலும் பரவியிருப்பதைப் பார்த்தால், அந்த ஆடலழகி பெரும் பெயர் பெற்றவள் எனப் புரிகிறது!”

“நீ நடையைச் சற்று வேகமாகப் போடப்பா! நாட்டியம் ஆரம்பித்துவிடப் போகிறது!”

“இதற்குமேல் என்னை என்ன ஓடவா சொல்கிறாய்? அதற்கு இன்னும் நேரம் நிறைய இருக்கிறது. நீ ஏன் பதைக்கிறாய்?”

அவர்கள் பேசிக் கொண்டே நடந்த அந்த பேராற்றின் மறுபுறம், உயர்ந்த மரங்கள் அடர்ந்த வனப்பகுதியாகவும், அதனிடையே வெகுதூரத்தில் தெரிந்த கோட்டை மதில்களும் அதற்குள் உயர்ந்திருந்த மாளிகைகளும் மாலை நேரத்து செவ்வானில் அழகிய ஓவியம் தீட்டினாற்போலத் தெரிந்தது.

கோட்டைக்குள்ளே உயர்ந்து நின்ற அரச மாளிகையின் விதானங்களில் சேரமான் செங்குட்டுவரின் விற்கொடி காற்றில் அசைந்து பறக்கும் அழகை வியந்தபடி சிலர் பார்த்தபடி நின்றனர்.


நாட்டியம் நடக்கும் மண்டபத்தின் அருகே செல்லக் கூட முடியாதவண்ணம் கூட்டம் பெருந்திரளாகத் திரண்டிருந்ததால், மண்டபத்தின் அருகே செல்வதற்கு கூட்டத்தினிடையே வழி தேடியபடி சிறுவர் சிறுமிகளும் காளையரும் கன்னியரும் அங்கும் இங்குமாய் அலைந்தபடி திண்டாடினார்கள்.

அரச மாளிகைக்கும் கனக மாளிகைக்கும் நடுவே அடர்ந்த சோலைவனமாக நீண்ட பாதையெங்கும் மக்கள் வெள்ளம்!

இதன் இடைப்பட்ட வெளியாகத் திகழ்ந்த பெருவெளியில் நாட்டியத்துக்கும், அரசவிழாக்கள் நடப்பதற்குமாகவே கட்டுவிக்கப்பட்ட அந்த உயர்ந்த அரங்கின் இருபுறமும் தோரணங்களாலும் மலர் மாலைகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

அதன் நடுநாயகமாக அரைவட்ட வடிவில்

வாத்ததியங்களுடன் குழுமியிருந்தது காசிநகர் கலைக்குழு.



அரங்கின் பக்கவாட்டின் முதல் வரிசையில் சேரர்கோன் செங்குட்டுவர் உயர்த்தொரு அழகிய மயிலாசனத்தில் அமர்ந்திருக்க, அவர் அருகே கோப்பெருந்தேவி வேண்மாளும், அரசிக்கருகே கயல்விழியும் அமர்ந்திருக்க, அவள் பின்னால் தோழி முத்துநகையும் நின்றிருந்தாள்.

அரசர்க்கு வலப்பக்கத்தில் அமைச்சர் அழும்பில்வேளும், மற்றபிற அரசப் பிரதிநிதிகளும் அமர்ந்திருந்தனர்.

அவர்களுக்கு எதிர்வரிசையில் அரங்கின் மறுபுறத்தில் குணவாயிற்க்கோட்டத்து இளையவேள் இளங்கோவடிகளும், அவரருகே முதுபுலவர் குளமுற்றத்தார், புலவர் இளங்கீரர் உள்ளிட்ட புலவர் பெருமக்களும், அறிஞர் பெருமக்களுமாக வீற்றிருந்தனர்.

அரங்கின் முன்பாகத் நீண்ட பச்சைப் பட்டாடை விரித்தாற்போல பரந்த வெளியாக விரிந்த இடமெல்லாம் மக்கள் வெள்ளமென திரண்டு அமர்ந்திருந்தனர்.

காசிநகர் இசைக் குழுவினரின் அருமையான இசைவெள்ளத்தில் கூட்டம் கட்டுண்டு கிடந்தது.

இடையிடையே பேரரசரையும் இளங்கோவடிகளையும் கண்டு ஆரவாரம் செய்தபடி இருந்தனர். அகிலமெலாம் புகழும் சேரப் பேரரசரை அடிக்கடி அம்மாளிகை மக்கள் பார்த்திருந்தாலும், அவரின் திருமுகத்தைக் காணமாட்டோமா என ஏங்கித் தவிக்கும் மக்களாகவே அவர்கள் எப்போதும் இருந்தார்கள் என்பதால், அவரது வீர தீரக் கதைகளைத் தாம் கேள்விப்பட்ட விதங்களில் உரையாடிக் கொண்டிருந்தனால் கூட்டத்தில் ஆங்காங்கே சலசலப்பாகவே இருந்தது.

தன்னருகே அமர்ந்திருந்த கயல்விழியிடம் கோப்பெருந்தேவி வினவினார். “கயல்விழி, இதுபோன்ற இசைவிழாவைக் இதற்குமுன் கண்டிருக்கிறயல்லாவா?”


“இல்லையம்மா! நான் குழந்தைப் பருவத்தில் அரண்மனையில் இருந்த நினைவே மிகவும் அரைகுறையாகத்தான் நினைவுக்கு வருகிறது. எனவே இதுபோன்ற விழாவைக் காண்பது என்னைப் பொருத்தவரை இதுவே முதல்முறை!”

“அப்படியானால் இன்றைக்கு நீ அதிசயத்தின் உச்சிக்கே போவாய்!”

“உண்மையாகவா?”

“ஆம்! இப்பொழுது காஞ்சனமாலா வரப்போகிறாள். அவள் ஆட்டத்தைக் காணக்கோடி கண் போதாதாம்! கங்கையாற்றங்கரையில் அவள் ஆடிய ஆட்டத்தைக் கண்ட சிலர், சேரநாட்டுக்கு அவள் விஜயம் செய்யவிருக்கிறாள் என்ற தகவல் பரவியபோதே வஞ்சியை வளைக்க வரும் வஞ்சி எனப் புகழ்ந்து பாட ஆரம்பித்துவிட்டார்கள் என்றால் பார்த்துக் கொள்!”

வேண்மாள் கூறியதைக் கேட்டு வியந்த



காஞ்சனமாலாவின் நாட்டியத்துக்கு மொத்த அரசப் பிரதிநிதிகளும் வந்து கூடியிருப்பது ஒருபுறமென்றால், இவ்வளவு கூட்டமும் இவளது வருகையை ஒட்டி திரண்டிருக்கிறதென்றால், இவள் அன்றிரவு தன்னை நேரில் வந்து அழைத்திருக்க வேண்டாமே!...

அரசர் முதல் ஆண்டி வரை இவளது அழைப்பு நீண்டிருக்கிறதென்றால், மிகவும் வியப்புதான்! அதிலும் அன்றைக்கு அவள் தன்னை அழைத்த விதமும், உரையாடிய விதமும் அவரது மணக் கண்முன் வந்து போனது.

இசைவிழா தொடங்குமுன் தன்னிடம் வந்து கரங்களைப் பற்றிக் கொண்டு சேரமான் செங்குட்டுவர் கூறிய வார்த்தைகளும் அவருக்கு நினைவில் வந்தது.

“இளங்கோ, காஞ்சனமாலாவின் நாட்டியத்தைக் காண நீ வருவாய் என நினைக்கவில்லை! ஒருவேளை நீ வராது போனால், உன்னைப் பல்லக்கில் வைத்து சிறைப்படுத்தியாவது இங்கு அழைத்துவர வேண்டும் என இந்தப் அன்றைக்கு அரசவை வந்து அனைவர் முன்பாகவும் நின்று வேண்டுகோள் விடுக்கிறாள்! குணவாயிற் கோட்டத்து அரசரை வரவழைப்பது தங்கள் கடமை என்று என்னிடமே அவள் கூறியதைக் கேட்டு வியந்து போனேன்.” எனப் பேரரசர் கூறிய வார்த்தைகளைக் கேட்டு இளங்கோவும் வியந்துதான் போனார்.

கயல்விழிக்கு காஞ்சனமாலாவைப் பார்க்க வேண்டும் எனும் ஏகமாய் ஆவல் ததும்பியது.

கயல்விழிக்கு மட்டுமா?

அங்கே கூடியிருந்த அத்துணை பேரின் கண்களும் காஞ்சனமாலா எப்போது தோன்றுவாள் என்றே எதிர்பார்த்துக் காத்துக் கிடந்தன.

வஞ்சியில் தோன்றிய அந்த மாலைப் பொழுதே காஞ்சனமாலாவின் நாட்டியத்துக்கான பொழுதாகவே வஞ்சியில் வரிக்கப்பட்டிருந்தது.

அந்த வஞ்சிக்கோட்டையே காஞ்சனமாலை என்ற வஞ்சியின் கோட்டையாகவே மாறிப் போயிருந்ததைக் காண முடிந்தது.

இளங்கோ ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தவராகவே தெரிந்தார்.

இந்தக் காஞ்சனமாலாவிடம் ஏதோ ஓர் இனம்புரியா ஈர்ப்பு சக்தி இருக்கத்தான் செய்கிறது. இல்லாவிடில் இப்படியொரு கூட்டம் மாளிகையில் கூடியிருக்க முடியுமா? இவ்வாறாக எண்ணியபடி அமர்ந்திருந்தவரின் சிந்தனையைத் திடீரென அங்கே எழுந்த பெரும் கரவொலி கலைத்தது.

எழுந்த குதூகலக் குரலுக்கும், வாழ்தொலிக்கும் காரணம்...

அந்த நாட்டிய மேடையின் நடுவே அமைக்கப்பட்டிருந்த திரை விலகிய அடுத்த கணம்...



அங்கே கூப்பிய கரங்களுடன் சிரம் பணிந்து நின்ற காஞ்சனமாலையைக் அனைவரும் கண்டதுதான்!

தனக்கு முன்னால் குவிந்திருக்கும் ஜனக்கடலைக் கண்டதும் மிகவும் பணிவுடன் மக்கள் கூட்டத்தை வணங்கியபடி நின்றவள், என்ன நினைத்தாளோ கண்களில் நீர் மல்கியது.

வணங்கிய கரங்களைக் விலக்காமலே அன்ன நடையிட்டு தான் நின்றிருந்த இடத்தினின்று வந்தவள், தனக்கு இடதும் வலதுமாக அரைவட்ட வடிவில் அம்மேடையில் அமர்ந்திருந்த தனது வாத்தியக் குழுவினரை வணங்கியபடியே அவர்களைக் கடந்து, அரங்கின் வலப்புற வரிசையில் மயிலாசனத்தில் அமர்ந்திருக்கும் மாமன்னரை நோக்கி மயிலென நடையிட்டு வந்து அவருக்கே நேரெதிராய் நின்று சிரம் பணிந்தாள்.

மாமன்னர் ஆசி வழங்கும் விதமாய் வலக்கரம் உயர்த்தி வாழ்த்தினார்.

நிமிர்ந்த அவளது விழிகள் மாமன்னரின் வரிசையில் அமர்ந்திருக்கும் எவரையும் விட்டுவைக்கவில்லை! மன்னருக்கு இருபுறமும் வீற்றிருக்கும் அமைச்சர், தளபதி, ராஜகுரு மற்றும் கோப்பெருந்தேவி, கயல்விழி, முத்துநகை, அவர்களோடு அமர்ந்திருக்கும் இன்னும் பிற அரச மகளிர்களையும் பார்வையால் அளந்தபடி அளவாய் வணங்கினாள்.

அங்கிருந்து நேராகத் திரும்பியவள் இளங்கோ அமர்ந்திருக்கும் திசை நோக்கி சில அடிகள் நடந்து அவருக்கு நேரெதிராய் நின்று வணங்கியவள், இளங்கோவைக் கூர்ந்து நோக்கியவளின் விழிகளில் ஒரு வினாகுறியுடன் வில்லொத்த புருவங்கள் இரண்டும் ஏற்ற இறக்கம்காட்டின. ‘எப்படி இருக்கிறேன் நான்?’ என்ற தொனிக்கும் வினா அது! அத்துடன் இதழ்களில் அவரை நோக்கி ஒரு குறுநகையும் புரிந்தபடியே வணங்கினாள். இதெல்லாம் இளங்கோவின் அருகிலுல்லோர் அறிந்திட வாய்ப்பில்லாதவாறு செய்துவிட்டாள் என்பதுதான் சாமர்த்தியம்! எல்லாம் கணநேரம்தான்!


இவள் மிகவும் குறும்புக்காரப் பெண்ணாக அல்லவா இருக்கிறாள்! இவளிடம் மிகவும் கவனமுடன் இருக்கவேண்டும் என எண்ணியவாறே இளங்கோவும் அவளை வாழ்த்தியருளினார்.

அதன்பிறகுதான் அவர் அருகில் அமர்ந்திருக்கும்

புலவர் பெருமக்களையும், மேடையில் வீற்றிருக்கும் அனைவரின் வாழ்த்தினையும் பணிவோடு பெற்றுக் கொண்டவள், மீண்டும் அந்த அரங்கின் மத்தியில் வந்து நின்று திரண்டிருந்த மக்கள் வெள்ளத்தை கண்டு மகிழ்ந்தவாறே சில நொடிகள் கைகூப்பி நின்றாள்.

அவளைக் கண்ட கண்கள் எல்லாம் இமைக்க மறந்தன என்றே சொல்லும் அளவுக்கு அனைவரின் பார்வையும் அவள் மீதே நிலைக் குத்தியிருந்தன.

இதுவரை வஞ்சியில் தோன்றாத அழகியா இவள்? காஞ்சனமாலாவைக் காண ஏன் இவ்வளவு கூட்டம் கூடியிருக்கிறதென தங்களுக்குள் வினா எழுப்பிய



சிலருக்கும், இதே வினாவை வாய் திறந்தே கேட்ட சிலருக்கும்கூட அதற்கான விடையாகத்தான் அவள் தோன்றியதாகப் பட்டது.

அன்றைய மஞ்சள் மாலைப் பொழுதின் பொன்னிறக் கதிர்கள் எல்லாம் ஒருங்கே தோன்றி பெண் உருவாகக் கொண்டு நின்றதைப் போல் தோற்றமளித்தாள் காஞ்சனமாலா!

செவ்வானத்தின் கதிர்கள் அவள் மேனியின் பொன்னிறத்தை மேலும் கூட்டிக் காட்டியதில் சிவந்த தங்கம் போன்று அவள் மின்னினாள்.

அவள் அணிந்திருந்த பொன்னிறப் பட்டாடையும் பலவித ஆபரணங்களும் கண்கள் கூசும் விதமாகப் பளபளத்தன. அந்தப் பொன்னிறப்பட்டில் காசிநகர் சரிகை வேலைப்பாடுகளுடனும், ஆங்காங்கே காட்சி அளித்த மயில் சித்திரங்களுடனும் மிகவும் மென்துகிலாக இருந்ததால், அதன் வழியே தெரிந்த காஞ்சனமாலாவின் உடலழகும் அதன் வாளிப்பும் வனப்பும் பெண்களுக்கே கிறக்கம் தரக்கூடியதாக இருக்கையில், ஆடவர் நிலையைச் சொல்லவும் வேண்டுமோ?

அவளைக் காணும் சில இளைஞர்கள் கள்வெறிக் கொள்ளும் நிலைக்கு வந்திருப்பதை, கூட்டத்தில் நெருக்கியடித்து மேடைக்கு முன்வரிசையில் வருவதற்கு அவர்கள் பிரயத்தனப்படுவதில் தெரிந்தது.

காஞ்சனமாலா மேடையின் நடுநாயகமாக வந்து நின்று பேரரசரை வலப்புறமும், இளங்கோவை இடப்புறமும் திரும்பிப் பார்த்தவள், தான் ஆடும் இடத்துக்கு நேரெதிர் திசையில் பக்கவாட்டில் இருக்கிறார்கள் என்பதை உறுதிபடுத்திக் கொள்ள, நின்ற இடத்தை ஒரு அடையாளமாகக் குறித்துக் கொண்டாள்.

அப்படி நின்றவளை அளவெடுத்துக் கொண்டிருந்த பல கண்களும், அவளது உருவத்தைத் தங்கள் மனச்சித்திரமாய் தீட்டிக் கொள்வதற்கெனவே அவள் நிற்பதாகப்பட்டது பலருக்கும்.

அன்று அவளை அளவெடுத்தது ஆடவர் மட்டுமல்ல, மகளிரும்கூட அந்த பூலோக சுந்தரியை வைத்தகண் வாங்காமல் அளவெடுத்ததுக் கொண்டிருந்தனர்.

அவளது செழிப்பான கன்னங்கள், அளவான நாசி, பவழத்தை மேலும் பளபளப்பாக்கி செதுக்கி வைத்தாற்போன்ற அதரங்கள், தெளிந்த பிறைநுதலும், தூக்கி முடியப்பட்ட கருங்குழல், அதற்கும் அடங்காமல் பின்னால் நீண்டு விரிந்து அலையலையாய் அழகூட்டியது.

சந்திர வதனத்துக்கு கீழே இறங்கிய சங்கு கழுத்தின் அழகை ஆபரணங்களும் மறைக்க முடியாது என்பதுபோல வெளிப்பட்டுக் காட்டியது.

விலை மதிக்க முடியாத நல்முத்துக்களும், ரத்தினங்களும் கலந்த ஆபரணங்கள் அவளது முன்னழகின் அழகை பன்மடங்கு கூட்டிக் காட்டின. கால்களில் ஒலித்த சலங்கை அவளது ஒவ்வொரு அடிக்கும் மயக்கும் நாதத்தைக் கிளப்பியது.

இன்னும் அவளை எவ்விதமெல்லாம் அளவெடுக்கலாம் எனப் பலரும் நினைத்தபடி இருந்தனரோ அவள் அதற்குமேல்



வருகையை அறிந்து வஞ்சி நகர் முழுதுமிருந்து இங்கே பெருமளவில் கூடியிருக்கும் அனைவருக்கும் எங்கள் கலைக்குழுவின் சார்பில் அன்பான வணக்கங்களைப் பணிவோடு சமர்ப்பிக்கிறோம்! அத்துடன் நாட்டியத்தைத் தொடங்கி வைப்பவதற்கு சக்கரவர்த்தி அவர்களைத் பணிவன்போடு வேண்டுகிறோம்!" என மாமன்னரை நோக்கி பணிந்தாள்.

காஞ்சனமாலாவின் குரலைக் கேட்டவர்கள், அதிலும் அவளது தேமதுரத் தமிழைக் கேட்டவர்கள், யாழும் குழலும் சேர்ந்திசைத்த இன்னிசையாகவே மயங்கினார்கள். அவளது குரலைக் கூட தங்கள் மனதுக்குள் பாடம் செய்யத் தொடங்கினர் பலர்.

இடங்கொடாமல் தன் குழுவினரைப் பார்த்து ஆட்டத்தை ஆரம்பிக்கலாமா என்பதைப் போல பார்வையை வீசினாள்..

அவர்கள் அவளது பார்வையை உணர்ந்தபடி ஆமோதிப்பதை சைகையில் காட்டினர்.

மக்களை நோக்கித் திரும்பிய காஞ்சனமாலா தன் தலைக்கு மேலாக இருகரம் உயர்த்திக் கூப்பியதும், மொத்த கூட்டமும் சில நொடிகள் ஆர்ப்பரித்து, அப்படியே அமைதியாய் அடங்கியது. அவள் பேசப் போவதைக் கேட்க ஆவலுடன் அமைதி காத்தது.

காஞ்சனமாலா பேசத் தொடங்கினாள்.

"பார் புகழும் பெருமைமிகு சேரச் சக்கரவர்த்தி செங்குட்டுவ திருமகனார்க்கு முதற்கண் எங்களின் பணிவான வணக்கங்கள்! எங்களின் அழைப்பை ஏற்று இங்கே சிறப்பு விருந்தினராக இந்த நாட்டியத்தைக் காண வந்திருக்கும் இளங்கோ அவர்களுக்கும் எங்கள் கனிவான வணக்கங்கள்!" என நோக்கியவளின் பார்வை சில நொடிகள் இளங்கோ மீது நிலைத்து மீண்டும் மக்களை நோக்கித் திரும்பியது. "எங்கள் கலைக்குழுவின்

மொத்த ஜனக்கடலும் ஆர்வமாய் காத்திருந்தது அக்கணத்துக்குத்தானே!...

அதற்கு மேலும் மாமன்னர் காலம் தாழ்த்துவாரா?

"காஞ்சனமாலா நாட்டியத்தைக் காண அனைவரும் ஆவலாகவே இருக்கிறோம். தொடங்கட்டும் காசி நகர் களிநடனம்!..." என நாட்டியத்தைத் தொடங்கி வைத்தார் பேரரசர்.

காசி நகரக் குழுவினர் இறை வணக்கப் பாடலைப் பாடத் தொடங்கியதும், வஞ்சி மாளிகையில் காஞ்சனமாலா தனது முதல் நாட்டியத்தை ஆடத் தொடங்கினாள்.

அந்த ஆட்டம் என்னவெல்லாம் விளைவை ஏற்படுத்தப் போகிறது என்பது அங்குள்ள பலருக்கும் தெரியாது!

விந்தை என்னவெனில் தனது ஆட்டம் ஏற்படுத்தப் போகும் விளைவை தானே அறியாமலேதான் காஞ்சனமாலா ஆடத் தொடங்கினாள்!

(கனவு தொடரும்...)

# பலூனுக்குள் ஒரு பலூன்

பலூனுக்குள் ஒரு பலூன்
இருப்பதைக் கண்டேன்
இதய வடிவ குட்டி பலூன்
பெரிய பலூன் குதித்தால்
குட்டி பலூனும் குதிக்கிறது
பெரிய பலூன் பறந்தால்
இதய பலூனும் பறக்கிறது

பெரிய பலூனுக்குள்
துடிக்கும் இதய பலூன்
யாருடைய காதல்
பெரிய பலூனுக்குள்
துடிக்கும் குட்டி பலூன்
எத்தனை மாதம்

இதய பலூனை
பெரிய பலூன்
எப்படிப் பிரசவிக்கும்?
பெரிய பலூனை
இதய பலூன் எப்படி
அம்மா என்றழைக்கும்?

நான் கவலையோடே
பெரிய பலூனுக்குள்
மிதக்கும் இதய பலூனைப்
பார்க்கிறேன்

கவலையற்று
ஆனந்தமாய் குதிக்கிறது
அது அதன் உலகத்தில்தான்
ஏற்கெனவே
பிறந்துவிட்டதே

**மதார்**

# அந்திவானம்

அந்தி வானமோ திரைச்சீலை!
அதிலே வண்ண ஓவியங்கள்!
சிந்திய வண்ணம் எதுவென்று
தெரிந்தவர் வந்து சொல்லுங்கள்!

மலையும் மடுவும் தெரிகிறது!
மரங்களைப் போலவும் தெரிகிறது!
கலையும் மேகம் விலங்குகளாய்
காட்சிப் படுத்திக் கலைகிறது!

ஓடை போல விரிகிறது!
ஓடும் நீரும் தெரிகிறது!
ஆடை விரித்துக் காய்வதுபோல்
அழகாய் தோற்றம் தருகிறது!

மேகவிளிம்பு மனங்கவர்ந்து
மின்னிப் பொன்னாய் ஒளிர்கிறது!
ஆகமொத்தம் அழகெல்லாம்
ஆகாயத்தில் திரள்கிறது!

இருட்டும் முன்னே எல்லோரும்
எழிலை வந்து பாருங்கள்!
இருக்கும் மனதின் பாரங்கள்
இதனால் இறங்கும்; வாருங்கள்!

**இராதை பிரபாகரன்**

# தன்னைத்தானே உணர்வதே ஞானம்!

முதுகெலும்புகள் நிமிர்ந்திருந்தும்
முடிவுகளால் தளர்ந்தவர்கள்
நினைத்ததைச் சாதித்தும்
நடக்காததில் நோகும் பிறப்புகள்
ஏக்கப் பெருமூச்சினுள் வெந்துவெந்தே
நித்தம் வாழ்பவர்கள்
என்றேனும் மாறும் வாழ்க்கைக்கு
என்றென்றும் கனாக்காணும் ஈசல் பூச்சிகள்

வந்தவர் போனவர் பற்றியெல்லாம்
பகடி பேசும் பழையப் போர்வாள்கள்
அடிப்பவன் ஓங்கியடித்தால்
அதிர்ச்சியிலேயே மூச்சைவிடும்
அற்ப உயிரின் பாவப் பிராணிகள்
எதிலெல்லாம் ஏற்றம் உண்டென
தேடித் தேடியே இருப்பதைத்
தொலைப்பவர்க இருக்க இருக்க
மேலேறி தானே
பேராசையின் பள்ளத்தில்
வீழ்ந்து ஒழிபவர்கள்
குடிக்கக் கஞ்சு போதும்
உடுத்த ஆடை போதும் என்றிருந்திருந்தால்
அடுத்தது மகிழ்ச்சி மகிழ்ச்சி
என்பதை அறிந்தும்
ஆழ்கடலைத் தொடாதவர்கள்
பிடித்தது பிடிக்காதது என்று
பகுத்துப் பகுத்தே
உணர்ச்சிகளைக்கூட ஏற்றயிறக்கத்துள்
தள்ளியவர்கள் பின்
தவிக்கத் தவிக்க மூச்சடக்கி
வாழ்க்கையை ஞானம்தேடியே இழப்பவர்கள்!

இருப்பது ஒரு வாழ்க்கை யென்றதே
சிறப்பாக வாழ்வதன்றி வேறென்ன?
நீள்வது உண்டெனில் பிறப்புகள் நீளட்டுமே
நாம்பெறுவதைப் பேறென்று வாழுவமே'
என உணர்தலேப் பேரறிவு!


இருப்பதும் மறைவதும் இயல்பு தானே!
கிடைப்பதும் தொலைப்பதும் இயல்பு தானே!
பிறப்பதும் அழிவதும் கூட இயல்பு தானே
இயல்பில்
மாற்றமும் தோற்றமுமே மாறாதது!
ஏற்றத்தை இறக்கத்தை கண்டதும்
ஆடாத
கிடைத்ததும் தொலைத்ததும் சட்டென
மாறாத
இருப்பதை பகிர்ந்து
இருப்பதில் சிறந்து இயல்பின் அசைவுகளை
முடியக் கண்களுள் பார்த்தால்
மூளும் நெருப்பிலிருந்து பெய்யும் மழை!
வீசும் காற்றுவரை
தன்னுள் அடக்கமென்றுதானே தெரியும்

எதற்கும் ஆடாத அசையாத மனமது
எப்போதும் தனித்திருக்கும்
ஏகத்திலும் சுகித்திருக்கும்
கலங்காத மனம்
அறியாமை நோயின்றி
கேட்பதையெல்லாம் பெற்றுத்தரும்
எதைக் கேட்பது
கேட்க மறுப்பதென்பதையும்
இயல்பிலடங்கி
எண்ணம்வழியே எடுத்தியம்பும்!
எங்கும் அமைதி நிலவும்,
எவ்வுயிரும் சுகம் பெறும்!
யாவருக்கும்
மங்களம் மங்களமே யுண்டாகும்!!!

**வித்யாசாகர்**

## சிவகார்த்திகேயனுடன் மீண்டும் மோதும் கார்த்தி!

## ‘டக்கர்’ திவ்யான்ஷா!




கடந்தாண்டு தீபாவளி அன்று கார்த்தியின் சர்தார் படமும், சிவகார்த்திகேயனின் பிரின்ஸ் படமும் மோதிக் கொண்டது. இந்தாண்டு தீபாவளிக்கும் கார்த்தி, சிவகார்த்திகேயனின் படங்கள் மோதவுள்ளது. ராஜூமுருகன் இயக்கி வரும் ‘ஜப்பான்’ படத்தில் கார்த்தி, அனு இமானுவேல் நடிக்கின்றனர். ட்ரீம் வாரியர்ஸ் பிக்சர்ஸ் தயாரிக்க, ஜி.வி.பிரகாஷ்குமார் இசையமைக்கும் இப்படத்திற்கு ரவிவர்மன் ஒளிப்பதிவு செய்கிறார். கார்த்தியின் பிறந்த நாளை முன்னிட்டு படத்தின் அறிமுக டீசரை படக்குழு வெளியிட்டதில், தற்போது இந்த டீசர் இணையதளங்களில் வைரலாகி வருகிறது.

கார்த்திக் ஜி கிரிஷ் இயக்கத்தில் சித்தார்த், திவ்யான்ஷா, யோகி பாபு நடித்துள்ள ‘டக்கர்’ படத்தின் ட்ரெய்லர் வெளியாகியுள்ளது. கடந்த 2019ஆம் ஆண்டே இப்படத்தின் படப்பிடிப்பு பணிகள் முடிந்து ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரும் வெளியிடப்பட்டது. இதுவரை சாக்லேட் பாயாக வலம்வந்த சித்தார்த், முழு ராக்கெட் பாயாக களமிறங்கியிருக்கிறார் என்பதை ட்ரெய்லரில் காட்டப்படும் பரபர ஆக்ஷன், ரொமான்ஸ் காட்சிகள் வேகம் காட்டுகிறது. ஆனால் படத்திலும் பிரதிபலிக்குமா?



## விடாமுயற்சி எப்போதும் கடும் முயற்சி!

## 'தங்கலான்' ஒரு தனித்துவ உலகம்!'

## 'விடாமுயற்சி விஸ்வரூப வெற்றி!

அஜித்தின் அடுத்தப் படமான விடாமுயற்சி படத்தை இயக்குநர் மகிழ் திருமேனி இயக்க, லைகா நிறுவனம் தயாரிக்கும் இந்தப் படத்துக்கு அனிருத் இசையமைக்கிறார். அஜித்துக்கு ஜோடியாக நடிக்க வைக்க ஐஸ்வர்யா ராஜ், த்ரிஷா, கரீனா கபூர், கங்கனா ரணாவத் உள்ளிட்ட நடிகைகளுடன் தயாரிப்பு நிறுவனம் பேச்சுவார்த்தை நடத்தி வந்த நிலையில், இப்படத்தில் திரிஷா கதாநாயகியாக நடிக்கவுள்ளதாக தகவல் உறுதியாகியுள்ளது.

## தங்கலான் 'தடங்கலான்' ஆகாதிருக்குமா?

பா.ரஞ்சித் இயக்கத்தில் உருவாகும் 'தங்கலான்' படத்தில் நடித்து வருகிறார் விக்ரம். இதில் பார்வதி, மாளவிகா மோகனன் உட்பட பலர் நடிக்கின்றனர். இப்படத்தின் மேக்கிங் வீடியோ சமீபத்தில் வெளியாகிய நிலையில், ட்விட்டரில் ரசிகர்களுடன் உரையாடிய மாளவிகா மோகனன், "அழகான தனித்துவமான உலகை உருவாக்குகிறோம். இப்படம் உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் எனக்கு கடினமாக இருந்தது. ஒவ்வொரு ஷாட்டிலும் நடிகர் விக்ரம் எனக்கு உதவியாக இருந்தார். சுயநலம் இல்லாத அவர், தன்னைச் சுற்றி உள்ளவர்களை கவனித்து ஊக்கப்படுத்துவார்." என்று தெரிவித்துள்ளார்.



# தல வலம்

## திருப்புல்லாணி

புவனகிரி செயபாலன்

‘ஓதி நாமங் குளித்து உச்சி தன்னால்
ஒளி மாமலர் பாதம் நாளும் பணிவோம்
நமக்கே நலமாதலின் அது தாரான் எனிலும் தரும்

தொழுதும் அவன் மன்னு புல்லாண்ணியே!’ —என இத்தலத்தைப் பற்றி திருமங்கை ஆழ்வார் மங்களாசாசனம் செய்தது.

ஆண்டாள், திருமழிசை ஆழ்வார், குலசேகர ஆழ்வார், சேதுவைப் பற்றி பாடியுள்ளனர். பெருமாளின் மங்களாசாசனம் பெற்ற 108 திவ்ய தேசங்களில் இது 96 ஆவது தலமாகும். பெருமாளின் சேது அணைக்கட்டும் நோக்கத்தில் வர்ணனை நோக்கி கடற்கரையில் தர்ப்பைப் புல் மீது சயனித்து ஒரு வாரம் ராமர் இருந்ததாக இராமாயணம் கூறுகிறது. தர்ப்பை புல் மீது இராமர் பள்ளி கொண்டதால் இத்தலத்திற்கு புல்லணை என்று பெயர். மேலும் இதற்கு புல்லாராண்யம், ஆதிசேது, திருவணை, தர்ப்பசயனம், நளசேது, ரத்னகா சேத்ரம், சரணாகதி சேத்ரம், புல்லங்காடு என்ற பெயர்களும் உண்டு!



மூலவர் மூலவருக்கு ஆதி ஜெகநாதன் என்ற பெயர். உற்சவருக்கு பெயர் கல்யாண ஜெகநாதன். இவருக்கு தெய்வ சிலையார் திவ்யசரபர், தெய்வப்சிலை பெருமாள், நாயனார், திருப்புல்லாணி ஆழ்வார், தட்சிண ஜெகநாதன், அன்னமாய் நூல் பயந்தார், புல்லாணி, தென்னந் தமிழன் என்ற பெயர்களும் உண்டு!

தாயார் — மூலவர் உற்சவருக்கும் ஸ்ரீ பத்மாசனி தாயார் என்ற ஒரே பெயர்!

தல விருட்சம் அரசமரம்

தீர்த்தம் —சக்கர தீர்த்தம், வருண தீர்த்தம், தர்ம தீர்த்தம், ராம தீர்த்தம், அகத்திய தீர்த்தம், இரண்ய



தீர்த்தம், கண்வ தீர்த்தம், ஸ்ரீராநதி, ஆதிசேது, இத்தல தீர்த்தங்களுக்கு முன்னீர்தலம் என்பர். குளித்து நீர், ஆற்று நீர், கடல் நீர் மூன்றும் இத்தலத்தில் இருப்பதால் இப்பெயர் பெற்றது. இத்தலத்து பெருமாளை ராமர் பூஜித்ததால் இத்தலத்தை பெரிய பெருமாள் தலம் என்றும் அழைப்பர்.

புராணம்

தெற்கு சமுத்திர கரை ஓரத்தில் புல்லாரண்யம் என்ற தலத்தில் பெரிய வனம் இருந்தது. இதில் மரங்களும், பூச்செடிகளும், விலங்குகளும் இருந்தன. இதில் உயிர்களிடத்தே கருணையும், ஈசனிடத்தில் பக்தியும் கொண்ட புல்லர் என்னும் ஒரு ரிஷி இருந்தார், அவர் தினமும் சக்கர தீர்த்தத்தில் நீராடி ஓமங்களை முடித்து சிரத்தையுடன் நாராயணனை வணங்கி 1300 வருடம் தவம் இருந்தார். அவ்விடத்தில் அசுவத்த விருட்சம் ஒன்று இருந்தது.

புல்லரின் தவத்தை ஆசீர்வதிப்பது போல் சதுர் புஜங்கன் பஞ்சாயதங்களுடன் தேவியர் மூவரோடு காட்சி அளித்தார். நாராயணனைப் பார்த்ததும் அவர் பாதங்களில் விழுந்து வணங்கி 'தங்களுடைய சேவையால் எனது ஜனன மரணங்கள் ஒழிந்தன. எனக்குக் காட்டிய இப்பெருங்கருணையை தங்களை வணங்கும் எல்லோருக்கும் காட்சியளித்து அவர்கள் ஜீவிக்கும் பொருட்டு இந்த விருட்சத்தடியில் எப்பொழுதும் எழுந்தருளி சேவை சாதிக்க வேண்டும்!' என வரத்தை வேண்டினார் அதன்படி நாராயணன் ஸ்ரீ ஜெகநாதன் பெயரில் ஸ்ரீ பூமி நீளாதேவிகளுடன் அரச மரத்தடியில் வீற்றிருந்து சேவை சாற்றி வருகிறார்.

தேவலர்

முன்னொரு காலத்தில் வேதங்களில் சிறந்தவராகவும் சகல தர்மங்களையும் அனுஷ்டித்து வந்த தேவலர் என்ற முனிவர் தனது ஆசிரமத்தில் தவம் செய்து வந்தார். பக்கத்தில் பூக்கள் நிறைந்த குளத்துடன் கூடிய காடு ஒன்று இருந்தது. மரங்கள் நிறைந்த சோலையில் ஒருநாள் தேவலோக ஏழு கன்னியர்கள் வந்து ஆடிப் பாடி மகிழ்ந்தனர்.

அருகில் இருந்த குளத்தில் குளிக்க எண்ணி தாங்கள் அணிந்திருந்த ஆடைகளைக் களைந்து சோலையில் இருந்த மரக்கிளைகளில் வைத்து விட்டு, பொய்கையில் ஜலக்கிரீடை செய்து கொண்டிருக்கும் போது தேவலர் ஸ்நானம் செய்ய அங்கு வந்தார். கன்னியர்கள் வெட்கமுற்று அவர் முன்னே ஆடையின்றி நின்றதைப் பார்த்த முனிவர் கோபம் வந்து ராட்சசியாய் மாறும்படி சபித்தார்.

உருவம் மாறிய கன்னியர் முனிவரிடம் தங்களை மன்னித்து அருளும்படி வேண்ட, வைகுண்டத்துக்கு நிகரான உள்ள புல்லாராணியம் என்னும் சேத்திரத்தில் புல்லர் என்னும் ஒரு விஷ்ணு பக்தர் எம்பெருமானை பூஜை செய்து வழிபட்டுக் கொண்டிருக்கிறார். நீங்கள் அவரிடம் சென்றால், சாப விமோசனம் கிடைக்கும் என்றார். கன்னியர்கள் புல்லர் ஆசிரமத்துக்கு வந்து வணங்கி சாப விமோசனம் வேண்டினர். இங்கு தசரத குமரர் ராமர் எழுந்தருளப் போகிறார். அவரை தரிசித்து வணங்கினால் உங்களுடைய சாப விமோசனம் நீங்கும். ராமர் வரும் வரை இங்குள்ள ஸ்ரீ



இல்லை! எனவே நீயே போய்விடு! இல்லையேல் கொலை செய்யப்படுவது திண்ணம்!' என ராவணன் கூறியதும், விபீஷணன் நண்பர்கள் நால்வருடன் ராமர் தங்கி இருக்கும் புல்லாராணியத்துக்கு வந்து சேர்ந்தான்.

தான் வந்திருப்பதன் எண்ணத்தை விபீஷணன் நண்பன் ஒருவன் மூலம் வானர சேனாதிபதியிடம் சொல்ல, அவர்கள் ராமனிடம் சொன்னார்கள். அங்கிருந்த சுக்ரீவன், அங்கதன் போன்றோர், இவர்களுக்கு அபயம் அளிப்பது நல்லதல்ல என்றனர். அப்போது அனுமன், விபீஷணனின் நல்ல குணத்தையும் பராக்கிரமத்தையும் அவனுடைய குமாரத்தி சீதைக்கு துணையாய் இருப்பதையும் சொல்லி அபயம் என்று வந்தவர்களுக்கு அடைக்கலம் தருவதுதான் நல்லது என்று கூறி அவர்களை ராமன் முன் நிறுத்தினான். ராமரைப் பார்த்த விபீஷணன் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கியவனைப் பார்த்து, 'ஈரேழு லோகங்களும், என் பெயரும் உலகத்தில் எவ்வளவு காலம் நிலைத்திருக்குமோ, அதுவரை இலங்கை அரசை உனக்குக் கொடுப்பேன்' என்று கூறி உறுதி கொடுத்தார்.

ஜெகன்நாதரை வைகாணச முறைப்படி பூஜித்து வாருங்கள் என்று கூறினார்.

சிறிது காலத்தில் புல்லர் தனது கடைசிக் காலம் நெருங்குவதை உணர்ந்தார். அவர் அங்குள்ள சுசவதிக விமானத்தை வலம் வந்து 'பகவானே எல்லா மனிதர்களும் உம்மை தரிசித்து நல்வழி அடையும் பொருட்டு இந்த சக்கரதீர்த்தக் கரையில் அரசமரத்தின் அருகில் பூமி, சந்திர, சூரியர்கள் உள்ளவரை இத்தலத்தில் அர்ச்சா ரூபியாய் எழுந்து அருளியிருக்க வேண்டும் என வேண்டியபடி எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்க, புல்லர் பரமபதம் அடைந்தார். இதைப் பார்த்த கண்ணீர் ஆறாத் துயரம் அடைந்து அவர் இட்ட கட்டளைப்படி வைகாணச ஆகமப்படி ஜெகன்நாதரை பூஜித்துக்கொண்டு ராமர் வருகையை எதிர்பார்த்து காத்திருந்தனர்.

சேது வந்தனம்

ராமர் சீதையைத் தேடிக் கொண்டு தெற்கே வரும்போது கிஷ்கிந்தையில் சுக்ரீவனுக்காக வாலியை வதைத்தார். இலங்கையில் ராவணனால் சீதை சிறை வைக்கப்பட்டு இருப்பதை அனுமானால் தெரிந்து கொண்ட ராமர் சுக்ரீவன், அங்கதன், நீலன், நலன், ஜாம்பவான் முதலிய வானரப் படைகளுடன் தெற்கு சமுத்திரக்கரை புல்லாணி சேத்திரத்தில் எழுந்தருளினார்.

விபீஷணன்

இலங்கையில் ராவணன் தம்பி விபீஷணன், தன் அண்ணனிடம் 'சீதா பிராட்டியை சிறை வைத்திருப்பது கொடுஞ்செயல்! நம் குலம் நாசமாகிவிடும்! சீதாப்பிராட்டியை விடுவித்து விடுவது நல்லது!' என தன்னால் இயன்றளவு நியாயத்தை எடுத்துரைத்தான்.

'எதிரி பக்கம் பேசுறவன் எனக்கு தம்பி

ராமருக்கு வில்

ராம சக்கர தீர்த்தத்தில் நீராடி, அங்குள்ள அரச மரத்தடியில் எழுந்தருளியுள்ள ஆதி ஜகன்நாதரை வணங்கி, ராவணிடமிருந்து சீதையை மீட்டுக் கொண்டுவர அருள் புரிய வேண்டும் என வேண்டியதும், தன்னிடமிருந்த வில்லைக் கொடுத்து இந்த வில்லால் ராவணனை கொல்வாய் என்று திருவாய் மலர்ந்து அருளினார். ராமருக்கு வில் தந்த காரணத்தால் புல்லாணி எம்பெருமான், திவ்ய சாபன் என்றும் பெயர் பெற்றார். தேவலரால் சபிக்கப்பட்ட ஏழு கன்னியர்களும் ராமரை வணங்கி சாப விமோசனம் பெற்று தேவலோகம் சென்றனர்.

சேது

இக்கடலை தாண்டிப் போக வேண்டும். கடலோ தேவருடைய வம்சத்தால் உண்டாக்கப்பட்டது. இக்கடலில் சைனங்கள் போகும் வழியைப் பெற்றுத் தர வருணனை அழைக்க வேண்டும் என விபீஷணன் சொன்னதைக் கேட்டதும் லட்சுமணனால் உண்டாக்கப்பட்ட தர்ப்ப



சயனத்தின் மீது ராமர் வர்ணனை வேண்டி சயனத்தில் இருந்தார். ஏழு நாள் சயனத்திருந்தும் சமுத்திர ராஜன் வரவில்லை! லட்சுமணனுக்கு கோபம் வந்து, தன்னுடைய சைனங்கள் கால்நடையாகவே நடந்து செல்லும்படி தன்னுடைய வில்லில் இருந்து அனல் கக்கக் கூடிய அம்புகளை விட, அம்புகள் கடல் நீரை வற்றச் செய்தது. கடல் மீன்கள் செத்து சமித்துகளாகவும், சமுத்திரம் ஓமக் குண்டமாகவும், கடல் நீர் ஆகுதீ செய்த நெய்யாகவும் மாறின.

இதைப் பார்த்த வருணன் பயந்து, ராமனிடம் அபயம் தர வேண்டினான். அத்துடன் நலன் என்னும் வானரத்தால் சேதுவை உண்டு பண்ணிச் சென்று ராவணனை கொன்று சீதையை மீட்டு வரலாம் என்ற யோசனையையும் கூறினான். அதன்படி சுக்ரீவன், வானரங்கள் எல்லாம் மலைகள், மரங்கள் போன்றவற்றை பெயர்த்துக்கொண்டு வந்து கொடுக்க, நலன் அவற்றை வாங்கி ஒழுங்குப்படுத்தி வைத்து சேதுவை 100 யோஜனை நீளமும் 10 யோஜனை அகலமும் உள்ள சேதுவை கட்டினார்கள்.

இலங்கையிலிருந்த சீதையுடன் புஷ்பக விமானத்தில் ஏறி திரும்பும்போது புல்லாராண்யத்தில் இறங்கி வந்து எழுந்தருளி இருக்கும் திவ்ய சாபனை சேவித்து அயோத்தி புறப்படும் சமயத்தில் நீரும் சீதா பிராட்டியுடன் லட்சுமணனும் இந்த ஷேத்திரத்தில் எக்காலமும் மானிடர்கள் உய்யும் பொருட்டு அருள் புரிய வேண்டும்' என்று பிராத்தித்த ரிஷிகளுக்கு அவ்வாறே செய்வதாக திருவருள் புரிந்து மறுபடியும் விமானம் ஏறி அயோத்தியை அடைந்தனர்.

பிரகாரங்கள்

தேரோடும் வீதி மாடவீதியைச் சேர்ந்து ஐந்து பிரகாரங்கள். மூன்றாம் பிரகாரத்தில் ஸ்ரீ ஆதி ஜகன்நாதன் ஸ்துபஸ்தம்பமும் பலிபீடத்துடன் உள்ளார். கொடிமரம் பக்கத்தில் இரு பக்கமும் பெரிய கம்பங்களில் சில ஸ்தானிகளின் பதுமை வடிவங்களின் பெயர்களுடன் உள்ளன. வடக்கு சரக்கில் வாகன மண்டபம், தெற்கு பகுதியில் யாகசாலை, வடக்கு பிரகாரம் தென்சரக்கில் பரமபத வாசல், வெளிப்பக்கமாக தென்படும் இதன் கீழ் பகுதியில் ஸ்ரீ பட்டாபிராமர் சன்னதியும் உள்ளன.

இரண்டாம் பிரகாரத்தில் தாயார் சன்னதி நுழைவு வாயிலின் தென்கிழக்கு மூலையில் மடப்பள்ளி, வெளிப்பக்கத்தில் உக்கரான அறையும், ஆழ்வார் சன்னதியும் உள்ளன. ஆழ்வார் சன்னதியில் நம்மாழ்வார், திருப்பான ஆழ்வார், மதுரகவியாழ்வார், பொய்கையாழ்வார், பெரியாழ்வார் என 11 ஆழ்வார்கள் இருந்தாலும், பெரியாழ்வார், திருமங்கை ஆழ்வார், நம்மாழ்வார் என மூவருக்கு மட்டும் உற்சவர்கள் உள்ளனர்.

அதை ஒட்டி சிவகங்கை சமஸ்தான உக்கிரான அறையும், ஆதி ஜெகநாத பெருமாளின் யாகசாலையும் உள்ளன. தெற்கு பிரகாரத்தில் தாயார் சன்னதி. இதில் பத்மாசினி தாயார், வரத அபய ஹஸ்தங்களுடன் சேவை சாற்றுகிறார். இதற்கு அடுத்த தல விருட்சமான அரசமரம் உள்ளது. வடமேற்கில் கோதை நாச்சியார் சன்னதியும், வடக்கு பிரகாரத்தில் பெருமாள் சன்னதியும், வடகிழக்கு சயன ராமர், பட்டாபிராமர் சன்னதிகள் உள்ளன.

முதலாம் பரிகாரம்

பெருமாள் சன்னதிக்கு எதிரில் கருட மண்டபமும், வீற்றிருந்த நிலையில் பெரிய திருவடி சன்னதியும் உள்ளன. மண்டபத்தின் வடக்கே ஏகாதசி மண்டபம், பின்பக்கம் உள்ள சன்னதியில் ஸ்ரீ யோக நரசிம்மர் மூலவராகவும் உற்சவரராகவும் காட்சியளிக்கிறார். தெற்கே தாயார் சன்னதி செல்லும் வாயில் உள்ளது.

தென்மேற்கு மூலையில் வெள்ளி கருடன் வாகனாரை பெருமாள் சன்னதி. மண்டப வாசலில் துவாரக பாலகர்கள். மணிமண்டப தென்கிழக்கு மூலையில் ஒரு சுரங்கம். இதைத் தாண்டி மேலே சென்றால் பெருமாளின் கர்ப்ப கிரகம். விமானத்தின் தென்பிரகாரத்தில் சற்று உயர்ந்த பகுதியில் ஸ்ரீ லட்சுமி நரசிம்மர், வடக்கு பகுதியில் ஸ்ரீ விஸ்வக் சேனர் காட்சி தருகிறார். அர்த்தமண்டபத்திற்குள் ஸ்ரீ ஆதிஜெகநாதன் ஸ்ரீ பூமிநிலை என்ற தேவியர்களுடன் வீற்றிருக்கும் கோலத்தில் சேவை சாற்றுகிறார். இத்தலத்தில்



நின்றும், இருந்தும், கிடந்தும் என மூன்று வடிவங்களில் சேவை சாற்றுவது சிறப்புக்குரியது. இத்தலம் தட்சிண ஜெகநாதன் என்று அழைக்கப்படுகிறது. ஒடிசா மாநிலம் பூரியில் உள்ள ஜெகநாதன் உடலில் மேல்பாதி அளவுடன் சேவை சாற்றுகிறார். ஆனால் இங்குள்ள ஜெகன்நாதன் முழு வடிவில் சேவை சாற்றுகிறார்.

சந்தான கோபாலன் சன்னதி

தர்ப்ப சயன சந்நிதிக்கு வடக்கே வெளிமண்டபத்தில் ஸ்ரீ சந்தான கோபாலன் சன்னதி, 8 யானைகள், 8 நாகங்களுடன் கூர்மத்தை ஆசனமாகக் கொண்டுள்ள ஆதிசேஷன் மீது கண்ணன் மூலவர் வடிவில் சேவை சாற்றுகிறார். இவரை பித்ருகளின் மகிழ்ச்சிக்காகவும், புத்திர பாக்கியத்திற்காகவும், தசரதன் இங்கு பிரதிஷ்ட செய்ததாக தலபுராணம் கூறுகிறது. இங்கு எம்பெருமான வேண்டி நாக பிரதிஷ்டை செய்தால் புத்திர பேறு இல்லாதவர்களுக்கு நல்ல புத்திரன் பிறப்பான். அத்துடன் ஏழு தலைமுறைக்கும் நல்ல புத்திரர்கள் பிறப்பார்களாம். பக்தர்கள் இக்கண்ணன் முன் சர்ப்ப சாந்தி, சர்ப்ப ஹோமம் செய்கின்றனர். இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான நாகப்பாம்பு சிலைகள் தல விருட்சமான அரச மரப்பக்கத்தில் வைக்கப்பட்டுள்ளன.

பேறு பெற்றவர்கள்— புல்லவர், கண்ணுவர், காலவர் முதலிய முனிவர்கள் இத்தல பெருமாளை வணங்கி பேறு பெற்றவர்கள். பெரிய நம்பிகள், புல்லங்காடார் நூல்களில் ஒன்றான கைக்கிளை பாடியவர். இத்தலத்தில் அரிச்சந்திர நாடகத்தை அரங்கேற்றிய வீர ஆசு கவிராயர்.

கல்வெட்டு— தமிழ்நாடு அரசு வெளியிடப்பட்ட கல்வெட்டு பதிப்பில் 392 முதல் 403 வரை 12 பிரிவுகள் கொண்ட கல்வெட்டுகள் உள்ளன. இவைகளில் கோயில் பற்றிய விவரங்கள் உள்ளன. சேதுபதி பரம்பரையினரால் வழங்கப்பட்ட தாமிரபட்டயங்கள், ஓலைச்சுவடிகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன. இக்கோயில் ராமநாதபுரம் அரச பரம்பரையினர்களுக்கு ஆதீனமான இராமநாதபுரம் சமஸ்தான தேவஸ்தான நிர்வாகத்திலும், தமிழ்நாடு அரசு இந்து அறநிலையை மேற்பார்வையிலும் உள்ளது.

தானம் — தாயாருக்கு புடவை சாத்தி பெருமாளுக்கு துளசி மாலை அணிவித்து ஆராதனை செய்து பக்தர்களுக்கு அன்னதானம் செய்தால் பலன் கிடைக்கும். இத்தலத்தில் இங்கு வந்து தக்க ஒருவருக்கு அன்னதானம் அளித்தால் கையை சேத்ரத்தில் ஒரு லட்சம் பேருக்கு அன்னதானம் அளிப்பதும், காசியில் இரண்டு லட்சம் பேர்களுக்கு அன்னதானம் செய்வதும், பிரியாகையில் 7 லட்சம் பேர்களுக்கு அன்னதானம் செய்வதை விட அதிக பலனைத் தருவல்லது என பெருமாளே சீதையிடம் சொன்னார் என தல புராணம் கூறுகிறது. இச்சேது சமுத்திரத்தில் நீராடினால் நம் முன் ஜென்ம பாவங்கள் விலகும்! மேலும் கிரக தோஷங்களும் விலகும்!

திருவிழாக்கள்

பங்குனி ஸ்ரீ ஆதி ஜகந்நாத பெருமாள் உற்சவம், சித்திரை ஸ்ரீ பட்டாபிராமர் பிரம்மோற்சவம், ஆடி சூடிக்கொடுத்த நாச்சியார் உற்சவம், ஆவணி திருப்பலித்ரோச்வம், மார்கழி பகல் பத்து உற்சவங்கள், புரட்டாசி ஸ்ரீ தாயார் நவராத்திரி உற்சவம், விஜயதசமி மற்றும் ஆழ்வார், ஆச்சாரியர்கள் திரு நட்சத்திர உற்சவங்கள்.

பூஜை —தினமும் காலை உச்சி காலம், சாயரட்சை, அர்த்த ஜாமம் என நான்கு கால பூஜைகளும், தென்கலை சாம்பிராதைய பற்றி வைகாணச ஆகம பூஜைகள் நடைபெறுகின்றன.

திறக்கும் நேரம் — தினமும் காலை 6.30 மணி முதல் 12 30 வரையிலும், பிற்பகல் 3:30 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் திறந்திருக்கும்.

இருப்பிடம் — ராமநாதபுரத்திற்கு தெற்கில் 8 கி.மீ. தூரத்தில் திருப்புல்லாணி இத்தலத்தில் இருந்து 2 கி.மீ. தொலைவில் ஆதிசேது கடல் உள்ளது.

(தொடரும் வலம்.....)

அலமாரி

# புத்தக விமர்சனம்

## திருக்குறள் ‘100’


**ஆசிரியர்:**

**சிவகுமார்**

**விலை : ரூ. 200**

**வெளியீடு:**

**அல்லயன்ஸ் கம்பெனி
பதிப்பாளர் மற்றும் புத்தக விற்பனையாளர்
புதிய எண் 64, பழைய எண் 244,
ராமகிருஷ்ஷ்ணா மடம் சாலை,
தபால் பெட்டி எண் 617, மயிலாப்பூர்,
சென்னை – 600004. இந்தியா.**




திருக்குறள் தோன்றிய காலத்திலிருந்து சமூகச் சிக்கல்கள், அறம் சார்ந்த தேவைகள், ஏற்றத் தாழ்வுகள், தனி மனித உணர்வுகள், கோபங்கள், இன்பத் துன்பங்கள் இன்று வரை நீடிப்பதால் அதன் தேவையும் நீடித்து எந்த காலத்திற்கும் பொருந்துவதாக திகழ்கிறது. திருக்குறளை அனைத்து தரப்பு மக்களுக்கும் கொண்டு சேர்க்கும் முயற்சியாக திரைப்பட — ஓவியக் கலைஞர் சிவகுமார், “திருக்குறள் 100” நூலினை பல்வேறு வாழ்க்கைச் சித்திரக் கதைகளாக படைத்துள்ளார். யாதொரு முன்னொட்டும் பின்னொட்டும் இன்றி ‘சிவகுமார்’ என்றே தன்னை பதிவு செய்கிறார். அவரது தொழில் சார்ந்தும் சமூக—கலை—இலக்கிய—அரசியல் வட்டம் சார்ந்தும் பல ஆளுமைகளை மட்டுமின்றி எளிய மனிதர்களின் பேராளுமைகளை குறள்களோடு பொருத்தி கதையாகப் பேச்சு மொழியில் தந்துள்ளார்.காந்தியடிகள், மார்க்ஸ் —ஜென்னி, நெல்சன் மண்டேலா, வேலு நாச்சியார், பாரதியார், பெரியார் — ராஜாஜி, லால்பகதூர் சாஸ்திரி, குல்சாரிலால் நந்தா, அப்துல்கலாம், அன்னை தெரஸா, ஜீவா, ஓமந்தூரார், காமராசர்— சி.சுப்ரமணியன், தியாகராஜ பாகவதர், கலைவாணர், கே.பி.எஸ்., அண்ணா, கலைஞர் — எம்ஜிஆர், சிவாஜி கணேசன், நீதியரசர் சந்துரு என அவரவர்கள் சார்ந்த நிகழ்வுகளைச் சொல்லி திருக்குறளோடு அடையாளப்படுத்துகிறார்.

சிவகுமார் வசதி பெற்ற பின்னரும் தனது பிள்ளைகளை நல்லது கெட்டதுகளை அறியும் வகையில் வளர்த்து இன்று பல்வேறு ஏழை, எளிய, பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட சமூகத்திற்காக அகரம் அறக்கட்டளை வழி கல்விக்கண் திறப்பது திருக்குறளின் அறத்துக்கான அடையாளமாகும்.

சிறுகதை



# சாப்பாடு!

டாக்டர் **ஜெ. பாஸ்கரன்**

'கஸ்தூரி, இந்தா, இந்தச் சாப்பாட்டை எடுத்துக்க!"

ஆவி பறக்கும் சூடான சோறு, முள்ளங்கிக் குழம்பு, நெய், காரட் பொறியல்.. எல்லாம் ஒரு தட்டில் வைத்து ஜானகி, கஸ்தூரியின் கையில் கொடுத்தாள்.

காலையில் எழுந்து, குளித்து, முகம் முழுக்க மஞ்சள் பூசி, பெரிய குங்குமப் பொட்டுடன் வேலைக்கு வரும் கஸ்தூரிக்கு, ஜானகி காலையிலேயே சூடாக சாப்பாடோ, டிபனோ எது அன்று செய்கிறாளோ அதை கொடுத்து விடுவாள். சாப்பாட்டுத் தட்டை எடுத்துகொண்டு, வெளியில் பால்கனியில் அமர்ந்து சாப்பிடத் தொடங்கினாள் கஸ்தூரி. பால்கனி சுவரில் ஒரு பிடி சோற்றை வைக்க, வழக்கமாக வரும் காக்கை ஒன்று, கொத்தியபடி அங்கும் இங்கும் பார்த்தது.

சாப்பாட்டு மேசையில் எதிரும் புதிருமாக அமர்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்த ரேணுவும், ப்ரீதமும் ஒருவரை ஒருவர் பார்த்துகொண்டனர்.

'ம்.. சீக்கிரம் சாப்பிடுங்க! மணி வந்து காரைத் துடைத்துத் தயாராகி, அரை மணி நேரம் ஆகிறது. அள்ளிப் போட்டுகிட்டுக் கிளம்புங்க! சீக்கிரம் காலேஜுக்கு" என்று ஜானகி, மதியத்துக்கான டிபன் கேரியர் பையை மேசை மீது வைத்தாள்.

பெரியவள் ரேணு இளங்கலை மூன்றாம் ஆண்டு. சின்னவள் ப்ரீதம் இளங்கலை முதலாம் ஆண்டு. நன்றாகப் படிப்பார்கள் என்றாலும், மருத்துவம், பொறியியல் என்ற சிக்கல்களுக்குள் சிக்காதவர்கள்! முதுகலை படித்து, கல்லூரிப் பேராசிரியராக விரும்பும் ரேணுவும், விசுவல் கம்யூனிகேஷன் படித்து, ஒரு நல்ல படைப்பாளியாக வேண்டும் என விரும்பும் ப்ரீதமும் ஒரே கல்லூரியில் பெண்ணியக் கருத்துகளில் மிகவும் ஆர்வம் உடையவர்கள். குட்டையாகத் தலைமுடியை கத்தரித்து, புருவங்களைச் செதுக்கி, ஜீன்ஸ், டீ சர்ட் என வலம் வருபவர்கள். ஆணுக்குப் பெண் சமம் என்பதில் உறுதியானவர்கள்.


'என்னம்மா நீ, இவ்வளவு படிச்சு மார்டனா இருக்கே, ஆனாலும், இன்னும் பழைய பழக்கங்களை மாத்திக்க மாட்டேங்கறயே?"

ஜானகிக்குப் புரியாமல், 'எதைப் பற்றி சொல்ற நீ?" என்றாள் ரேணுவைப் பார்த்து!

உடை, உணவு, பழக்க வழக்கங்கள் எதிலும் தலையிடாமல், அதே சமயம் அவர்களின் போக்கைக் கவனமாகக் கட்டுக்குள் வைத்திருப்பதையா? விரும்பிய படிப்பு, கல்லூரி என சுதந்திரமாக விட்டிருப்பதையா? எதைச் சொல்கிறாள்?

'கிராமத்தில் அந்தக் காலத்திலேயே பாட்டி செய்ததையேதான் நீயும் செய்யறே?"

நெற்றி சுருக்கி, தலை சாய்த்து ஜானகி தன் பெண்ணைப் பார்த்தாள். ப்ரீதம் அம்மாவைப் பார்த்தபடியே காரட் பொறியலை எடுத்துத் தனது தட்டில் வைத்துக்கொண்டாள்.




'சமையலைச் சொல்றயா?"

'இல்லே.. கஸ்தூரி தனியா வெளியில் பால்கனிலேயே சாப்பிடறாளே அதைச் சொன்னேன். எங்களோட டைனிங் டேபிள்ல உட்கார்ந்து சாப்பிடச் சொல்லக் கூடாதா?"

ஜானகிக்கு ஒரு விநாடி 'திடுக்' கென்றது. பின்னர் மனதுக்குள் சிரித்தாள்.

'நான் சாப்பாடுதான் கொடுத்தேன். இடம் அவளாகத் தேர்ந்தெடுத்தது. அவளுக்கு எங்க விருப்பமோ அங்கே உட்கார்ந்து சாப்பிடறா?"

'நீ சொல்லலாமே? எங்களோடயே உட்காரச் சொல்லி!"

'ஏற்றத்தாழ்வு இன்னும் போகலை போல இருக்கு. அவ நம்மோடையே உட்கார்ந்து சாப்பிட்டா என்ன?" என்று தன் பங்குக்கு கேட்டாள் ப்ரீதம்.

'நீங்க நினைக்கிறது தப்பு. ஓட்டல், கல்யாணங்கள் என எல்லா இடங்களிலும் ஒண்ணாத்தானே உட்கார்ந்து சாப்பிடுகிறோம்?"

'அது பொது இடம். அங்கெல்லாம் அப்படித்தான். வீட்ல இது என்ன பாகுபாடு?"

வெளியூருக்கு நம்முடன் வண்டி ஓட்டி வரும் மணியும், ஓட்டலில் தனியாகத்தானே அமர்ந்து சாப்பிடுகிறான்? அதற்குப் பெயர் என்ன? ஜானகிக்கு நேரமில்லை சேர வேண்டிய நல்ல செய்தி சேர வேண்டியவர்களுக்குத் தவறான புரிதலில் சொல்லப்பட்டிருக்கிறது என்பது மட்டும் புரிந்தது.

'சரி, இப்போ உங்களுக்கு நேரமாகிவிட்டது, கிளம்புங்கள். நாளைக்கு உங்களுடனேயே கஸ்தூரியை உட்கார வைத்து சாப்பாடு போடுகிறேன்!" என்றாள் ஜானகி.

ரேணுவுக்குத் தன் அம்மாவை நன்கு தெரியும். எந்தக் காரியத்திலும் ஒரு ஒழுங்கு, நேர்த்தி. கஸ்தூரிக்குச் செய்வதிலும் ஒரு குறையும் வைக்க மாட்டாள். ஆனாலும் இந்த ஒரு செயல் மட்டும் ரேணுவால் புரிந்து கொள்ள முடியவில்லை.

'சரிம்மா. கஸ்தூரியும் நம்பள மாதிரிதானே, எல்லோரும் சேர்ந்து தான் சாப்பிடணும்? தனியா அவ ஏன் சாப்பிடணும்?" என்று கேள்வியைக் காற்றில் தொங்க விட்டு, இருவரும் கிளம்பிப் போய்விட்டனர்.

கஸ்தூரி தன் தட்டையும், ரேணு, ப்ரீதம் சாப்பிட்ட தட்டுகளையும் கழுவி வைத்தாள். வீடு பெருக்கி, துணி துவைத்து, மற்ற பாத்திரங்கள் துலக்கி அவளுக்கு இன்னும் ஒரு மணி நேரம் வேலையிருக்கிறது. ஜானகி கொடுத்த சாப்பாடு மனதுக்கும், உடலுக்கும் இதமாக இருந்தது.

ஜானகியின் வீட்டில் கஸ்தூரி வேலைக்குச் சேர்ந்தபோது பதினேழு அல்லது பதினெட்டு வயதிருக்கும். ரேணுவும், ப்ரீதமும் சின்னக் குழந்தைகள். ஜானகி கஸ்தூரிக்கு எல்லாம் கற்றுக் கொடுத்தாள், சமையல் உள்பட! தன் மகள் போலவே அவளைக் கவனித்து வந்தாள். வேலுவை கஸ்தூரி திருமணம் செய்து கொண்டபோது,

ஜானகி, தன்னால் ஆன எல்லா உதவிகளையும் செய்தாள். திருமணத்துக்குப் பின்னும், கஸ்தூரியும் ஜானகியின் குடும்பத்தில் ஒருத்தி போலவே எல்லா வேலைகளையும் செய்து வந்தாள்!

ஜானகி சாப்பிட உட்கார்ந்தாள்.

ரேணுவும், ப்ரீதமும் கேட்ட கேள்வி, ஜானகிக்கு வியப்பாக இருந்தது. 'குழந்தைகளுக்கு இப்படி



ஓர் எண்ணம் வரும்படி, நாம் ஏதும் தவறாகச் செய்துவிட்டோமோ?' என நினைத்தாள்.

'ஜானகி அம்மா மாதிரி யாரு செய்வாங்க? பசி வேளைக்கு சாப்பாடு, நாள் கிழமையில் புடவை, துணிமணி, கேக்கறப்போ பணம், எதுக்கும் கொறையே இல்லை. சாப்பாடு கூட, மொத நாளு சாப்பாட்ட போடமாட்டாங்க. அவங்க சாப்பிடற அதே சாப்பாட்டத்தான் சூடா குடுப்பாங்க!" என்று தனது கணவன் வேலுவிடம் சொல்வாள் கஸ்தூரி.

'ஆமா. வித்தியாசமெல்லாம் பார்க்க மாட்டங்க ஜானகியம்மா. நான் எப்போ போனாலும், காபியோ, டீயோ சூடாக் கையிலே கொண்டுவந்து குடுப்பாங்க!" என்பான் வேலு.

ஜானகி தன்னுடைய அன்றாட பூஜையை முடித்து, கனகதாரா ஸ்தோத்திரம் சொல்லி, இரண்டு பழம் நெய்வேத்தியம் செய்து, சாப்பிட வந்தாள். அதற்குள் கஸ்தூரி வேலைகளை முடித்து, ஃப்ரிஜ்ஜிலிருந்து தயிர், ஊறுகாய், தண்ணீர் எல்லாம் எடுத்து டைனிங் டேபிளில் வைத்தாள்.

ஜானகியின் கல்லூரிப் படிப்பு டவுனில் இருந்தாலும், வீடு ஐந்தாறு கிலோ மீட்டர் தள்ளியிருந்த அக்ரகாரத்தில்தான். மாடி வீடு, வாசலில் நிரந்தரப் பந்தல், வில் வண்டி, வெளியூர் செல்லக் கார், ஊஞ்சல், பின்கட்டில் மாடுகள் என வசதியான வாழ்க்கைதான். ஜானகியின் அப்பாவுக்கு நிலம் நீச்சு என பூர்வீக சொத்து இருந்தாலும், தன் படிப்புக்கேற்ற வழக்குரைஞர் தொழிலை விடாமல் நேர்மையாகச் செய்துவந்தார். ஏழைகளுக்குத் தன் செலவிலேயே வழக்காடி, ஜெயித்தும் தருவார். வீட்டுக்கு வரும் கிளைண்ட் யாராக இருந்தாலும், வீட்டு தம்ளரில் மோரோ, டவரா தம்ளரில் காபியோ நிச்சயமாக உண்டு!

ஜானகியின் அம்மா அந்தக் காலத்து மனுஷி. மடி, ஆச்சாரம் எல்லாம் பார்த்தாலும், மனித நேயம் மிக்கவள். வீட்டு வேலை செய்த லட்சுமிக்குப் பணம், புதுத் துணி, வருஷாந்திர நெல்.. என எல்லாம்

கொடுப்பாள். ஆனாலும், தன் ஆச்சாரத்தை விட்டுத் தர அவள் மனம் இடம் கொடுக்காது. வீட்டைச் சுற்றியுள்ள நடைபாதையில் வந்துதான், வீட்டின் பின்கட்டுக்கு வரவேண்டும். பாத்திரங்கள் தேய்ப்பது, துணிகள் துவைப்பது எல்லாம் வீட்டுக்கு வெளியே உள்ள பின் கட்டில்தான். காலையில் ஒரு காபியும், பின்னர் பழைய சோறும், குழம்பும் கொடுப்பாள். இல்லாத நாள்களில், கையில் காசு கொடுத்து வெளியில் சாப்பிடச் சொல்வாள். ஜானகி காலேஜ் விட்டு வந்தாலும், வீட்டுக்குப் பின்புறம் சென்று, குளித்துவிட்டுத்தான் வீட்டுக்குள் வரவேண்டும். அதெல்லாம் அந்தக் காலம்.

'என்னம்மா ரொம்ப யோசனையா இருக்கீங்க? ஒடம்புக்கு ஏதாச்சும் சொகமில்லையா?" என்று கஸ்தூரியின் குரல் கேட்டுத் தன் நினைவுக்கு வந்தாள் ஜானகி.

'அதெல்லாம் ஒண்ணுமில்லே. வேலையெல்லாம் முடிச்சுட்டயா? சரி, நீ கெளம்பு."

ஜானகி மனதுக்குள் ஒரு முடிவுக்கு வந்தாள்.

சமீபத்தில் பவள விழா கொண்டாடிய மகளிர் கல்லூரி அது. மைதானத்தின் ஓரத்திலிருந்த பெரிய மர நிழலில் போடப்பட்டிருந்த சிமென்ட் பெஞ்சுகளில் வட்டமாக அமர்ந்து, ரேணுவும் ப்ரீதமும் தோழிகளுடன் மதிய உணவு சாப்பிட்டுக்கொண்டிருந்தனர்.

'எப்படிப்பா உங்கம்மா இவ்வளவு வாசனையோட, டேஸ்டியா வெஜ் புலாவ் செய்யறாங்க?" என்று கேட்டபடியே ஹம்சா, ரேணுவின் டிபன் பாக்ஸிலிருந்து ஒரு கரண்டி புலாவ் எடுத்தாள். அவள் வீட்டு இட்லியுடன் சட்னியும் ரேணுவுக்கு வந்தது. ஹம்சாவுக்கு சிறிது தள்ளி அமர்ந்து சாப்பிட்டாள் செல்வி. அன்று அவள் வீட்டில் மீன் குழம்பு.

'ஏன் செல்வி தள்ளி உட்கார்ந்திருக்கே? மீன் குழம்புன்னா?"

'ம்..ம்.."

'வா, கிட்டே வந்து உட்கார்ந்து சாப்பிடு. நான் உன் மீனை எடுத்துக்க மாட்டேன்!"

தோழிகள் ஒரே சிரிப்பு!

'நாம தினமும் ஒண்ணாத்தானே உட்கார்ந்து சாப்பிடுகிறோம்? யாருக்கு எது பிடிக்குதோ அதைச் சாப்பிடுகிறோம். உணவுப் பழக்கம், சாப்பிடும் முறை எல்லாம் அவரவர் தனிப்பட்ட விருப்பம். அதுல தவறென்ன இருக்கு? இன்னும் மனதளவிலே ஏற்றத்தாழ்வு போகலே போல இருக்கு!" என்ற ரேணு, காலையில் தனது வீட்டில் நடந்ததைத் தன் தோழிகளிடம் கூறினாள்.

'எங்க வீட்டிலேயும் வேலை செய்கின்றவர்களுக்கென்று தனி சமையல்



உண்டு!" என்று பெரிய ரைஸ் மில் சொந்தக்காரர் பெண் சரோஜா சொன்னாள். அதோடு, ' இருபத்தி ஐந்து பேருக்கும் மேல் வேலை செய்வதால், அவர்களுக்குத் தனியாக சமைக்க வேண்டியதிருக்கும். அவர்களுக்கு ஒரு வேளை உணவு கொடுத்துவிட வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பார் என் அப்பா" என்றாள்.

'இன்னும் சமூக மாற்றங்கள் வர வேண்டும். சமத்துவம் எல்லாம் இங்கே பேச்சளவில்தான் இருக்கு! நகரங்களில் ஏதோ கொஞ்சம் மாற்றங்கள் தெரியுது. கிராமப்புறங்களில் இன்னும் சில இடங்களில் இரட்டைத் தம்ளர் முறை உள்ளது" என்றாள் ரேணு.

‘எங்கே இதெல்லாம் மாறிடப் போவுதோன்னு கவலையோட, மேடையில் முழங்கும் மனிதர்களும் இங்கே உண்டு. மாறிட்டா, அவங்க பொழப்புக்கே வந்துடும் கேடு” என்று செல்வி சொன்னாள். கல்லூரி மணியடிக்கவே, தோழிகள் வகுப்பறைக்குச் சென்றனர்.



மறுநாள் காலை சீக்கிரமே சாப்பாடு தயார் செய்துவிட்டாள் ஜானகி. டைனிங் டேபிளின் ஒரு பக்கம் ரேணுவும், ப்ரீதமும் உட்கார, எதிரில் கஸ்தூரிக்கும் தட்டு வைத்துப் பரிமாறினாள். கஸ்தூரி கூச்சத்துடன், ‘நான் பால்கனியிலேயே சாப்பிடுகிறேன் அம்மா” என்றாள். உடனே ரேணு, ‘ஏன் கஸ்தூரி, எங்களுடன் உட்கார்ந்து சாப்பிடமாட்டியா?’ ‘என்று கேட்டாள்.

‘ஐயோ.. அப்படி இல்லே ரேணும்மா” என்று தயங்கினாள்.

ஜானகி, கஸ்தூரியின் கையைப் பிடித்து, அமரச் செய்தாள். மூன்று பேருக்கும் பரிமாறினாள்.

கஸ்தூரி, நாற்காலியின் முனையில் அமர்ந்திருந்தாள். எல்லாம் கொஞ்சமாக, அவசர அவசரமாகச் சாப்பிட்டாள். இடையிடையே ரேணுவையும், ப்ரீதத்தையும் பார்த்துகொண்டாள். அவள் கண்களில் நீர் வழிந்தது. அவசரமாகச் சாப்பிட்டுவிட்டு, ரசம், மோர் எல்லாம் வேண்டாமென்று எழுந்துவிட்டாள். குறைவாகவும், அவசரமாகவும், சங்கடத்துடனும் சாப்பிடும் கஸ்தூரியை, ரேணு அதிசயமாகப் பார்த்தாள்!

ரேணுவும் ப்ரீதமும் கல்லூரிக்குச் சென்ற பிறகு, ‘இது வேண்டாம்மா. எனக்குத் தனியாகவே சாப்பாடு போடுங்கம்மா. என்னால அவங்க கூட உட்கார்ந்து சாப்பிட முடியலம்மா? ரொம்ப கூச்சமா இருக்குது!” என்றாள் கஸ்தூரி.

‘இது நம்ம வீடுதானம்மா. ரேணுவையும், ப்ரீதமையும் சின்ன வயசுலேர்ந்தே உனக்குத் தெரியுந்தானே? அப்புறம் என்ன கூச்சம்?”

‘இருக்கலாம்மா. சாப்பிடறது உங்க சாப்பாடா இருந்தாலும், நாங்க வேற மாதிரியா சாப்பிடுவோம். உங்களோட அப்படி ஃப்ரீயா சாப்பிட முடியலம்மா. ஓட்டல், கல்யாணம் அங்கெல்லாம், நிறைய பேர் சாப்பிடுவாங்க, தெரியாது.”

ஜானகி, கஸ்தூரியின் அருகில் வந்து, ‘அசடு. நம்ம வீட்டில் அந்த மாதிரியெல்லாம் நினைக்கவே கூடாது. உன் வீட்டில் எப்படி சாப்பிடுவையோ, அப்படியே இங்கயும் சாப்பிடு’’ என்றாள்.

‘முடியலைம்மா.. பால்கனியிலேயே சாப்பிடறேன். அதான் நிம்மதியாகவும் நல்லாவும் இருக்கு!”

விநயத்துடன் பார்த்தாள் ஜானகி. ‘நீ சரியா சாப்பிடலைன்றதெ நான் கவனிச்சேன். இந்தா இந்தக் கேரியர்ல சாப்பாடு கட்டிவெச்சிருக்கேன். வீட்டுக்குப் போய் வேலுவோட நிம்மதியாச் சாப்பிடு!”

இரவு அலுவலகத்திலிருந்து வந்த பிரபு, ‘ஜானகி, தட்டைப் போடு. பசி கொல்லுது” என்றான்.

‘என்ன ஆச்சு? ஆபீஸ்ல மீட்டிங் முடிஞ்சு, டின்னர் கிடையாதா?”

‘ம்ம்.. இருந்தது. எம்.டி. , ஃபாரீன் டெலிகேட்ஸ், பெரிய ஆஃபீஸர்களோட உட்கார்ந்து ஃப்ரீயா சாப்பிட முடியலெ. ஏதோ கொஞ்சம் கொறிச்சிட்டு, வந்துட்டேன். நம்ம வீட்ல சாப்பிடற மாதிரி ஆகுமா?”

‘அது ஸ்பெஷல் சாப்பாடு ஆச்சே!”

‘இருக்கட்டுமே. நிம்மதியா நம்ம இஷ்டப்படி வேணும்கிறதை வீட்டில சாப்பிடறாமாதிரி அங்கெல்லாம் சாப்பிட முடியாது. அந்த சூழலே நமக்கு அந்நியமாத் தெரியுது!”

ஹாலில் டிவி பார்த்துக்கொண்டிருந்த ரேணு, அப்பாவை ஆச்சரியமாகப் பார்த்தாள்.

‘தப்பா நெனச்சிக்க மாட்டாங்களா?”

‘என்ன நெனச்சிக்கிட்டா என்ன? மரியாதைக்கு அவங்கக் கூட இருந்தேன். சாப்பிடறது என் இஷ்டம். தனிமனித சுதந்திரம்!”

டி.வி.யில் இரண்டு பேர் ஏதோ காரசாரமாக அன்றைய அரசியலை விவாதித்தபடி இருந்தனர்.


படைப்பாளிகளுக்கு...
* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!
*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!
தொடர்புகளுக்கு
editor@ithamil.com



# தமிழர்

## தமிழாசிரியர் சா. தர்மராசு சற்குணர்

‘நற்குணம் வாய்ந்த சற்குணர்’ என்பார் உ.வே.சாமிநாதர். ‘உண்மைத் தமிழன்பர்’ என்பார் வையாபுரியார். திருநெல்வேலியைப் பூர்விகமாகக் கொண்ட சாமுவேல் சற்குணருக்கும் ஞானப்பூ அம்மையாருக்கும் மகனாக 1877 மே 25ஆம் நாள் பிறந்தவர் தர்மராஜா சற்குணர். இவருடைய பாட்டனார் கல்வி கற்பதற்காகவே நெல்லையிலிருந்து நடந்தே சென்னைக்கு வந்ததாகவும் தந்தையார் அக்காலத்திலேயே பி.ஏ., பட்டம் பெற்று மாவட்டப் பதிவாளராகப் பணியாற்றியவர் என்றும் அ.கி.பரந்தாமனார் குறிப்பிடுகிறார்.

சாமுவேல் தர்மராசு சற்குணர் தமிழ்க் கல்வியைப் பரப்புவதற்காகச் சென்னையில் தென்னிந்தியத் தமிழ்க் கல்விச் சங்கம் அமைத்த முன்னோடி; தமிழர்களுக்குத் தமிழ்மட்டும் போதாது, பல மொழி அறிவும் இருந்தால்தான் தமிழின் சிறப்பைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியும் என்று பல மொழி கற்றுத்தேர்ந்த மேதை.

சாமுவேல் தர்மராசு சற்குணர் தமிழ்க் கல்வியைப் பரப்புவதற்காகச் சென்னையில் தென்னிந்தியத் தமிழ்க் கல்விச் சங்கம் அமைத்த முன்னோடி; தமிழர்களுக்குத் தமிழ்மட்டும் போதாது, பல மொழி அறிவும் இருந்தால்தான் தமிழின் சிறப்பைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியும் என்று பல மொழி கற்றுத்தேர்ந்த மேதை. எளிய நடையில் தமிழை எழுதவும் சொல்லிக் கொடுக்கவும் வேண்டும் என்று வலியுறுத்தியவர்

சற்குணர் தாய்மொழியாகிய தமிழோடு வடமொழி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்தார்.

பணி

சற்குணர் தன்னுடைய பணிவாழ்க்கையை ஆங்கில ஆசிரியராகத் தொடங்கினார். பின்னர் சென்னை கிறித்துவக் கல்லூரியில் தமிழாசிரியராகச் சேர்ந்து, பேராசிரியராக உயர்ந்தார். கல்லூரிப் பணிக்கு அப்பாலும் தொண்டு செய்ய விரும்பிய சற்குணர், அதே எண்ணத்தைக் கொண்டிருந்த அ. கி. பரந்தாமனாருடன் இணைந்து 1925 சனவரி 15 ஆம் நாள் சென்னையில் தென்னியந்தியத் தமிழ்க் கல்விச் சங்கம் என்னும் அமைப்பை நிறுவினார். சற்குணர் தலைவராகவும் அ.கி.பரந்தாமனார் செயலாளராகவும் பணியாற்றினர். அச்சங்கத்தில் சென்னை பல்கலைக்கழக வித்துவான் தேர்விற்கு பயிற்சி அளிக்கப்பட்டது.[2]

முழுக்க முழுக்க கற்பிக்கும் பணியிலேயே தன்னை ஈடுபடுத்திக் கொண்டதால், சற்குணர் எழுத்துப் பணியில் அதிகம் ஈடுபடவில்லை. ஆனால் இவர் தம் காலத்தில் சிறந்த ஆராய்ச்சியாளராகத் திகழ்ந்தார். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்க்குழு உறுப்பினராகவும் பணியாற்றினார்.

இத்தகைய கல்விப் பாரம்பரியம் மிக்க குடும்பத்திலிருந்து வந்த சற்குணர், வரலாற்றுச் சிறப்புமிக்க சென்னை கிறித்துவக் கல்லூரியில் ஆங்கில இலக்கியத்தை முதன்மைப் பாடமாக எடுத்துப் படித்தவர். ஆங்கில இலக்கியம் பயின்றாலும் தமிழிலக்கியங்களில் பெரும் ஈடுபாடும் புலமையும் கொண்டிருந்தவர்.





# பெருமை

ஜெ. சுடர்விழி

கல்லூரியில் தமிழில் முதன்மையாகத் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் சேதுபதி பொற்பதக்கத்தைப் பெற்றவர்.

1905இல் சென்னை ஹாரிஸ் உயர்நிலைப் பள்ளியில் ஆங்கில ஆசிரியராகத் தன் பணியைத் தொடங்கியவர் சற்குணர். தமிழிலக்கியங்களின் சிறப்பைக் கற்பிக்கும் வகையில் 1925 ஜனவரியில் தென்னிந்திய தமிழ்க் கல்விச் சங்கத்தைத் தன் சொந்தச் செலவில் தொடங்கிப் பல்லாண்டுகளாக நடத்திவந்தார். இவருடைய தமிழ்ப் புலமையையும் பணியையும் கண்டு 1928இல் அன்றைய சென்னை கிறித்துவக் கல்லூரி முதல்வர் மெஸ்டன், தம் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்ற அழைப்பு விடுத்தார். இங்கு பணிபுரிந்த ஒன்பது ஆண்டுகளிலும் மாணவர்களின் மனங்கவர்ந்த பேராசிரியராகத் திகழ்ந்தார் சற்குணர்.

மாணவர்கள் மீது அன்புகொண்டவர் மாணவர்கள் இவர் மீது கொண்டுள்ள அன்பை கண்ணாரக் கண்ட உ.வே.சா. ‘தாய்ப் பசுவைக் கண்ட கன்றுகள்போல் சற்குணரிடம் மாணவர்கள் ஓடுகின்றனர்’ என்கிறார். மாணவர் நலனே முதன்மையாகக் கொண்டவர் சற்குணர் என்பதற்கு வையாபுரியார் ஒரு சம்பவத்தைப் பதிவு செய்துள்ளார். வையாபுரியாரும் வேறு சில நண்பர்களும் பாடப்புத்தகங்கள் குறித்து ஆலோசிக்கக் கூடியிருந்தபோது, ஒருவரின் புத்தகத்தைப் பாடமாக வைக்க வேண்டும் என்று சிலர் முன்மொழிய, ‘அப்புத்தகம் முன்பே பாடமாக இருந்ததுண்டு.. அதனை மாணவர்கள் வெறுக்கிறார்கள்’ என்று அந்த நூலாசிரியர் முன்னிலையில் குறிப்பிட்டு, அதை வேண்டாம் என்று சொல்லி மறுத்திருக்கிறார் சற்குணர்.

தெரிந்தவர்கள், நண்பர்களின் புத்தகம் என்பதற்காக மாணவர்களுக்குப் பயனற்ற அல்லது வெறுக்கத்தகுந்த நூல்களை வைத்து மாணவர்களைத் துன்பத்தில் ஆழ்த்தக் கூடாது என்பதில் மிகுந்த கவனத்துடன் இருந்துள்ளார். சென்னை அரசின் பாடப்புத்தகக் குழுவில் இவர் உறுப்பினராக இருந்த காலத்தில் பிழையுடன் கூடிய நூல்களைப் பாடத்திட்டத்திலிருந்து புறக்கணித்தார். பணி ஓய்வுபெற்ற பின்பும் அவர் வீட்டில் வைத்து மாணவர்களுக்கு இலவசமாகப் பல ஆண்டுகள் வகுப்பு எடுத்திருக்கிறார்.

சற்குணர் உருவாக்கிய அறிஞர்கள் பல சிறந்த தமிழறிஞர்களை உருவாக்கிய பெருமை






சற்குணருக்கு உண்டு. மயிலை சீனி.வேங்கடசாமி நூல்களில் மிக முக்கியமானவை 'கிறிஸ்தவமும் தமிழும்', 'பௌத்தமும் தமிழும்', 'சமணமும் தமிழும்'. இந்த மூன்று நூல்களிலும் நன்றியோடு அவர் நினைவுகூர்ந்திருக்கும் ஒரே பெயர் சற்குணர். மயிலையார் 'கிறிஸ்தவமும் தமிழும்' எழுதுவதற்கு சற்குணரின் ஒரு உரையே காரணமாக அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. சற்குணரின் படத்தையும் இம்முதற்பதிப்பில் இணைத்துள்ளார்.# சற்குணரின் ஆறு பக்க ஆங்கில முகவுரையும் இதில் இடம்பெற்றுள்ளது. அடுத்து 1940இல் வெளிவந்த பௌத்தமும் தமிழும் நூலை மயிலையார் சற்குணருக்கே உரிமையாக்கியுள்ளார். அ.கி.பரந்தாமனார், பாலைக்கலிக்கு உரை எழுதி வெளியிட்ட தை.ஆ.கனகசபாபதி, உ.வே.சா.வின் பேரன் சுப்பிரமணியன் போன்ற இன்னும் பலர் சற்குணரிடம் பயின்ற மாணவர்கள். 'சற்குணர் அவர்கள் மாணவர் இயற்றியது' என்கிற வாசகம் தாங்கிய முகப்பட்டைகளுடன் இவரது மாணவர்களின் நூல்கள் வெளிவந்திருக்கின்றன.

சற்குணரின் அறுபதாம் ஆண்டு விழா 25.10.1937 அன்று சென்னை கோகலே மண்டபத்தில் தென்னிந்தியக் கல்விக்கழகம் சார்பில் உ.வே. சா. தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளது. பலரது வாழ்த்துரைகள் தொகுக்கப்பட்டு 'சற்குணர் மலரும் சற்குணீயமும்' என்கிற பெயரில் நூலாக வெளியிடப்பட்டது. தாம்பரத்தில் தான் குடியிருந்த வீட்டிற்கு 'தமிழ் அகம்" என்று பெயர் சூட்டி அழகு பார்த்தார் சற்குணர்.

தர்மராசு சற்குணரின் மணிவிழா 1937 ஆம் ஆண்டில் அ.கி.பரந்தாமனார் முயற்சியால் உ. வே. சாமிநாதையர் தலைமையில் சென்னையில் கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் பல தமிழறிஞர்கள் கலந்து கொண்டு அவருடைய பன்முக ஆளுமையை எடுத்துக் கூறினர். சற்குணர் மலரும் சற்குணீயமும் என்ற அரிய சிறப்பு மலரும் அப்போது வெளியிடப்பட்டது.

தனது 76ஆவது வயதில் 23.12.1952 அன்று இயற்கை எய்திய சற்குணரின் உடல் அவர் விரும்பிய வண்ணமே புறநானூற்றோடு வைத்து அடக்கம் செய்யப்பட்டது. அவரது இல்லமான 'தமிழ் அகம்' இப்போது அதே பெயரில் பெண்கள் தங்கிப் படிக்கும் விடுதியாக இயங்கிவருகிறது. தமிழுக்காகவும் மாணவர் நலனுக்காகவும் வாழ்ந்த சற்குணர்கள் வரலாற்றில் என்றும் நின்று நிலவும் நல்லாசிரியர்கள்.





SAKTHI CASH & CARRY
245-247 High Street North,
East Ham,
London E12 6SJ
+44(0)20 8471 4713
VARSHA
Ready to Cook
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA • SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा
SWATHI CASH & CARRY
306-308 High Street North, East Ham,
London E12 6SA
+44(0)20 8586 7648

புதினம்

# சிவகாமியின்



## மூன்றாம் பாகம் : பிக்ஷுவின் காதல்

## வேஷதாரி 25

வலது கால் எலும்பு முறிந்து எழுந்திருக்க முடியாதவராய்த் தரையில் விழுந்து கிடந்த ஆயனரண்டையில் வந்து புலிகேசிச் சக்கரவர்த்தி உட்கார்ந்தார்.

“மகா சிற்பியே! மன்னிக்க வேண்டும். உம்முடைய அற்புதச் சிலை வடிவங்களைக் காப்பாற்றுவதற்காகத்தான் இவ்வளவு விரைந்து வந்தேன். நீர் மூர்ச்சை தெளியும் வரையில் கூடக் காத்திராமல், உம்மைக் குதிரையின் மேல் வைத்துக் கட்டிக் கொணர்ந்தேன். அப்படியும் உம்முடைய சிலை சிலவற்றிற்கு ஆபத்து வந்து விட்டது; மன்னியுங்கள். ஏதோ மீதமுள்ளவையாவது பிழைத்தனவே என்று சந்தோஷப்படுங்கள்!” என்றார் புலிகேசி மன்னர்.

ஆயனர் அவருடைய முகத்தை ஆவலுடன் உற்றுப் பார்த்தார். அவருடைய உள்ளத்தில் ஏதோ ஒரு சந்தேகத்தின் நிழல் படர்ந்திருந்தது. இதென்ன விந்தை? வாதாபிச் சக்கரவர்த்தியா இவ்வளவு நன்றாகத் தமிழ் பேசுகிறார்? கொடுமைக்கும் குரூரத்துக்கும் பெயர் போன புலிகேசி மன்னரா தம் அருகில் உட்கார்ந்து இவ்வளவு சாவதானமாக வார்த்தையாடுகிறார்? இப்படிப்பட்ட நல்ல சுபாவமுடைய மன்னர் சிற்பிகளைக் காலையும் கையையும் வெட்டிப் போடும்படி கட்டளையிட்டிருப்பாரா? சிலைகளையும் சிற்பங்களையும் உடைத்துப் போட ஆக்ஞையிட்டிருப்பாரா? அந்தக் கடுவம் பூனை முகத்துத் தளபதி அப்போது சொன்னது உண்மையா? அல்லது இனிய தமிழ் பாஷையில் இதோ சக்கரவர்த்தியே பேசுவது உண்மையா?




சட்டென்று ஆயனருக்குச் சிவகாமியின் நினைவு வந்தது! ஐயோ! அவள் என்ன ஆனாள்? மற்றதையெல்லாம் மறந்து, “பிரபு! என் குமாரி சிவகாமியை உங்கள் வீரர்கள் பிடித்துக் கொண்டு போனார்கள்; ஐயோ! அவளைக் காப்பாற்றுங்கள். சிவகாமியை மறந்து விட்டு இந்தப் பாவி சிலைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறேனே?” என்று ஆயனர் அலறினார்.

அப்போது புலிகேசி, “ஆயனரே! கடவுள் அருளால் உம் மகளுக்கு ஆபத்து ஒன்றும் வராது. பத்திரமாக அவள் வாதாபி போய்ச் சேருவாள்!” என்றார்.

“ஐயோ! என்ன சொன்னீர்கள்? சிவகாமி வாதாபிக்குப் போகிறாளா? அப்படியானால் இந்தப் பாவி இங்கே எதற்காக இருக்கிறேன்? என்னையும் கொண்டு போய்விடுங்கள்!”

“அப்படித்தான் முதலில் எண்ணினேன், ஆனால் உம்முடைய காலை ஒடித்துக் கொண்டு விட்டீரே? இந்த நிலைமையில் சிறிது நகர்ந்தாலும் உமது உயிருக்கு ஆபத்து வருமே...!”

“பிரபு! அப்படியானால், என் உயிரைப் பற்றித் தங்களுக்குக் கவலை இருந்தால், என் மகளை இங்கே அனுப்பி வையுங்கள்!”

“அது இயலாத காரியம்...”

“ஆ! இதென்ன தாங்களும் ஒரு சக்கரவர்த்தியா? சிற்பியின் கால் கையை




வெட்டவும், சிலைகளை உடைக்கவும், கன்னிப் பெண்களைச் சிறைப்பிடிக்கவும் கட்டளை போடத்தான் உங்களால் முடியுமா?" என்று ஆயனர் ஆவேசமான குரலில் கத்தினார்.

அப்போது புலிகேசி, "ஆயனரே! உம்மிடம் ஒரு முக்கிய விஷயம் சொல்ல வேண்டும். தயவுசெய்து உம்முடைய சகோதரியை உள்ளே போகச் சொல்லும்!" என்று சாந்தமான குரலில் கூறி, பக்கத்தில் சொல்ல முடியாத மனக்குழப்பத்தையும் பீதியையும் முகத்தில் பிரதிபலித்துக் கொண்டு நின்ற சிவகாமியின் அத்தையைச் சுட்டிக் காட்டினார்.


"பிரபு! சொல்லுங்கள்! என் சகோதரியின் காது செவிடு! இடி இடித்தாலும் கேளாது!"

"இருந்தாலும், அவளைப் போகச் சொல்லும்!" என்றார் புலிகேசி.

ஆயனர் சமிக்ஞை காட்ட, அவருடைய சகோதரி முன்னை விட அதிகக் குழப்பத்துடன் உட்சென்றாள்.

புலிகேசி, "ஆயனரே! நான் சொல்வதை நன்றாய் மனத்தில் வாங்கிக் கொண்டு விடை சொல்லும்; உம்முடைய குமாரி இப்போது வாதாபியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறாள். ஒருவேளை நான் விரைந்து வேகமாகச் சென்றால், அவளைக் கண்டுபிடிக்கலாம். கண்டுபிடித்து, இவ்விடம் அனுப்பி வைத்தாலும் வைக்கலாம். ஆனால், இன்னொரு விஷயத்தையும் யோசியும், இதோ உம்முடைய அற்புத தெய்வீகச் சிலைகளை உடைத்தது போல், மாமல்லபுரத்து மகா சிற்பங்களையும் உடைத்தெறிவதற்காக ஒரு





ஏதோ ஓர் அற்புதமான சிருஷ்டி மர்மத்தினால் எங்கள் இருவருக்கும் கடவுள் அத்தகைய உருவ ஒற்றுமையை அளித்திருக்கிறார். அதைப் பயன்படுத்தி, பரத கண்டத்தின் பாக்கியத்தினால் பிறந்த மகா சிற்பியின் உயிரைக் காப்பாற்றினேன்."

"ஆ! சுவாமி! என் உயிரைக் காப்பாற்றி என்ன பயன்? என் மகள்....என் மகள் சிவகாமி!"

"ஆயனரே! நீரே சொல்லும், நான் என்ன செய்யட்டும் என்று? உம்முடைய மகளைத் தேடிக் கொண்டு போகட்டுமா? அல்லது மாமல்லபுரத்துக்குப் போகட்டுமா?"

பெரும் படை போயிருக்கிறது. நான் போனால் அந்தப் படையைத் தடுக்கலாம். உம்முடைய மகளைக் கொண்டு வருவதற்காகப் போகட்டுமா? அல்லது மாமல்லபுரத்துச் சிற்பங்களைக் காப்பாற்றுவதற்காகப் போகட்டுமா?" என்று கேட்ட போது, ஆயனரின் உள்ளத்தில் ஏற்கெனவே நிழல் போல் தோன்றிய சந்தேகம் வலுப்பட்டது.

இவ்வளவு நன்றாகத் தமிழ் பாஷை பேசுகிறவர் புலிகேசிச் சக்கரவர்த்திதானா? அவரை நன்றாக உற்றுப் பார்த்து, "ஐயா! தாங்கள்...தாங்கள்....!" என்று தயங்கினார்.

புலிகேசிச் சக்கரவர்த்தி உடனே தமது தலையிலிருந்த கிரீடத்தைக் கழற்றிக் கீழே வைத்தார். "ஆ! நாகநந்தி அடிகளா?" என்ற வார்த்தைகள் ஆயனரின் வாயிலிருந்து வெளிவந்தன.

"ஆம்; ஆயனரே! அந்த ஏழை பிக்ஷுவேதான்!"

"சுவாமி! இதென்ன கோலம்?"

"ஆம்; சிநேகிதர்களுக்கு உதவுவதற்காக இந்தக் கோலம் பூண்டேன். சமயத்தில் உதவியும் செய்ய முடிந்தது."

"ஆ! இது என்ன அதிசயமான உருவ ஒற்றுமை? தத்ரூபமாய் அப்படியே இருக்கிறதே! சுவாமி, தாங்கள் யார்? ஒருவேளை....!"

"இல்லை, ஆயனரே இல்லை! வாதாபி புலிகேசிச் சக்கரவர்த்தியும் நாகநந்தி பிக்ஷுவும் ஒருவரல்ல.

ஆயனர் வேதனை ததும்பிய குரலில், "சுவாமி! என் மகளைக் கடவுள் காப்பாற்றுவார். நீங்கள் மாமல்லபுரத்துக்குப் போங்கள்! உடனே புறப்பட்டுப் போங்கள்!" என்று கதறினார்.

அவரைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே வேஷதாரி பிக்ஷு அந்தச் சிற்பக் கிருகத்திலிருந்து வெளியே சென்றார். உட்புறத்திலிருந்து சிவகாமியின் அத்தை தயங்கித் தயங்கி வந்து ஆயனர் அண்டை உட்கார்ந்து கொண்டாள். "தம்பி! உனக்கு என்ன உடம்பு?" என்று கேட்டாள்.

ஆயனர் அதற்கு மறு மொழி சொல்லவில்லை. அத்தை திடீரென்று பதற்றத்துடன் "குழந்தை எங்கே? சிவகாமி எங்கே?" என்று கேட்டாள்.

ஆயனர் நிமிர்ந்து உட்கார்ந்து, அந்தச் சிற்ப மண்டபமே அதிரும்படியான உரத்த குரலில், "அக்கா! சிவகாமி எங்கே? என் மகள் சிவகாமி எங்கே?" என்று கேட்டார். கேட்டு விட்டுத் தலை குப்புறப்படுத்துக் கொண்டு விம்மி விம்மி அழுதார்.

ஆயனருடைய குரலைக் கேட்டுக் கொல்லைப்புறத்திலிருந்து ரதியும் சுகரும் உள்ளே ஓடி வந்தனர். ஆயனர் அழுவதைப் பார்த்து விட்டு அந்தப் பிராணிகள் சிலைகளைப் போல் அசையாமல் நின்றன.

(சபதம் தொடரும்)


படைப்பாளிகளுக்கு...
* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!
*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!
தொடர்புகளுக்கு
editor@ithamil.com



வாழ்வியல்

# யோகா

## யோகா செய்வதால் கிடைக்கும் நன்மைகள்


யோகா என்றால் என்ன? அதை ஏன் செய்ய வேண்டும்? எதற்கு செய்ய வேண்டும்? எப்படி செய்ய வேண்டும்? எப்பொழுது செய்ய வேண்டும்? என்ற கேள்விகள் நிறைய தோன்றுவதற்கு முக்கிய காரணம், யோகாவைப் பற்றின தெளிவான புரிதல் இல்லாததே, இதனைப்பற்றி ஒவ்வொரு அறிஞர்களும் ஒவ்வொரு விளக்கத்தை தருகின்றனர். இதனாலேயே பல குழப்பங்கள் ஏற்பட்டு பல கேள்விகள் எழுகின்றன. இந்த குழப்பங்களும், கேள்விகளும் எழாமலிருக்க சரியான அணுகுமுறையுடன் யோகாவை கற்று அதை செயல்படுத்தி ஆரோக்கிய வாழ்வை மேற்கொள்ளவேண்டும்.

இந்திய கலைகளில் யோகக்கலை பழம்பெரும்கலையாக போற்றப்பட்டு வருகிறது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய இக்கலைக்கு எழுத்து வடிவம் கொடுத்து யோகசூத்திரம் அமைத்து. உயிரூட்டி நிலைபெறச் செய்தவர். ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பதஞ்சலி முனிவர் ஆவார்.

இவர் யோகத்தின் தந்தை எனவும் அழைக்கப்படுகிறார். இதனால் யோகக் கலையும் பதஞ்சலி யோகம் என்றே அழைக்கப்படுகிறது. யோகா என்ற வடமொழி சொல்லுக்கு இணைத்தல் அல்லது ஒன்றாதல் அல்லது ஒருமுகப்படுத்துதல் என்று பொருள். உடலோடு உயிர் இணைந்து நிற்க வேண்டும். உயிரோடு மனம் ஒன்றுபட வேண்டும்.

உடலும், மனமும் இறைநிலையோடு இணைவதே யோகம். என்பதே அறிஞர்களின் விளக்கமாகும். இறைநிலை தெளிவில் இருந்துக் கொண்டு இறைநியதிகளை உணர்ந்து அவற்றிற்கு முரண்படாது அவற்றை மதித்து அவற்றிற்கு இசைவாக வாழ்தலே யோகம் ஆகும். யோகாவில் வெற்றி பெறுவதற்கு ஆசனப்பயிற்சிகள் மிகவும் உதவுகின்றன.

பதஞ்சலி முனிவர் யோகக்கலையை எட்டு பிரிவுகளாக பிரித்துள்ளார். அவைகள் இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகரா, தாரனா, தியானம், சமாதி எனப்படும். இதில் மூன்றாவது அங்கமே உடலை சரிசெய்யக்கூடிய யோகாசனம் ஆகும். இது தியானம் செய்ய உடலை தயார் படுத்துவதுடன், நோய் வராமல் உடலை காக்கிறது. எல்லா வயதினரும் எளிதில் செய்யக்கூடிய ஆசனங்களாக மட்டுமே






# யோகம்!

வந்தனா

குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆசனங்கள் உடலை இருக்கமின்றி வைத்துக்கொள்ள உதவுகின்றன. மேலும் இந்த ஆசனங்களை செய்துவிட்டு, தியானம் செய்யும்போது மனம் எளிதில் ஒருமைப் படுத்தப்பட்டு, ஒருமுகச் சிந்தனை தோன்றி தியானத்தில் கவனம் செலுத்த முடிகிறது.

யோகாசனம் செய்வதற்கு வயது வரம்பு 8 வயது முதல் 80 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு ஆசனங்களை செய்யலாம். மனதை ஒருநிலைப் படுத்தி செய்தல் மிகவும் அவசியம். யோகா ஒரு சிறந்த வலிநிவாரணி, தலைவலி, முதுகுவலி, கை—கால் வலி, மூட்டுவலி போன்ற உடல் வலி ஒவ்வொன்றிற்கும், ஒவ்வொரு முறைகள் உள்ளது. சிறு வயதிலிருந்தே நாம் இதனை செய்வதனால் நம் விருப்பத்திற்கு ஏற்றவாறு எந்த வயதிலும் உடலை வளைக்கும் தன்மையை இப்பயிற்சி மூலம் நாம் பெறலாம். மன அமைதி, தன்னம்பிக்கை, வாழ்வில் வெற்றி இவையனைத்திற்கும் ஆசனங்கள் மிக உதவியாக இருக்கும்.


நோய் வராமல் தடுக்கவும், வந்த நோய்களை குணமாக்கவும் இது பெரிதும் உதவுகின்றது. சில மருந்து, மாத்திரைகளால் பக்கவிளைவுகள் ஏற்படலாம். சிறந்த வலி நிவாரணியான இது எவ்வித பக்கவிளைவுகளும் இல்லாமல் உடல் வலியை குணப்படுத்துகிறது. மூச்சுக்காற்று மண்டலம், இரத்த மண்டலம், ஜீரண மண்டலம், நரம்பு மண்டலம் இவை சீராக இயங்க உதவுகிறது.



யோகாசனம் செய்வதால் உடலுக்கும், உள்ளத்திற்கும் அதிக ஆற்றலை கொடுத்து, உருதியையும் புத்துணர்ச்சியையும் அளித்துக்கொண்டே இருக்கும். மேலும் உடலுக்கும், உயிருக்கும், மனதிற்கும் நல்லிணக்கம் உண்டாகும். ஒழுக்க பண்புகளை மனதளவில் வளர்த்துக்கொள்ள உதவுகிறது. நமது நாளமில்லா சுரப்பிகளின் செயல்பாடுகளை சீரமைத்தும், நரம்புகளை ஊக்கப்படுத்தியும் இளமையை நீடிக்க உதவுகிறது. உடலுக்கு அழகான வடிவத்தையும் கொடுக்கிறது. ஆன்மா தன் பரிபூரண நிலையை அறிந்துகொள்ளவும்

உதவுகிறது. தொடர்ந்து யோகாசனங்கள் செய்து வந்தால் நம் உடலில் உள்ள பிரச்சனைகள் படிப்படியாக குறையும்.

நோய் வந்தபிறகு மருத்துவமனைக்கு சென்று நம் பணத்தை விரயம் செய்வதை தவிர்த்து,




தினமும் யோகாசனத்திற்கென்று நேரம் ஒதுக்கி உடற்பயிற்சிகளை மேற்கொள்ளலாம் 15 முதல் 30 நிமிடங்கள் செலவழித்தாலேபோதுமானது, அதனால் நாம் அடையப்போகும் பலன்கள் ஏராளம். எந்தவித நோயுமின்றி ஆரோக்கியத்துடன் வாழலாம்.

யோகா வகைகளும், செய்யும் முறைகளும்:


ஐக்கிய நாடுகளின் பொதுசபை ஜூன் 21 ம் தேதி தேசிய சர்வதேச யோகா தினமாக 2014 ம் ஆண்டு அறிவித்தது. உலகம் முழுவதும் இந்த தினத்தை 2015 முதல் கடைபிடித்து வருகிறது. ஒவ்வொரு யோகாசனத்திற்கும் ஒவ்வொரு செயல் முறைகள் இருக்கிறது. அந்தந்த வழிமுறையோடு செய்தால் முழுப்பலனையும் பெறலாம்.

சூரிய நமஸ்காரம், பத்மாசனம், சிரசாசனம், சாந்தியாசனம், நித்ராசனம், சர்வாங்காசனம், கூர்மாசனம், பவனமுக்தாசனம், மயூராசனம், காலாசனம், திரிகோணாசனம், பத்மசிராசனம், சிம்ஹாசனம், பகாசனம், சலபாசனம் என பலவகைகளில் யோகாசனங்கள் உண்டு. சிறுவர்கள் முதல் வயதானவர்கள் வரை அனைவருக்கும் ஏற்ற, முறைகள் இருக்கிறது. அந்த பயிற்சிகளை சரியான முறையில் கற்று தினமும் செய்துவர ஆரோக்கியமாக வாழலாம்.

யோகாசனங்களை விடியற் காலையில், வெறும் வயிற்றோடுதான் செய்ய வேண்டும். மேலும் திறந்தவெளியில், சுத்தமான காற்றை சுவாசிக்கக்கூடிய வகையிலும், அமைதியான இடத்திலேயே செய்ய வேண்டும். ஆசனங்கள் வெறும் தரையில் செய்யக்கூடாது ஏனெனில் நம் உடலில் உள்ள சத்திகள் புவி ஈர்ப்பு விசையுடன் பிணைக்கப்படும் அவ்வாறு பிணைக்கப்பட்டால் பயிற்சியினால் கிடைக்கும் சக்திகள் உடலில் முழுமையாக சேராது இந்த காரணத்தால் தான் தரையில் ஏதேனும் விரிப்பை பயன்படுத்தி ஆசனங்களையும் தியானங்களையும் செய்ய வேண்டும். இதன்படி யோகப்பயிற்சிகள் செய்துவந்தால் உடல் மட்டுமல்ல, உளவியல் ரீதியாவும் பல நன்மைகளை அடையலாம்.

கர்ப்பத்தின் போது சிறந்த உடலமைப்பை பெற யோகா செய்ய வேண்டும். யோகா செய்வதை வழக்கமாக்கி கொண்டால், சோர்வைப் போக்கி, டென்ஷனை தவிர்த்து, திசுக்களை தளர்வடைய செய்து, இரத்தத்தை பெருக்கி, செரிமான தன்மையை அதிகப்படுத்தி, நரம்புகளை சீராக்க முடியும். மேலும் கர்ப்பக் காலத்தில் ஏற்படும் இரத்த சோகை, முதுகு வலி, கால் வலி, செரிமானம் கெடுதல் போன்றவை சீரடையும். யோகா செய்வதற்கு முன் மருத்துவரின் ஆலோசனையை பெறவும்.

யோகா சுவாசக் கோளாறை சரிசெய்து, மூளையையும், உடல் ஆரோக்கியத்தையும் பலப்படுத்துகின்றது. அதிலும் அன்றாடம் சிக்கலுக்குக் உள்ளாக்கப்படும் மூளையின் உட்பிரிவு சம்பந்தமான பிரச்சினைகளை சரிசெய்கின்றது.




யோசிக்கும் திறனுக்கும், உருவாக்கும் திறனுக்கும் உள்ள சமநிலையை உருவாக்கும் தன்மை யோகாவிற்கு உள்ளது.

உடலுக்கு ஊக்கம் நோயற்ற உடலே ஆரோக்கியமானது என்று இல்லை, மூளைக்கும் உணர்வுக்கும் சமநிலை இல்லாத நிலையும் ஆரோக்கியமற்றதே. யோகா செய்வதால் முழுமையான உடல் அமைப்பையும், ஆரோக்கியத்தையும் பெற முடியும். மேலும் நோயற்ற வாழ்வை மகிழ்ச்சியுடனும், மன அமைதியுடனும் கொண்டாட முடியும்.

இரத்த ஓட்டத்தை அதிகரிக்கும் யோகாவின் பல வித அமைப்புகள், சுவாசம் மற்றும் இரத்த ஓட்டத்தை அதிகரிக்கக் கூடியது. இதனால் உடலின் அனைத்து பாகங்களுக்கும் இரத்த ஓட்டமானது சீராக இருக்கும். தொப்பையற்ற வயிறு தொப்பையற்ற வயிற்றை பெறலாம் என்று அறியும் முன்னர், எந்த பயிற்சியாலும் இந்த தன்மையை எளிதில் பெற முடியாது என்ற உண்மையை புரிந்து கொள்ள வேண்டும். நவுக்காசனா, உஷ்த்ராசனா, க்ரஞ்சஸ் போன்ற யோகாசனங்களை தினமும் செய்தால், தொப்பையற்ற வயிற்றை பெறலாம். இதனுடன் சீரான உணவு முறையையும் பின்பற்ற வேண்டும். இதயம் இதயம் யோகாவின் மூலம் இதய நோய்களை கூட குணப்படுத்த முடியும். இதனால் இரத்த ஓட்டம் சீரடைந்து இரத்த அடைப்பை போக்கி ஆரோக்கியமான இதயத்தை பெற முடிகின்றது

இதயம் யோகாவின் மூலம் இதய நோய்களை கூட குணப்படுத்த முடியும். இதனால் இரத்த ஓட்டம் சீரடைந்து இரத்த அடைப்பை போக்கி ஆரோக்கியமான இதயத்தை பெற முடிகின்றது

வலி நிவாரணி யோகாவின் மூலம் தசைகள் தளர்வடைவதால் முதுகு வலி, கால் வலி போன்ற வலிகளில் இருந்து விடுபடலாம். உட்கார்ந்த இடத்தில் வேலை பார்ப்பவர்களும், டிரைவர்களும் தினமும் யோகா செய்ய வேண்டும். இதனால் முதுகு தண்டுகளில் பிடிப்புகளை போக்க முடியும்.

சீரான சுவாசம் சீரான சுவாசம் மூச்சு பயிற்சியால் சீரான சுவாசத்தை பெற முடியும். யோகா செய்வதால் நுரையீரல்களை சீர்படுத்தி சீரான சுவாசதத்தைப் பெறலாம். அதிலும் ஆழமான மூச்சு பயிற்சி உடல் வலிமையை கூட்டி மன அழுத்தத்தை போக்குகின்றது.

சமநிலை வயதான காலத்தில் உடல் தளர்வடைந்து கீழே விழ நேரிடும். அதற்கு யோகா மிக அவசியம். கீழே விழுதல், முதுகு வலி போன்ற அனைத்து வலிகளுக்கும் யோகா நிவாரணம் அளிக்கின்றது. இதனால் உடல் வலிமை அடைவதுடன், மூளையும் சீராக செயல்படுகின்றது.

மன அழுத்தத்தை போக்கும் மன அழுத்தத்தை போக்கும் கடினமான வேலையை செய்தவுடன் யோகா செய்தால், மன அழுத்தத்தை போக்கி கொள்ள முடியும். யோகா மட்டும் இல்லை மற்ற உடற்பயிற்சிகளாலும் மன அழுத்தத்தை போக்க முடியும்.




## பற்களை நேசிப்போம்!

உணரப்படும் வலிகளிலேயே பற்கள் சார்ந்த நோய்களால் உண்டாகும் வலி மிகக் கொடியது! உணர்ந்தவர்களுக்கே அந்த வலியின் தீவிரம் புரியும். பற்களின் ஆரோக்கியத்தில் நாம் முழு அக்கறை கொண்டிருக்கிறோமா என்றால், ‘நிச்சயமாக இல்லை’ என்பதே பதில்.

பற்களுக்கு மருத்துவம் பார்த்த பிறகு ஒரு பல் மருத்துவர் தனது நோயாளியிடம் கண்ணாடியைப் பார்க்கச் சொல்லி இருக்கிறார். நோயாளியோ கண்ணாடியில் தனது பற்களைப் பார்க்காமல், முகத்தைப் பல முறை பார்த்து தலைமுடியைக் கோதிக்கொடுத்துச் சீர்படுத்தி இருக்கிறார். இப்படித்தான் இருக்கிறது, பற்களின் மீது பலர் கொண்டிருக்கும் இன்றைய நேசம்.

நேரம் ஒதுக்குங்கள்: விளம்பரங்களைப் பார்த்து வாங்கும் பற்பசை களை நாம் முறையாகப் பயன்படுத்துவதில்லை என்பதே உண்மை. பற்பசைகளின் அட்டையில் அச்சிடப்பட்டிருக்கும் விஷயங்களைப் படிக்கவும் நாம் நேரம் ஒதுக்குவதில்லை. துரித உணவு வகைகளோடு துரித வாழ்க்கை வாழ்வதைப் போல, நேரமின்மை காரணமாகப் பற்களை ஒரு பொருட்டாகவே மதிக்காமல் துரித கதியில் அவற்றைச் சுத்தம் செய்கிறோம். பல் துலக்குவதும் மலம் கழிப்பதைப் போல உணர்ந்து செய்யப்பட வேண்டிய ஒரு செயல்பாடு. நடந்து கொண்டே பல் துலக்குவது, கைப்பேசியில் பேசிக் கொண்டே பல் துலக்குவது, இன்னும் உச்சக்கட்டமாகச் சிலர் இரு சக்கர வாகனத்தில் பயணித்துக்கொண்டே பல் துலக்குவதைக்கூடச் சில நேரம் பார்க்க முடிகிறது. அவர்களுடைய பற்களின் நிலைமையைக் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்.

நமது முக அழகைப் பல முறை கண்ணாடியில் பார்த்து ரசிக்கும் நாம், பற்கள் ஆரோக்கியமாக இருக்கின்றனவா, அவற்றில் ஏதாவது மாற்றம் தெரிகிறதா, சொத்தைக்கான அறிகுறிகள் தென்படுகின்றனவா, பல் ஈறு அமைப்பு வலுவாக இருக்கிறதா, பல் பிரச்சினைகளின் காரணமாக வாய் நாற்றம் ஏற்படுகிறதா என்பனவற்றை அறிவதற்கு எனத் தினமும் பற்களுக்காக நேரம் ஒதுக்க வேண்டும். ‘பற்கள் தானே, அவற்றில் என்ன பாதிப்பு வந்துவிடப் போகிறது, நாம்தான் பற்பசைகளைக் கொண்டு பாத்திரம் கழுவுவதைப் போலத் தினமும் அவற்றைத் தேய்க்கிறோமே’ என்கிற உதாசீனம் பற்கள் சார்ந்த நோய்களில் கொண்டுபோய் நிறுத்திவிடும்.

முன்னெச்சரிக்கை அவசியம்: ஞெகிழி பல்துலக்கியைக் கொண்டு பல் துலக்குகிறோம்; அதன் முனையில் நிறையப் பற்பசையைப் பிதுக்கி வரைமுறையில்லாமல் வலமும் இடமும் மேலும் கீழும் எனப் பற்களைத் தேய்க்கிறோம்; நுரைப் பொங்கத் தேய்த்த பிறகு, பற்பசையின் சுவையும் செயற்கை சுகந்தமும் வாயிலிருந்து முழுமையாக வெளியேறும்வரை சிலர் வாய் கொப்பளிப்பதில்லை. லேசான வலி ஏற்பட்டாலும் பற்களைப் பலர் கவனிப்பதில்லை.

பற்களில் லேசான கறுப்புப் புள்ளி தோன்றிய வுடனே, பல் சொத்தை ஏற்பட்டுவிட்டது என்கிற






டாக்டர்
**வி.விக்ரம்குமார்**

முன்னெச்சரிக்கையுடன் பல் மருத்துவரிடம் செல்லும் விழிப்புணர்வு தேவை. இல்லையென்றால், அந்தப் பல் சொத்தையாகி, அதன் உட்புற அமைப்பு வரை சிதைந்து, மற்ற பற்களுக்கும் கரும்புற்றுப் போலப் பரவி, பற்களை அகற்ற வேண்டிய நிலை ஏற்படும். உதாசீனம் வேண்டாம்: 'நீங்கள் பேசும்போது வாயில் துர்நாற்றம் வருகிறது' என்று எதிரில் இருப்பவர் சொன்ன பிறகும் மருத்துவரைப் பார்க்க முயலாமல், என்ன பற்பசைக்கு மாறலாம் எனத் தொலைக்காட்சி விளம்பரங்களில் தேடுவது பற்களைப் பாழாக்கிவிடும்.

வாய் துர்நாற்றத்திற்கான காரணம் பற்களா, செரிமான உறுப்புகள் சார்ந்த பிரச்சினையா என்பதை முதலில் கண்டறிவது அவசியம். விலை உயர்ந்த பற்பசைகளைப் பயன்படுத்தினாலும், வேறு மருத்துவக் காரணங்களுக்காக வாய் துர்நாற்றம் ஏற்படுமாயின், அடிப்படையைச் சரிசெய்யாமல் வாய் துர்நாற்றத்தை அகற்றிவிட முடியாது.

என்ன செய்ய வேண்டும்? — இளம் வயதிலேயே பற்களின் மேற்பரப்பிலும், இடுக்குகளிலும் ஒட்டும் தன்மையுள்ள உணவுப் பொருள்களை (Sticky food substances) தவிர்ப்பது அவசியம். எவ்விதமான உணவுப் பொருளைச் சாப்பிட்டாலும், குறிப்பாக சாக்லேட், ஐஸ்கிரீம் போன்ற பற்களில் ஒட்டக்கூடிய ரகங்களை வாய்ப் பகுதிக்குள் அனுமதித்ததும் உடனடியாக வாய்கொப்பளிப்பது முக்கியம். தினமும் இரண்டு முறை பல் துலக்குவது அத்தியாவசியம். தினமும் பற்பசை, பல்துலக்கி கலாச்சாரத்திற்கு முழுமையாக மாறிவிடாமல், வாரயிறுதி நாள்களிலாவது இயற்கை முறை தூய்மைக்குச் சிறிது அனுமதி கொடுக்கலாம். வேப்பங் குச்சிக்கா நம்மிடம் பஞ்சம்! கருவேல மரக்குச்சிகளின் சுவையையும் பல் துலக்குவதன் மூலம் உணர்ந்து பார்க்கலாம்!

சித்த மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் திரிபலா சூரணம், தந்த தாவனப் பொடி, தனிக்






கடுக்காய் பொடி போன்றவற்றைப் பல் துலக்கப் பயன்படுத்தலாம். ஆலம் விழுது, நாயுருவி வேர், புங்கன் வேர், விளா, நாவல், மருதம் போன்ற மூலிகைத் தாவரங்களையும் பற்குச்சிகளாகப் பயன்படுத்தலாம். ஓமம், சீரகம், கடுக்காய், லவங்கப்பட்டை, நெல்லிக்காய், தான்றிக்காய், மிளகு ஆகியவற்றை முறையாகப் பொடித்து, பற்பொடியாகப் பயன்படுத்தலாம்.

நல்லெண்ணெய், ஓமத்திநீர், ஆலம் பால் ஆகியவற்றைக் கொண்டு வாய்கொப்பளிக்க நல்ல பலன் கிடைக்கும். பற்களோடு சேர்த்து ஈறுகளின் ஆரோக்கியத்தையும் கவனத்தில் கொள்வது அவசியம். தினமும் ஈறுகளோடு நமது விரல்களை மெதுவாக உறவாட விட, அதன் வலிமை அதிகரிக்கும். ஈறுகளிலிருந்து ரத்தக் கசிவு ஏதேனும் இருக்கிறதா, வீக்கம் இருக்கிறதா என்பதைக் கவனிப்பதும் முக்கியம்.

பற்களுக்கெனத் தினமும் காலையும் இரவும் நேரம் ஒதுக்கி நமது நேசத்தை வெளிப்படுத்தினால், பற்களும் நம் மீதான நேசத்தை ஆயுள் முழுவதும் வெளிப்படுத்தும்; வலிமையாக! அதனால், பற்களை நேசிப்போம் முழு மனதுடன்! அதில் ஒன்று தான் திரிபலா சூரணம் மருந்து. திரி என்றால் வடமொழியில் மூன்று என்று பொருள். அதாவது மருத்துவ குணங்கள் மிகுந்த நெல்லிக்காய், கடுக்காய், தான்றிக்காய் ஆகிய மூன்று காய்களையும் முறையாக பக்குவம் செய்து சூரணம் எனப்படும் பொடியாக தயாரிக்கப்படுவது தான் “திரிபலா சூரணம்“ எனப்படும். திரிபலா சூரணம் பயன்படுத்துவத்தால் கிடைக்கும் நன்மைகள்

திரிபலா சூரணம் நமது உடலில் இயற்கையாகவே அமைந்திருக்கும் நோய் தடுப்பு அரண்களைத் தாண்டி, உடலின் உள்ளே நுழையும் அனைத்து கிருமிகளையும் எதிர்த்துப் போராடும் நோய் எதிர்ப்பு சக்திகளை அதிக அளவில் உற்பத்தி செய்ய உதவுகிறது.

ரத்த சோகை


ரத்த சோகை குறைபாடு ஏற்படாமல் இருக்க இரத்தத்தில் இரத்த சிவப்பு அணுக்களின் எண்ணிக்கை அதிகம் இருப்பது அவசியம். திரிபலா சூரணம்அதிகம் சாப்பிடுபவர்களுக்கு ரத்தத்தில் சிவப்பு அணுக்களின் எண்ணிக்கை அதிகரிப்பதோடு, நோய் எதிர்ப்பு திறனையும் பலப்படுத்துகிறது.

சர்க்கரை நோய்

திரிபலா சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்துவதில் சிறப்பு மிக்க ஒரு மருந்தாக செயல்படுகிறது. உடலில் குளுகோஸின் அளவை சமநிலையில் பேணுவதில் பெரும் பொறுப்பு வகிக்கும் இன்சுலினை தூண்டி, சர்க்கரையின் அளவை கட்டுக்குள் வைக்கிறது. மேலும்கசப்புச் சுவையுடன் இருப்பதனால், அதீத சர்க்கரை நிலை உள்ளவர்கள் இதனை எடுத்துக் கொள்வது நன்மையளிக்கும்.

செரிமானமின்மை






செரிமானக் கோளாறுகளை திரிபலா அற்புதமாக குணப்படுத்துகிறது. அதிலும் உணவுப்பாதையில், மலத்தினை வெளித்தள்ளும் குடலியக்கத்தை சீராக செயல்பட வைக்கிறது. மலச்சிக்கல் தீரவும், குடல்சுத்திகரிப்பானாகவும் திரிபலா சிறப்பாக செயல்படுகிறது. மலச்சிக்கலுக்கு அதிகமாகப் பரிந்துரைக்கப்படும்

சருமப் பிரச்சனைகள்

திரிபலா சூரணம் இரத்தத்தினைச் சுத்தம் செய்து இரத்தத்திலுள்ள நச்சுப்பொருட்களை வெளியேற்றும் தன்மை கொண்டிருப்பதால், சரும நோய்களுக்கான மருத்துவத்தில் சிறப்பான பங்காற்றுகிறது. மேலும்உடலின் சருமத்தில் ஏற்பட கூடிய தொற்று நோய்கள், சொறி, சிரங்கு போன்றவற்றை சீக்கிரம் குணப்படுத்துவதில் திரிபலா சூரணம் சிறந்த மருந்தாகும்.

சுவாச நோய்கள்

நமது ஈரல்களில் சளி, ஆஸ்துமா, பிராங்கைடிஸ் போன்ற பல வியாதிகளை நீக்கும் ஒரு அற்புத மருந்தாக திரிபலா சூரணம் இருக்கிறது. இது சுவாசப் பாதையிலுள்ள அடைப்புகளை நீக்கி சீரான சுவாசம் ஏற்பட பெரிதும் உதவுகிறது. சளி,சைனஸ் நோய்களை தீர்க்கும் மருந்தாகவும் இது செயல்படுகிறது.

வயிற்று பூச்சிகள்

குழந்தைகள் அதிகம் இனிப்பு சாப்பிடுவதால், வயிற்றில் பூச்சி, புழு தொந்தரவுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். இவர்களுக்கு திரிபலா சூரணத்தை அவ்வப்போது கொடுத்து வருவதால் வயிற்றிலிருந்து நாடாப்புழுக்களையும், வளையப்புழுக்களையும் அகற்றுவதற்கு பெரிதும் உதவுகிறது.

உடல்பருமன்

திரிபலாவில் கொழுப்புகளை கரைக்கும் அதீத மருத்துவக் குணம் நிறைந்துள்ளதால் உடலிலுள்ள கொழுப்பின் அளவு வெகு சீக்கிரத்தில் குறையும். நமது உடலில் கொழுப்பு படிவதற்குக் காரணமான அடிபோஸ் செல்களை இந்த மருந்து கட்டுப்படுத்துவதால், கொழுப்பின் அளவு குறைந்து, உடல் பருமன் கட்டுப்படுத்தப்படுகிறது.

தலைவலி

சிலருக்கு உடலில் இருக்கும் நரம்பு சம்பந்தமான கோளாறுகளாலும், வேறு பல காரணங்களாலும் அடிக்கடி தலைவலி ஏற்படுகிறது. பல விதமான தலைவலி பிரச்சனைகளுக்கு சிறந்த நிவாரணமாக திரிபலா சூரணம் பயன்படுகிறது.

புற்று நோய்

திரிபலாவுக்கு புற்றுநோயைக் குணப்படுத்தும் திறன் அதிகம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. புற்றுநோய் செல்களில் மைட்டேடிக் நிலையில் ஸ்பிண்டில் வடிவத்தோற்றம் உண்டாவதைக் குறைக்க திரிபலா பேருதவி செய்கிறது. அதன்மூலம், புற்று செல்கள் வளரும் அபாயத்தையும் குறைத்து, உடல்நலனை காக்கிறது.



# தேவையற்ற

## ஆசைகளெல்லாம் தேவைகளல்ல


‘ஆசையே துன்பத்திற்கு காரணம்’ என்றார் கௌதம புத்தர். ‘பேராசை பெருநஷ்டம்’ என்கிறது பழமொழி. ஆனால், ஆசை மனித வாழ்வின் முக்கியமான ஒரு உந்துசக்தியாக இருக்கிறது.‘தேவையில்லாத பொருள்களை நீங்கள் வாங்கினால், தேவையான பொருட்களை விற்க நேரிடும்’ என்பது உலகின் மிகப்பெரும் செல்வந்தரான வாரன் பஃபட்டின் கூற்று.

நாம் ஒவ்வொருவரும் மகிழ்ச்சியாகவும் வசதியாகவும் வாழ விரும்புகிறோம். தனிநபரின் வாழ்வியல் முறை சார்ந்து ஒவ்வொருவருவரின் தேவைகளும்,ஆசைகளும் மாறுபடுகின்றன. நம்முடைய பொருளாதார வசதியின் அடிப்படையில், ஒவ்வொரு நிலையிலும் நமது ஆசைகள் நிறைவேறும்போது நாம் மனநிறைவினை பெறுகிறோம். இருப்பினும், நிறைவேறாத ஆசைகள், விரக்திக்கு வழிவகுக்குகின்றன.

ஒருவருக்கு அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும் வரை, அவரால் மற்ற ஆசைகளை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்த முடியாது. நாம் நம்முடைய ஆசைகளைப் புரிந்துகொள்வது அவசியம். அது,அவற்றை அடைவதற்கான முயற்சிகளை எடுக்க உதவும். நம்முடைய தேவைகளுக்கும் ஆசைகளுக்கும் இடையே உள்ள வேறுபாட்டினை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எது இல்லாவிட்டால் நம்முடைய இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுமோ, அதுதான் நம்முடைய தேவையாகும். நம்முடைய ஆசைகள் பூர்த்தியடையாவிட்டாலும் நம்மால் வாழ இயலும். ஆனால், அடிப்படையான தேவைகள் நிறைவு செய்யப்படாவிட்டால் நம்மால் வாழ இயலாது.

தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டியது கட்டாயம். ஆசைகளை அதற்கான வசதியும் வாய்ப்பும் வரும்போது நிறைவேற்றிக் கொள்ளலாம். பொதுவாக உணவு, உடை, வீடு, கல்வி, மருத்துவம் போன்றவை ஒரு மனிதனின் அடிப்படைத் தேவைகளாக கருதப்படுகின்றன.

தேவைகள்,ஆசைகள் ஆகிய இரண்டைப் பற்றிய சரியான புரிதல், நம்முடைய வீட்டுப் பொருளாதாரத்தை நாம் திறம்பட நிர்வகிக்க உதவுகிறது. வரவு,செலவு, சேமிப்பு என்ற இவை மூன்றும்தான் ஒரு மனிதனின் செல்வ வளத்தைத் தீர்மானிக்கின்றன. நம்முடைய செலவுகள் நம்முடைய தேவைகளை நோக்கி மட்டுமே அமைய வேண்டும்.






# ஆசைகள்

முனைவர்
என். பத்ரி

தற்காலத்தில், அனைத்து வசதிகளும் கொண்ட கைப்பேசி அனைவருக்கும் தேவைதான். இன்று பலருக்கு அது அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றாகவே மாறிவிட்டது. நம்முடைய நிதிநிலைக்கு ஏற்ப அதனை வாங்கிக் கொள்ளலாம். ஆனால் இப்படித் தேவை கருதி வாங்கிய கைப்பேசியை அடிக்கடி மாற்ற நினைத்தால் அதனுடைய தேவை, ‘ஆசை’யாக மாறிவிடும். நம் கைப்பேசி முற்றிலும் பயனற்று போனால் மட்டுமே, புதிய கைப்பேசியை வாங்குவது பற்றி யோசிக்க வேண்டும்.

நமக்கு எது தேவை, எது தேவையற்றது என்பதை பட்டியலிட்டு, அதற்கு ஏற்ப செலவுகளை அமைத்துக் கொள்ள வேண்டும். நமது செல்வ வளத்தைப் பெருக்குவதற்கும், தேவையில்லாமல் கடனில் மூழ்குவதைத் தவிர்ப்பதற்கும் இந்த அணுகுமுறை முக்கியமானதாகும். நமது வரையறுக்கப்பட்ட வருமானத்தை முக்கியமான தேவைகளுக்கு ஒதுக்கீடு செய்ய கற்றுக் கொள்ள வேண்டும். தேவையற்ற செலவுகளைக் கண்டறிந்து அவற்றில் செலவிடுவதை உடனே நிறுத்த வேண்டும்

ஒரு பொருளைப் பார்த்தவுடன் அதனை வாங்க வேண்டும் என நம்முள் எழும் ஆசையை கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். அதனுடைய பயன்பாடு இல்லாமல், நம் வாழ்வு சாத்தியம் என்றால் அதை வாங்கக் கூடாது. மனிதனின் ஆசைகள் எண்ணிலடங்காதவை. ஒரு ஆசை நிறைவடையும்போது, மற்றொரு ஆசை துளிர்விடும். நாகரிகம் வளர வளர மனிதனின் ஆசைகள் பெருகும். ஆசைகள் பழக்கங்களாகவும் வழக்கங்களாகவும் மாறும். ஆசைகள் நிறைவேறக் கூடியவை என்றாலும், நம்முடைய அனைத்து விருப்பங்களையும் நிறைவு செய்ய நமது நிதி நிலைமை அனுமதிப்பதில்லை. ஆனால்,ஆசைகளை மாற்று வழிகளில் நிறைவு செய்யமுடியும். நான்கு சக்கர வாகனத்தை வாங்க விரும்புவர்கள் அது முடியாதபோது இருசக்கர வாகனத்தை வாங்கலாம்.




நமது அனைத்து ஆசைகளும் சமமான முக்கியத்துவம் பெற்றவை அல்ல. ஆகவே




ஆசைகளிடையே போட்டி ஏற்படுகின்றது. ஆதலால் சாதாரணஆசையைக் காட்டிலும், தீவிரமான ஆசையை நாம் முதலில் தேர்ந்தெடுக்கிறோம். சில ஆசைகள் ஒரு முறை நிறைவு செய்யப்பட்டால், மீண்டும் மீண்டும் தோன்றக்கூடியவை. ஐந்து நட்சத்திர உணவகத்துக்கு முதல் முதலில் செல்பவர் தொடர்ந்து செல்ல விரும்புவார்.

தேவையற்ற செலவுகளைக் கட்டுப்படுத்தி, நாம் சேமிக்கின்ற பணத்தை நல்ல வழியில் முதலீடு செய்தால் நம்முடைய சேமிப்பு செல்வமாக மாறும். அடிப்படையான தேவைகளை உடனடியாகக கவனித்தும், தகுந்த வாய்ப்புகள் அமையும் பொழுது ஆசைகளை நிறைவேற்றியும் வந்தால் மனநிறைவான, மகிழ்ச்சியான வாழ்க்கையை உறுதி செய்யமுடியும். மகிழ்ச்சி என்பது வாங்கிக் குவிக்கின்ற பொருட்களைப் பொறுத்தது அல்ல. வாழ்க்கையைப் புரிந்து கொண்ட மனதைப் பொறுத்தது. தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து செலவுகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டால், நம்முடைய ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளும் காலம் விரைவில் வரும்.

தேவை மனித உடலுடன் தொடர்புடையது; ஆசை மனித மனத்துடன் தொடர்புடையது. நமக்கு பசி, தாகம் ஏற்படும் போது அதுவே உடலின் தேவை. இந்த தேவைகள் பூர்த்தி செய்யப்படாவிட்டால் மனித உடல் பாதிக்கப்படும். எனவே, நமதுதேவைகளைக் குறைக்க முடியாது, அவை நாம் உயிர்வாழத் தேவையானவை.

ஆசை என்பது உங்கள் வாழ்வின் நோக்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. நாம் அனைவரும் வாழ்க்கையில் முக்கியமான ஒன்றைச் செய்ய வேண்டும் என்ற ஆசையுடன் பிறந்திருக்கிறோம். எங்கள் ஆசை நமக்கு தனித்துவமானது மற்றும் நாம் பிறந்த இயற்கை திறன்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. நம் ஆசைகள் நம்மை வாழ்நாள் முழுவதும் வழிநடத்துகின்றன. ஏதோவொன்றாக இருக்க வேண்டும் என்ற ஆசை நமக்குக் கொடுக்கப்பட்டு, அதை அடைவதற்கான இயற்கையான திறன்களால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம் என்று நினைக்கிறேன். உதாரணமாக, ஒரு நல்ல கார்ட்னர் வெட்டுதல், வெட்டுதல் மற்றும் கத்தரித்தல் ஆகியவற்றில் திறன்களுடன் பிறக்கிறார்; அவன்/அவள் வலுவான கையேடு திறன்களுடன் பிறந்திருக்கிறாள். விவரங்களுக்கு துல்லியம் மற்றும் கவனம் உள்ளது. மற்றும் மிக முக்கியமாக பூக்கள், மரங்கள், புதர்கள், தாவரங்கள் பிடிக்கும் மற்றும் ஒரு தோட்டத்தில் இருப்பது அனுபவிக்கிறது. எனவே, தேவை, விருப்பம் மற்றும் ஆசை பிரமிடுகளில், ஆசை கீழே உள்ளது, அதிக இடத்தை ஆக்கிரமிக்கிறது.

தேவை, விருப்பங்கள் மற்றும் ஆசைகளின் முடிவில்லாத சுழற்சியின் காரணமாக சந்தைப்படுத்தல் உலகம் உயிர்வாழ்கிறது. மனித தேவைகள், விருப்பங்கள் மற்றும் ஆசைகள் வரம்பற்றவை. நம்முடைய சில தேவைகளை நாம் பூர்த்தி செய்யலாம் ஆனால் விரைவில் புதிய ஆசைகள் எழுகின்றன. மக்களின் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்வதற்காக பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்வது சந்தையாளர்களால் இயலாது. இவ்வாறு பற்றாக்குறை என்பது வரையறுக்கப்பட்ட வளங்களுக்கும் வரம்பற்ற தேவைகளுக்கும் இடையே உள்ள உறவையும் அங்குள்ள பிரச்சனையையும் விளக்குகிறது.

மிகப்பெரிய சந்தைப்படுத்தல் உண்மை என்னவென்றால், மக்கள் தங்களைப் பற்றி கவலைப்படுகிறார்கள், நிறுவனங்கள் அல்ல. மக்கள் தேவைகள், விருப்பங்கள் மற்றும் ஆசைகளால் வெடிக்கிறார்கள், மேலும் அவர்கள் அந்த உணர்ச்சிகளை திருப்திப்படுத்த பொருட்களை வாங்குகிறார்கள். வாடிக்கையாளர்கள் ஒரு குறிப்பிட்ட தேவையை பூர்த்தி செய்யும்போது மட்டுமே தயாரிப்புகளைப் பற்றி அக்கறை கொள்கிறார்கள். மேலும், சந்தையாளர்கள் இந்த உண்மையை உணர வேண்டும்.

மக்கள் உணர்ச்சிகரமான உயிரினங்கள் என்பதை சந்தையாளர்கள் உணர வேண்டும். அவர்கள் உணர்ச்சியின் அடிப்படையில் பொருட்களையும்

சேவைகளையும் வாங்குகிறார்கள், அதை அவர்கள் பின்னர் தர்க்கத்துடன் நியாயப்படுத்துகிறார்கள். வாங்குதல் முடிவெடுக்க சில வினாடிகள் ஆகும், மேலும் டோபமைன் (நல்ல நரம்பியல் வேதியியல்) நன்கு தொகுக்கப்பட்ட, பளபளப்பான அழகாக தோற்றமளிக்கும் புதிய பொருட்களின் முன்னிலையில் உயர்கிறது. உணர்ச்சிகள் ஆட்சி செய்யும் போது, கிரெடிட் கார்டு ஸ்வைப் செய்யப்படுகிறது அல்லது பணமாக செலுத்தப்படுகிறது. மற்றும் டோபமைன் வாங்குபவரின் வருத்தம் ஏற்படும் போது, வாடிக்கையாளர்கள் தங்கள் உணர்ச்சிபூர்வமான வாங்குதலை நியாயப்படுத்த தர்க்கத்தைப் பயன்படுத்துகின்றனர். இது சந்தைப்படுத்தலில் பிந்தைய கொள்முதல் நீலம் என்று அழைக்கப்படுகிறது. ஆனால் ஏமாற்றம் மன அழுத்தத்தை உருவாக்குகிறது, வாங்குதலுக்குப் பிந்தைய அனுபவம் விற்பனைக் குழுவால் ஈர்க்கப்பட்டதைப் போன்றது அல்ல.




வாங்குவதைத் தொடர்ந்து வரும் அனைத்து செயல்பாடுகளும் அனுபவங்களும் பிந்தைய கொள்முதல் நடத்தையில் சேர்க்கப்பட்டுள்ளன. வழக்கமாக, கொள்முதல் செய்த பிறகு, நுகர்வோர் வாங்குவதற்குப் பிந்தைய முரண்பாடுகளை அனுபவிக்கிறார்கள். சில சமயங்களில் அவர்கள் எடுத்த முடிவுகளுக்கு வருந்துவார்கள். அதிக எண்ணிக்கையிலான மாற்றுகள்/மாற்றுகள், மாற்றுகளின் நல்ல செயல்திறன் அல்லது மாற்றுகளின் கவர்ச்சி போன்றவற்றால் இது முக்கியமாக நிகழ்கிறது.

விற்பனையாளர்கள் பெரும்பாலும் நுகர்வோரை நம்பவைக்க வேண்டும் மற்றும் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வு சரியானது என்று உறுதியளிக்க வேண்டும். விற்பனையாளர் தயாரிப்பின் முக்கியமான அம்சங்கள் அல்லது பண்புக்கூறுகள் மற்றும் நன்மைகளை குறிப்பிடலாம் அல்லது முன்னிலைப்படுத்தலாம். வாங்குதலுக்குப் பிந்தைய முரண்பாட்டின் உயர் மட்டமானது, நுகர்வோர் தயாரிப்பு பயன்பாட்டிலிருந்து பெறும் திருப்தியின் மட்டத்துடன் எதிர்மறையாக தொடர்புடையது.




தேவைகள் மற்றும் ஆசைகள் ஆகியவை மார்க்கெட்டிங்கில் மூன்று முக்கியமான சொற்கள். அவை எவ்வளவு ஒத்ததாகத் தோன்றினாலும், இந்த விதிமுறைகளில் அதிக வேறுபாடுகள் உள்ளன மற்றும் புரிந்துகொள்வது சிக்கலானது. அவற்றில் பல அடுக்குகள் உள்ளன, மேலும் அவை ஒரு பிராண்டிற்கான பிரிவு, இலக்கு மற்றும் நிலைப்படுத்துதல் ஆகியவற்றின் முடிவை எடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

ஆனால் ஆசைகளைக் குறைக்கலாம். உணவு, தண்ணீர், சுத்தமான காற்று, தங்குமிடம் போன்றவை மனிதத் தேவைகள். ஆனால் ஆசைகள் வரம்பற்றவை. மனம் ஒரு குறிப்பிட்ட ரசனையுடன் ஒரு குறிப்பிட்ட வகையை விரும்பும். அதுதான் ஆசை. ஆசைகளெல்லாம் தேவைகள் அல்ல என்பதை உணர்ந்து வாழ்வோம்.

# தமிழ் 2023

நற்றமிழரின் நாடித்துடிப்பு

## JANUARY




## FEBRUARY




## MARCH




## APRIL




## MAY




## JUNE




## JULY

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

## AUGUST

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

## SEPTEMBER

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | | |

## OCTOBER

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | | | | | | |

## NOVEMBER

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |


## DECEMBER

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com




Email: editor@ithamil.com


VARSHA™
IDLI/DOSA BATTER
Eat Fresh!
Eat the Best!!!
VARSHA
Traditional taste that Lingers
1Kg
VARSHA
VARSHA